
# கடவுள் நம் தேசத்தில்  உள்ளார்



**எழுத்தாளன்**

PUTLI TRUST, Chennai, Tamil Nadu, India.

Other literary works of the author and their pivot points

***1. Siva Gnana Bodham - Sasthra***

This is an interpretation of a Saiva Sasthra (Sasthra - scripture based on wisdom), Siva Gnana Bodham.

***2. Siva Puranam - Sthothra***

This is an interpretation of a Saiva Sthothra (Sthothra – Devotional scripture), Siva Puranam.

***3. A bon voyage - Matra***

This work is a testing scale of the divinity that exists within a layman (and within everyone). Matra means 'a testing standard'.

***4. Glimpses of Light - Netra***

This work emerged from the views of spiritual eye or perceptions. Netra means eye.

***5. Thus Spake India - Hothra***

Hothra means a religious ritual done before the fire. This work is a spirited religious ritual done before the fire of Unbeaten Truth.

***6. India - Soothra***

This work holds some intricate explanations and spiritual equations from the Indian philosophy, in simple terms. Soothra means equations.

***7. Layman's notches - Patra***

This work is about what a layman can understand and work on philosophy, Indian philosophy to be more precise. It also talks about some social and political issues.

***8. Journey of life - Yatra***

Yatra means the journey with a destination point. Our life should also be a Yatra – a journey towards a specific destination. When we come across the milestones of right understanding, we can be sure that we are on the right way. This work deals about such right understandings of life.

***9. Moral Tablet - Mithra***

This is just like a friend – a true friend, giving valuable and simple advice or morals which would fit all humans for all times.

***10. On the way - Gothra***

This is the author's autobiography. It will be in accordance with the social and religious backgrounds of India. Still, the lessons that appear in this work are common to all.

© All rights reserved, Edition: 2019

# ஆசிரியர் முன்னுரை:

தெய்வீக அன்னையே போற்றி ! சத்குரு நாதனே போற்றி !

நான் தமிழ்நாட்டில் வசிப்பவன். நான் அடிப்படையில் ஓர் எழுத்தாளன் இல்லை. ஆனால் சில அடிப்படைக் கருத்துக்களைச் சொல்வதற்காக எழுத்தாளனாக மாற்றப்பட்டுள்ளேன்.

இனி, இந்நூலின் மையக் கருத்துக்கு வருவோம்.

**"ஒவ்வொருவருடைய இறை இயல்பினையும், சமயத்தின் உண்மையான நோக்கினையும், பண்பாட்டின் உன்னதமான பணியினையும், இவையனைத்தையும் ஒருங்கே பெற்ற இந்தியாவின் தனித்துவத்தையும் எடுத்து இயம்பும் முகத்தான் இந்நூல் இறைச் சித்தத்தின்படி எழுதப் பெற்றுள்ளது."**

இந்த நூலின் நோக்கம் எளிமையானது. அந்த நோக்கத்திற்கான வழிமுறைகளும் எளிமையானவை. ஆனால் அதன் பலன் விலைமதிப்பற்றது, நிரந்தரமானது. இங்கு நம்மில் பலர் எளிமையை தேர்ந்தெடுப்பதில்லை, சிக்கல்களால் பின்னப்பட்ட வாழ்க்கை முறைகளில் உழன்று, அற்பமான மற்றும் குறுகிய சுகங்களுக்காக நம் வாழ்நாட்களில் பெரும்பானவற்றை வீணடித்துக் கொண்டிருக்கிறோம். ஒரு கதை உண்டு: ஒரு தவசீலர் ஒரு ஆன்மீக குருவை சந்திக்கிறார். அந்த குருவிடம் சொல்கிறார்: " நான் பல வருடங்கள் கடும் தவம் புரிந்து சிறப்பானதொரு சக்தியைப் பெற்றுள்ளேன்". குரு வினவுகிறார் : "என்ன அது?". அந்த தவமுனி தன் பதிலை செயல் மூலமாகவே காட்டுகிறார். அருகில் இருக்கும் ஓர் ஓடையில் இறங்கி இக்கரையிலிருந்து மறு கரைக்குச் சென்று மீண்டும் இக்கரைக்கே வருகிறார் - தண்ணீர் மேல் நடந்தபடி. பெருமையுடன் குருவை நோக்கிச் சொல்கிறார் : "பார்த்தீர்களா?"

இதைக் கண்ட குருவானவர் அந்த சித்து முனிவர் குறித்து மிகவும் பரிதாபப்பட்டார். அவர் கூறுகிறார்: “ஓ முனிவரே! இத்தனை ஆண்டுகள் தவம் புரிந்து இதைத்தான் கற்றீர்களா? ஒரு கரையிலிருந்து மறுகரைக்குச் செல்லும் இச்செயலை, ஓர் ஓடைக்காரன் உதவியுடன் ஐந்தே நிமிடத்தில் யாராலும் செய்து விடமுடியும்.”

நம் வாழ்க்கையிலும் நாம் இதைத்தான் செய்து கொண்டிருக்கிறோம். நாம் நமது விலைமதிப்பற்ற நேரத்தையும் , சக்திகளையும் அற்ப விஷயங்கள் பொருட்டு செலவழித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்நூல், நமது எளிய வாழ்வியல் இலக்குகளை நியாபகப்படுத்துவதற்காக இயற்றப்பட்டுள்ளது. **இந்த நூல் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. இரண்டாவது பகுதி என்னுடைய பிற நூல்களில் இருந்து சில மேற்கோள்களைப் பெற்றுள்ளது.** 2001 - ஆம் ஆண்டிலேயே இந்நூல் இயற்றப்பட்டாலும், இது வெளிச்சத்துக்கு வர நெடிய ஆண்டுகள் தேவைப்பட்டன. எனது தாயார் அறிவுறுத்தியிருந்தார்: “இச்செய்தியை பரப்புவதற்கு அவரசப்படாதே. நல்ல தருணத்திற்காகவும், உகந்த இடத்திற்காகவும், உற்ற சபைக்காகவும் நீ காத்திருந்தே ஆக வேண்டும்.” என் தாயார் குறிப்பிட்ட இவையணைத்தும் கூடி வந்திருப்பதாகவே நான் இப்பொழுது எண்ணுகிறேன்.

இந்த இலக்கை நிர்ணயித்தது இறைவனே. அதை முடிப்பதற்கான நபர்களை அனுப்பியதும் இறைவனே. அவர்களுக்குண்டான அரங்கத்தை கொடுப்பதும் இறைவனே. என் தாயார் சொன்னது: “உன்னுடைய பரப்புரை, ஒரு பெருங்கூட்டத்திற்கு முன்பாகத்தான் எப்போதும் நடைபெற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பகவத்கீதை அதை கருத்துடன் கவனித்த அர்ஜூனன் என்னும் ஒருவருக்கு மட்டுமே நேரிடையாக போதிக்கப்பட்டது. இப்போது கீதை உலகத்தின் எல்லா எல்லைகளையும் எட்டியுள்ளது”. நான் இந்நூலை வாசிக்கும் அனைவரையும் அர்ஜூனர்களாகப் பார்க்கிறேன். இதற்குப் பொருள் ‘நான் பார்த்தன்’ என்பதல்ல. நானும் உங்களைப் போல் ஓர் அர்ஜூனன் தான். நம்மனைவருக்கும் ஒரே ஆசான் கடவுளே ஆவார். இந்நூலின் பொருளினை, மையக்

கருத்தினை வெளிப்படுத்தும் பணியில் இங்குள்ள அனைவருக்கும் பங்குள்ளது. இறைவன் நம் ஒவ்வொருவரையும் அவரவருக்குரிய முறையில் வழிநடத்துவாராக.

எனது ஆத்ம குருநாதர் ஸ்ரீ பரமஹன்ச யோகானந்தரின் கீழ்க்காணும் கூற்றை மேற்கோள் காட்ட இதுவே சரியான தருணம்.

“ஒவ்வொரு மனிதனும் தனித்தன்மை வாய்ந்தவன். கொஞ்சமும் வேறுபாடு இன்றி ஒரே மாதிரியாக இருவர் இருப்பது என்பது இயலாத ஒன்று. உன்னைக் குறித்து இவ்வாறாக எண்ணிக்கொள். ‘என்னுடைய ஆளுமை கடவுளின் பரிசு. என்னைப் போல் வேறு எவரும் இங்கில்லை. எனது தெய்வீகத் தனித்தன்மை குறித்து நான் மிகவும் பெருமைப் படுகிறேன். நான் என்னை மேம்படுத்திக்கொண்டு, நற்குணங்களின் ஆளுமையை வெளிப்படுத்துவேன்’. நீ உன்னுடைய பங்கினை சிறப்பாக செய்வாயானால் ஓர் அரசன் அல்லது ஓர் அரசியின் பங்கசைச் செய்யும் ஆத்மாவுக்கு நீ நிகரானவன் (அவர்களைவிட நீ எந்த விதத்திலும் குறைந்தவன் அல்ல). நீ உன்னுடைய பங்கினை சரியாக செய்து வரும் வரைக்கும், நீ அனைவரின் கவனத்தையும் கவரக் கூடியவனாக, அனைவராலும் அன்பு பாராட்டப்படுபவனாக இருப்பாய். நன்கு செயல்படுத்தப்பட்ட உனது பங்கே, கடவுளுக்கான உனது கடவுச்சீட்டு.”

திருச்சிற்றம்பலம்

# வாழ்த்துரை

நூலாசிரியர் என் னூடயை நெடுநாளைய அன்பர் என்பதாலும், சிவநெறி உணர்ந்த செல்வர் என்பதாலும், அவரின் ஆன்மீக கருத்துக்கள் உலகளாவ பரவ நான் வாழ்த்துகின்றேன்.

2018 ஆம் ஆண்டு அங்கோர்வாட் உலகத் தமிழர் மாநாட்டில் இந்நூல் வெளியிடப்பட்டாலும், இனம், மொழி, சமயம், பிற வேறுபாடுகள் யாவும் கடந்து மனித குலம் அனைத்திற்கும் பொதுவான ஒரு செய்தியை இந்நூல் தன்னுள் பொதிந்துள்ளது. இறைவன் எல்லோர் உள்ளும் உள்ளார் என்பதே அது. இது பலரும் அறிந்த செய்திதான் என்றாலும், இந்நூலில் அச்செய்தி புதுமையுடனும், நடைமுறை வழிகாட்டுதல்களுடனும், நமது தொன்மை பாரம்பரியத்துடனும் துலங்குகிறது.

ஆயுதங்களாலும், பிற அறிவியல் நுட்பங்களாலும் உலக அமைதியை மீட்டுத்தர முடியாது. இது போன்ற நூல்களால் தான், தனி மனித அமைதி தோற்றுவிக்கப்பட்டு, அதன் மூலம் உலக அமைதியும், சமாதானமும் ஒரளவுக்கு நிலைபெற சாத்தியக் கூறுகள் விதைக்கப்படுகின்றன. அந்த அளவில் இந்நூல் ஆசிரியர் தன் நோக்கத்தை முழுமையாக உணர்ந்து, அதை செவ்வனே முதிர்ச்சியுடன் வெளிப்படுத்தி உள்ளார்.

“தென்னாடுடைய சிவனே போற்றி !

எந்நாட்டவர்க்கும் இறவைா போற்றி !”

எனும் வரிகளில் அவர் சைவ நெறியை யோக முறையில் உணர்த்தியுள்ளார். சிவன் தென்னவன், முன்னவன் என அறியப்பட்டாலும், அவன் எல்லோருக்கும் பொதுவானவன் என்னும் கருத்து இரண்டாம் வரியில் உள்ளது. அந்த சிவநெறியை உலகளாவ பரப்புதல் நம் கடமை என்பதும் அதில் மறைந்துள்ளது.

> "வான்முகில் வழாது பெய்க: மலிவளம் சுரக்க: மன்னன்
> கோன்முறை அரசு செய்க: குறைவிலாது உயிர்கள் வாழ்க:
> நான்மறை அறங்கள் ஓங்க: நற்றவம் வேள்வி மல்க:
> மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்"

என்னும் செய்யுளின் கடைசி வரி இப்பரப்புரையை வலியுறுத்தியுள்ளது. உயிர்களிடத்து அன்பும், ஆத்ம ஞானமும் பெற்றிருத்தலே சிவநெறி - இறைநெறி என்பதை இந்நூல் ஆசிரியர் உணர்ந்துள்ளார். இந்நூலின் மொழியாக்கம் உட்பட்ட, அவருடைய ஆங்கில படைப்புக்கள் பத்தும், இந்நெறி பற்றியே அமைந்துள்ளன. இந்நெறியை, வழிபாட்டை, வழக்கினை அவர் உலக முழுவதும் பரப்புவார் என ஆசி கூறி, அவரை மனதாரப் பாராட்டுகின்றேன்.

முனைவர் மு. திருமேனி
முன்னாள் முதல்வர்,
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி
தஞ்சாவூர்

# பதிப்பகத்தார் குறிப்பு

இவர் ஓர் இளம் எழுத்தாளர். இளவயது முதலே உண்மையான ஆன்மீகத்திலும் , சீரிய சமூக கட்டமைப்பிலும் ஆர்வம் கொண்டவர். இது குறித்து பல நூல்களையும் படித்து, ஆய்ந்தவர். 'உண்மைத்தன்மை என்பது அனைவரிடத்துமே ஒரே மாதிரியாகவே உள்ளது. அதனின்றும் மனதளவில் நாம் பயணிக்கும் தூரம் தான் வெவ்வேறாக உள்ளது. எனவே தான், உண்மை குறித்த பார்வைகள் பலவிதமாகவும் நிலவுகின்றன. மனதின் தூரம் குறைந்து, முற்றிலும் கறைந்து விடும்போது, உண்மையும் நாமும் வேறு வேறு அல்ல என உணர்கிறோம்.' என்று தெளிந்தவர். 'சமயங்களால் குழப்பங்கள் ஏற்படுவதில்லை; அவற்றைத் தவறாக புரிந்து கொள்பவர்களால் தான் குழப்பங்கள் ஏற்படுகின்றன' என்று கூறுபவர். உண்மையான மதச்சார்பின்மையை ஆதரிப்பவர். ஸ்ரீ பரமஹன்ச யோகானந்தரின் போதனைகளில் ஈர்க்கப்பட்டு, அவருடைய யோகத சத்சங்க சமூகத்தில் (Yogoda Satsanga Society of India - YSS) தீக்ஷை பெற்றவர்.

பத்துக்கும் மேற்பட்ட நூல்கள் தமிழிலும், ஆங்கிலத்தில் படைத்திருந்தாலும், இவர் முன்னிலைப்படுத்துவது 'God is in our land' எனும் நூலையும், அதன் பிற மொழியாக்கங்களையும் தான். இந்நூலை, YSS - ஐ சார்ந்த ஸ்ரீ அமரானந்தகிரி ஸ்வாமிகள், ஹிமாச்சல பிரதேசத்தில் உள்ள சோலன் எனும் இடத்தில் 19/9/2017 அன்று நடைபெற்ற, YSS-ன் நூற்றாண்டு விழா கூட்டத்தில் தன் மடியில் வைத்திருந்ததை, தன் குரு நாதரின் ஆசியாகவும், இந்நூலுக்கு இவ்வுலகத்தில் அளிக்கப்பட மிக உயரிய கவுரவமாகவும் இவர் கருதுகிறார்.

தம் தாய் மொழியாம் தமிழில் இவரே இந்நூலை மொழிபெயர்த்துள்ளார். 'கடவுள் நம் தேசத்தில் உள்ளார்' எனும் இந்நூல், 2018 - ஆம் ஆண்டு கம்போடியாவில் நடைபெற்ற உலகத்தமிழர் மாநாட்டில் வெளியிடப்பட்டது. இந்நூர்த்தலைப்பில் உள்ள 'தேசம்' எனும் சொல், எந்த ஒரு பௌதிகப் பிரதேசத்தையும் குறிப்பிடவில்லை; அச்சொல் குறிப்பது நம் அனைவரினுள்ளும் அனுபவமாய்ச் சித்திக்கும் இறைவன் குறித்த உள்ளுணர்வைத்தான்.

இவர் ஓர் இல்லறவாசி; எளிமையானவர். 'கடமையைச் செய் - பலனை எதிர்பாராதே' எனும் நெறியை இயல்பாக செயல்படுத்த முனைபவர். ஆனால், இவருக்கும் சில எதிர்பார்ப்புகள் உண்டு. ஒற்றுமை உணர்வு மிக்க, பண்பாடு தொலையாத, இயற்கைவளம் குன்றாத, வன்மங்களற்ற, ஊழல்களற்ற பாரதத்தையும், உலகையும் காண விரும்புபவர். உலக அமைதியை சுய உதாரணம் மூலம் போதிக்கும் தேசமாக இந்தியா விளங்க வேண்டும் என்று ஆசைப்படுபவர். 'தத்தம் சமயத்தை உண்மையாய் ஒழுகுவதன் மூலம், அகத்தூய்மை எய்தி, மொழி-இன-மத பேதம் கடந்த ஆன்ம இணக்கத்தை அறியலாம். அனைவருக்கும் பொதுவான ஆன்ம இணக்கத்தாலும், அன்பாலும், உள் அமைதி பெற்று, உலக அமைதியையும் ஊக்குவிக்கலாம். இது சாத்தியமே,' என்று திடமாக நம்புபவர். இது பற்றியே, இவர் 20 ஆண்டுகளாக எழுதியுள்ள நூல்கள், பல்வேறு பரிமாணங்களிலும், பரிணாமங்களிலும் பேசுகின்றன. அனைவருக்கும் பொதுவானவையாக உள்ள ஒழுக்கங்களின் சுருக்க வடிவமென, இவர் குறிப்பிடும் 'வாழ்நெறி மாத்திரை' ஆனது, தனி நபர்களிடையே அமைதியை நிலை நாட்டுவதற்கும், அதன் மூலம் உலக அமைதியை உறுதிபெறச் செய்யும் நோக்கத்திற்கும் துணை நிற்கிறது.

- பதிப்பகத்தார்

# பொருளடக்கம்

பக்கம்

## முதல் பாகம்


| | |
|---|---|
| திருவண்ணாமலை | 11 |
| "கடவுள் நம் தேசத்தில் உள்ளார்" ஒரு அடிப்படை விசாரணை | 14 |
| சாஸ்திரங்களில் கடவுள் | 20 |
| கடவுள் நம் தேசத்தில் உள்ளார் | 25 |
| மனித ஜீவனில் இறைவன் | 29 |
| கோயில்கள் | 34 |
| சமயங்களின் நோக்கம் | 43 |
| கடவுளை எப்படிக் காண்பது? | 54 |
| இந்தியாவும், இந்த செய்தியும் | 58 |


## இரண்டாம் பாகம்


| | |
|---|---|
| இந்தியாவைப் பற்றிய உண்மைகள் | 65 |
| இந்தியாவின் பங்கு - மீளப்பெறல் | 75 |
| இந்த காலகட்டத்தின் தேவை | 83 |
| இயற்கையுடன் இணக்கமான வாழ்வு | 90 |
| கடவுள் நம் தேசத்தில் உள்ளார் எனும் செய்தியை பரப்புங்கள் | 94 |

**முதல் பாகம்**

## திருவண்ணாமலை

**(ஜன 12, 2001 – ஜன 15, 2001):**

**இந்த ஆண்டு, திருவண்ணாமலைக்குச் செல்ல வேண்டும் என்ற தூண்டுதலை தீவிரமாக உணர்ந்தேன். ஒரு விஷக் காய்ச்சலில் இருந்தும், சில மனரீதியான தடங்கல்களிலிருந்தும் அப்போதுதான் விடுபட்டிருந்தேன்.**

**12ம் நாள் நடைசாத்தும் நேரத்தில் சுவாமியின் தரிசனம் பெற்றேன். மறுநாள் காலை பகவான் ரமணரின் ஆஸ்ரமத்துக்குச் சென்றேன். பகவான் ரமணர், ஆத்ம விசாரத்தின் மூலம் இறைவனை அறிந்தவர். இங்கு ஆத்ம தேடல் உள்ள வெளிநாட்டவரையும் காணலாம். பின்பு 14 கி.மீ. சுற்றளவு கொண்ட, 5 மணி நேரம் நீடித்த கிரிவலத்தை மேற்கொண்டேன். அடுத்த நாள் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் பொங்கல் திருநாள். பொங்கலன்று மலை ஏற முற்பட்டேன். மலை ஏறும் வழியில், ஒரு சாமியாரின் சிறிய ஆசிரமத்தில் பொங்கல் பூஜையில் கலந்து கொண்டு, சர்க்கரைப் பொங்கல் உண்டேன். அந்தச் சாமியார், என்னை மறுநாள் வரையில் திருவண்ணாமலையில் இருக்குமாறு அறிவுறுத்தினார். மறுநாள் மிக முக்கியமான திருவிழா நடக்க விருப்பதாகவும், அதில் பங்கேற்பவர்கள் பிறப்பு, இறப்பு கட்டிலிருந்து விடுபடுவர் என்றும் அவர் கூறினார்.**

**இத்திருத்தலத்துக்கு வரும் பக்தர்களில் கணிசமான பேர் உள்ளுணர்வினாலோ அல்லது ஏதாவது ஒரு ஆணையின் பேரிலோ வருகிறார்கள். சிலர் இத்தலத்திலேயே நிரந்தரமாக தங்கியும் விடுகிறார்கள். இதற்கு உதாரணமாக, இந்த காலகட்டத்தைச் சேர்ந்த ஞானிகளைக் குறிப்பிட வேண்டுமானால்,**

பகவான் ரமணார், சேஷாத்திரி சுவாமிகள் மற்றும் யோகி ராம்சுரத்குமார் ஆகியோரைக் கூறலாம். இறைவனின் மேன்மையை உணர்த்தும் பொருட்டு ஆன்மீக மகாத்மியங்கள் இத்திருத்தலத்தில் நடந்த வண்ணம் இருக்கின்றன.

திருவண்ணாமலை புலனறிவிற்கு புலப்படாத விஷயங்கள் பொதிந்தது. இமாசல மலைகளையும் விட பழமையானது (சுமார் 200 கோடி ஆண்டுகளுக்கும் மேலான பழமையானது.) பல வெளியிடப்படாத ரகசியங்களை உள்ளடக்கியது.

1949 ஜனவாியில் டில்லியில் நடந்த இந்திய அறிவியல் குழுவில் (Indian Science Council) உலகிலேயே பழமையான மலை திருவண்ணாமலை என்று முன்மொழியப்பட்டது. அறிவியலார் ஒரு காலத்தில் இம்மலை நெருப்பு பிழம்பாக இருந்திருக்கக்கூடும் என்று தெரிவிக்கின்றனர்.

இத்திருத்தலக் கோயில் அக்னி தத்துவத்தைக் குறிப்பதாக உள்ளது. இதைப்போலவே, பஞ்ச பூதங்களின் மற்றைய தத்துவங்களான ஆகாயம், காற்று, நீர் மற்றும் பூமி ஆகியவற்றுக்கும் தனியான கோயில்கள் இந்நாட்டில் உண்டு. இது இந்தியர்களின் நம்பிக்கை - உலகத்தாரின் நம்பிக்கை என்று கூட சொல்லலாம். ஏனெனில், உலகத்தின் பல பாகங்களிலிருந்தும், மக்கள் இங்கு வந்து இந்த மலையையும், கோயிலையும் மற்றைய ஆசிரமங்களையும் தரிசிக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும், கார்த்திகை மாதத்தின் பௌர்ணமியன்று, மிகப்பெரிய ஒளிப்பிழம்பு இம்மலையின் உச்சியில் ஏற்றப்படும். பல இலட்சம் பேர் பங்கு பெறும் இத்திருவிழா இத்தலத்தின் மிக முக்கியமான விழாவாகும்.

சாமியாரின் அறிவுரைப்படி, திருவண்ணாமலையில் என்னுடைய இருப்பை மேலும் ஒரு நாள் நீட்டித்தேன்; அன்றைய தினத்தை கோயிலுனுள்ளேயே கழிக்க தீர்மானித்தேன். கோயிலுக்குச் சென்றேன். இப்பொழுது கோயிலினுள் மக்கள் கூட்டம் முந்தைய

நாட்களைவிட அதிகமாக இருந்தது. வானக்கூரையின் கீழ் அதிகாலை 3.00 மணி வரைக்கும் நன்கு உறங்கினேன். கோயிலில் ரம்மியமான விசேஷ பூஜைகள் அதிகாலை 3.00 மணிக்கே துவங்கிவிட்டிருந்தன. அப்பூஜைகள் காலை 8.00 மணி வரைக்கும் தொடர்ந்தன. அங்கிருப்பவர்களால் மட்டுமே வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட அந்த நிலையை உணரமுடியும். கூட்டம் அதிகமாக இருந்தாலும், அனைவரும் அனைவருடைய இருப்பு நிலையையும் விருப்பத்துடன் ஏற்று மகிழ்ந்திருந்தனர். அதுதான் பெருமானும், அம்பாளும் தங்கள் பக்தன் சுந்தரமூர்த்தி நாயனாருடன் சேர்ந்து திருவண்ணாமலை வீதிகளில் வலம் வரும் நாள்.

அந்த நடமாடும் விக்கிரகங்களின் முகங்களில் பிரகாசித்த பேருவகை (அந்த ஐம்பொன் சிலைகள் உண்மையிலேயே நடமாடின- அவற்றை சுமந்திருந்தவர்கள் நடமாடியதால்), வர்ணனைக்கு எட்டாத ஆடை அலங்காரங்கள், பிரம்மதாளங்கள், இதர மேள தாளங்கள்- இவையனைத்தும், அனைவரையும் ஆனந்தத்தின் எல்லைக்கு இட்டுச் சென்றன. பிறகு 9.00 மணி வாக்கில் கோயிலைவிட்டு வெளியே வந்தேன். எனது திரும்பு பயணத்தை துவங்கினேன். உண்மையிலேயே நான் என் வாழ்வில் ஒரு திருப்பத்தை உணர்ந்தேன். ஒரு சிறிய குடிசை சிற்றுண்டி சாலையில் என் காலை உணவை முடித்துக் கொண்டேன். அந்த குடிசையின் சுவர் ஒன்றில் அழகான நீர்வீழ்ச்சியின் பிம்பத்தை ஏந்திய படம் ஒன்றைக் கண்டேன். அதில் கீழ்காணும் வாசகம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது:

**” கடவுள் நம் தேசத்தில் உள்ளார் எனும் செய்தியை பரப்புவாயாக”**
**(Spread the news that God is in our land)**

## “கடவுள் நம் தேசத்தில் உள்ளார்” - ஒரு அடிப்படை விசாரணை:

அந்த வாக்கியம், நான் வீடு திரும்பும் வரையிலும் அதற்குப்பின்பும் கூட என்னுள் ஒலித்துக் கொண்டிருந்தது. அது எனக்காகவே கொடுக்கப்பட்ட ஒரு செய்தியாகத் தோன்றியது. உணர்வுப்பூர்வமான ஒரு விசேஷ விழாவை ஒட்டி என் கண்களில் பட்ட அந்த வாக்கியம், மிகவும் உட்பொருள் கொண்டதாய் எனக்குப் பட்டது. அது எனக்கு இடப்பட்ட ஒரு முக்கியமான வேலை என்று தெரிந்தது. ஆனால் எப்படி? நான் ஆத்மஞானம் பெற்றவன் அல்லன். நானோ சாமானியன். நான் இதை எப்படி செய்யப்போகிறேன்? நான் ஏன் இதை செய்ய வேண்டும்? எந்த வழியும் எனக்குப் புலப்படாமல் இருந்தது. என்னுடைய உடல்நிலையும், மனநிலையும் என்னை எந்த வேலையும் செய்யவிடாமல் தடுத்தன. சதுரங்க விளையாட்டில் ”செக்மேட்” என்று சொல்வதைப் போல, நான் எந்தப் பக்கமும் நகர முடியாதபடிக்கு வீட்டில் சிறை வைக்கப்பட்டேன். பின்னர், உள்ளுக்குள் ஒலித்துக் கொண்டிருக்கும் அந்த கட்டளைக்கு ஒரு விடை சொல்லாமல், என்னால் எதுவும் செய்ய முடியாது என்பதைப் புரிந்து கொண்டேன். அந்த வாக்கியம் ஒலித்துக் கொண்டே இருந்தது. அதை நடைமுறைப்படுத்துவதற்கான எந்த சாத்தியக்கூறுகளும் என்னிடம் இல்லாதிருந்தபோதும், அந்த உள்ஒலியை நான் எனக்குள் அனுமதித்தேன், அனுபவித்தேன்.

எனக்கு கடவுளைப் பற்றி எதுவுமே தெரியாது என்று நான் சொன்னால் அது உண்மையாக இருக்காது. நாம் எல்லோருமே, “கடவுள் என்று ஒருவர் இல்லை” என்று சொல்பவர்கள் உட்பட, கடவுளைப் பற்றிய ஏதோ ஒரு கருத்தை நேர்மறையாகவோ

அல்லது வேறுவிதத்திலோ கொண்டுள்ளோம். எனவே, இறைவனைப் பற்றிய ஆய்வில் இதய பூர்வமாய் ஈடுபட முடிவு செய்தேன். நமது சாஸ்திரங்களின் உதவியுடனும், ஞானிகளின் ஆசிகளுடனும், திருவண்ணாமலையில் எனக்குக் கொடுக்கப்பட்ட நம்பிக்கையுடனும் இந்தப் பணியில் இறங்க முற்பட்டுள்ளேன்.

கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளார் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. எந்த பௌதீக எல்லைக்குள்ளும் கட்டுப்பட்டவர் அல்லர் இறைவன். ஈஷா உபநிடத்தின் ஒரு வாக்கியத்தை இங்கு மேற்கோள் காட்டுவது பொருத்தமாக இருக்கும். "மொத்த பிரபஞ்சமும் இறைவனுடையது. அதன் ஒவ்வொரு நுண்ணிய துகளிலும் இறைவன் உறைந்துள்ளார். (நமது இருப்புநிலை உள்பட)" எனவே திருவண்ணாமலையில் கண்ட வாக்கியத்தில் உள்ள "நமது தேசத்தில்" என்பது எந்த ஒரு நாட்டையும் குறிப்பது அல்ல; அது நமது மொத்த மனித சமுதாயத்தையும் குறிப்பதாகும்; அனைவருக்கும் பொதுவானதாகும்.

இருப்பினும், வரலாற்றை பார்க்கும்போது, ஆன்மீக இயலில் இந்தியா ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. அப்படி இங்கே என்ன தான் விசேஷமாக உள்ளது?

கடவுள், முக்தி போன்ற வார்த்தைகள், ஒவ்வொருவருடைய தனித்தன்மையைப் பொறுத்தவை. "நம்புபவர்களுக்கு எந்த விளக்குமும் தேவையில்லை. நம்பாதவர்களுக்கு எந்த விளக்குமும் இல்லை."

நான் இந்திய நாட்டில் உள்ள சில குறிப்பிட்ட ஆன்மீக தலங்களுக்கு செல்ல திட்டம் தீட்டினேன். சுற்றுலாத் துறையின் ஏற்பாட்டில் நடத்தப்படும் சுற்றுலா திட்டங்களை உபயோகிக்கத் தீர்மானித்தேன்.

மறுபடியும், பிப்ரவரி 20ம் நாள், சில நண்பர்களுடன் திருவண்ணாமலைக்குச் சென்றேன். கோயிலைச்

சுற்றியுள்ள இடங்களைத் தரிசித்துவிட்டு, மஹாசிவராத்திரி அன்று இரவு கோயிலின் உள்ளேயே தங்கினோம். இந்த முறை கோயிலில் எழுதப்பட்டிருந்த "உள்ளம் பெருங்கோயில்" எனும் பாடல் மூலம் கீழ்காணும் பாடத்தைத் தெரிந்து கொண்டேன். "நமது இதயமே இறைவன் இருக்கும் கோயில். கள்ளத்தனமுடைய புலன்களை வென்றுவிட்டால், இறைவனை நாம் அங்கே காணலாம்." இறைவன் அனைவரிடத்திலும் உள்ளார் எனும் கருத்தை அப்பாடல் பொதிந்துள்ளது. இந்த தேகமே, கடவுள் இருக்கும் தேசம்தான்.

நான் எனக்கிட்ட பணியைச் செய்ய ஒரு ஆரம்பம் கிடைத்ததால் நம்பிக்கை பெற்றேன். சிறிது நாட்கள் கழித்து, ஒரு மாலை நேரத்தில் எனது வீட்டின் மேல் தளத்திற்கு சென்று, வெட்ட வெளியில் வானத்தைப் பார்த்தவாறு படுத்திருந்தேன். ஓய்வு நாட்களில் இவ்வாறு செய்வதுண்டு. மாலை நேர நீலவானம் இருண்டு கருக்கும் வரையில் அதைப் பார்த்தவாறு இருப்பேன். மேல்வானத்தில் ஒரு நட்சத்திரம் முளைக்கும். எனது முகத்துக்கு நேர் மேலே இன்னொன்று தெரியும். தலையைச் சற்றே பின்னால் சாய்த்து பார்க்கும்போது இன்னுமொரு சுடர் தெரியும். ஒரு அமைதியான சமுத்திரத்தில், இரவில் ஒளிகாட்ட, ஆங்காங்கே நிற்கும் கப்பல்களைப் போல் அக்காட்சி தோற்றமளிக்கும். தென்றல் காற்று இனிமையைக் கூட்டும். கடவுள் என்பது யார் அல்லது என்ன? நமது தேசம் என்பது என்ன? கவனத்துடன் மேலேழுந்தவாரியாக வந்த விளக்கங்களைத் தவிர்த்தேன்.

எப்போதும் மாறாத நிலை, உயர்வும் இல்லை, தாழ்வும் இல்லை, எந்த சஞ்சலமும் இல்லை. சாசுவதமான இறப்பற்ற நிலை, இறப்பை வென்ற எதுவுமே கடவுளாக அல்லது கடவுளின் அம்சமாக பார்க்கப்படுகிறது. கடவுளைக் குறித்த ஒரு சாமானியனின் விளக்கம் இதுவே. கடவுள் என்றால் - இறப்பற்ற நிலை, எல்லைகளில்லா நிலை.

உலகார்ந்த விஷயங்களை நான் இங்கே குறிப்பிடவில்லை. ஏனெனில் இறப்பில்லாதது, நிரந்தரமானது என்று எதுவும் இங்கில்லை. அந்த சூரியனும், விண்மீன்களும் அறிவியல் கணக்குகளின்படி ஒரு நாள் முடியப்போகின்றன அல்லது ஏற்கனவே முடிந்துவிட்டிருக்கின்றன. நான் இங்கே சாசுவதம் அல்லது நிரந்தரம் என்று சொல்வது பௌதீக மற்றும் கால எல்லைகளுக்கு அப்பாற்பட்டது. எனவே, இங்கு "நமது தேசம்" என்பது உள்ளுணர்வு சம்பந்தப்பட்டதாக, அனைத்தையும் தன்னுள்ளே அடக்கியிருக்கக்கூடிய ஒன்றாக பொருள்படுகிறது. இனி நமது செய்தியில், தேசம் என்னும் சொல் எந்த பௌதீகப் பகுதியையும் குறிக்கப்போவதில்லை. அப்படி செய்தால் அது பாரபட்ச செயலாய் அமையும். (ஆனால் இந்த விதிக்கு விளக்காக, இந்தியாவைப் பற்றி நான் பின்னர் சில இடங்களில் கூற நேர்ந்துள்ளது) இப்போது நமக்கு "கடவுள்" மற்றும் "நமது தேசம்" தெரிந்துவிட்டது. நமக்குள்ளே இருக்கும் சாசுவதத்தன்மை. இந்த நித்தியத்துவமே 'சத்தியம்' எனப்படுகிறது.

உள்ளார்ந்த சாசுவதத்தைப் பற்றிக் கூறும்போது, ஒரு பக்குவமற்ற மனிதனின் உணர்வுகளோடு அதைத் தொடர்புபடுத்த முடியாது. அந்த உணர்வுகள் சாசுவதமில்லாதவை. எனவே அவற்றை, அனைத்தையும் உள்ளடக்கியிருந்தாலும், அனைத்திலிருந்தும் சற்று எட்டத்திலேயே இருக்கும் உண்மையான சாசுவதத்தன்மையுடன் சேர்த்து வைத்துப் பார்க்க முடியாது. சாசுவதத்தன்மை என்பதே இங்கு அளவுகோள். எது எவ்வாறு மாறினாலும், இதற்கு முன்னால் இருந்த, இப்போது இருக்கின்ற, இனி மேலும் இருக்கப்போகின்ற சாசுவதத்தன்மை. சாஸ்திரங்களில், கடவுளின் இந்த அம்சத்தை உறுதி செய்து கொண்டேன். சாஸ்திரங்களில், கடவுளைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள மற்ற விஷயங்கள்: ஆனந்தமயமானவர், அன்பு மற்றும் ஞானம் மூலம் வெளிப்படுபவர், பரிசுத்தமானவர், ஒருமைத்தன்மையுள்ளவர், இருமைகளுக்கும, (இன்பம்-துன்பம், பிறப்பு- இறப்பு, இருள்-ஒளி, நன்மை-தீமை;

முதலானவை) முக்குணங்களுக்கும் (சத்வ, ரஜோ, தமோ குணங்கள்) அப்பாற்பட்டவர்.

சாஸ்திரங்கள், கடவுளை என்றும் புதியவர் அல்லது இளமையானவர் என்று குறிப்பிடுகின்றன. இறைவன் ஒரே நிலையினராய் இருந்தாலும், மாற்றங்களுக்கு உட்படாமல் இருப்பவராயிருந்தாலும், அவர் என்றும் புதுமையானவர். அவர் என்றும் புதியவர் என்று கூறப்படுவதற்கு பொருள், அவர் காலத்தால் கட்டுப்பட்டவர் அல்லர் என்பதாகும். அவர் இட, பொருள், காலங்களின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டவர்; அனைத்தையும் உள்ளடக்கி, அனைத்தினுள்ளும் ஊடுருவி இருப்பவர்; எப்போதும் புதுமையானவர். அவரை எந்த பெயரிலும் அழைக்கலாம். அவையனைத்தும் நித்தியமான ஒரே பொருளையே குறிக்கும்.

இந்த விளக்கம், என்னை என்னுடைய இந்திய சுற்றுலா திட்டத்தை கைவிடச் செய்தது; அடுத்து வருவதை இனி பார்ப்போம். ஆனால், ஒரு விஷயத்தை நான் சொல்லியே ஆக வேண்டும்.

ஒரு ஆன்மீக தலத்தைத் தரிசித்த பின்னரே நான் உள்முக ஆய்வு செய்ய ஒரு செய்தி கிட்டியது. இந்த பூமியில், இந்தியா மிகவும் விசேடமானது. எவ்வாறெனில், இங்கு நித்தியத்துவம் அல்லது இறைவன் ஒரு பரிச்சயமான, சாதாரணமான உயிரியக்கமாக உணரப்படுகிறது. இங்கு மக்கள் இறைவனை கண்களுக்குப் புலப்படாத, வானத்துக்கு அப்பால் உள்ள ஒரு புதிராக எண்ணுவதில்லை. பெரும்பாலோருக்கு கடவுள் வாழ்க்கையின் ஒரு பகுதி, கடவுளைத் தேடுதல் அல்லது உணருதல் என்பது இந்தியாவின் பாரம்பரியமான இயல்பாக இருந்து வந்து கொண்டிருக்கிறது. படைப்பின் எந்த கால கட்டத்திலும் இறைவனை உணர்ந்த ஒரு ஞானி இந்தியாவின் ஏதாவது ஒரு பகுதியில் இருந்தே வந்துள்ளார். இந்த இயல்பைப் பற்றி அறியாதவர்களும், இந்த இயல்பால் பாதிக்கப்படுகின்றனர்.

**இந்த மாறாத இயல்பே இந்தியாவின் தனித்தன்மையாகும். அதனால்தான் ஸ்ரீபரமஹன்ச யோகானந்தர் தனது பௌதீக உடலை துறக்கும் நேரத்தில், "எங்கு கங்கையும், இமாலய குகைகளும், மக்களும், கடவுளை எண்ணுகிறார்களோ அங்கு நான் ஆசிர்வதிக்கப்பட்டேன். எனது உடல் அந்த மண்ணைத் தொட்டுவிட்டது" என்று கூறினார்.**

## சாஸ்திரங்களில் கடவுள்:

போன அத்தியாயத்தில், கோயிலினுள் நான் கண்ட பாடல், பதிணெண் சித்தர்களில் ஒருவரான திருமூலரால் எழுதப்பட்டது. சித்தியை அடைந்தவர்கள் சித்தர்கள் ஆவர். ஒருவர் தன் உடல் சார்ந்த உணர்வுகளை வென்றவர் என்றால், அவர் சித்தர் எனப்படுகிறார். அத்தகையவர்கள் நீரின்மேல் நடப்பது, காற்றில் மிதப்பது, எந்த அளவுக்கேனும் பெரிதாக வடிவமெடுப்பது, அணுவிற்கும் அணுவாக சுருங்கிக்கொள்வது முதலான இதர பண்புகளையும் பெற்றிருப்பர். ஆனால், அவர்கள் அத்தகைய சக்திளை பிறரின் ஆன்ம விழிப்புணர்ச்சியின் பொருட்டே உபயோகித்திருக்கிறார்கள். அவர்கள் மிகவும் எளிமையானவர்களாக இருப்பவர்கள். உணவு, உறைவிடம், உடை முதலியவை குறித்தோ, தங்களின் பெயரைக் குறித்தோ கூட அவர்கள் சட்டை செய்வதில்லை. சித்தர்கள் எங்கு வேண்டுமானாலும், எந்த வடிவத்திலும் தோன்றக்கூடிய வல்லமை பெற்றவர்களாக கருதப்படுகிறார்கள். அவர்கள், மறைமுகமான உட்பொருள் அடங்கிய, சிலரால் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய செய்யுள்களை வழங்கியுள்ளார்கள். இச்செய்யுள்கள் அனைத்தும், கடவுள் அனைவரின் உள்ளேயும், உள் கடந்து இருக்கிறார் என்பதை உறுதி செய்பவையாக இருக்கின்றன. சித்தர்கள், நாம் இறைவனை நமக்குள் உணரவும், அவனைக் காணும் பொருட்டு கடுமையாக உழைக்கவும் தூண்டுகிறார்கள்.

ஒரு கதை உண்டு. ஒரு ஆன்மீக குரு, தனது சீடர்களுள் தகுதியுள்ள சிலரை, ஆத்ம ஞானத்துக்கான உயரிய பயிற்சிக்காக தேர்வு செய்து கொண்டிருந்தார். அந்த நாட்களில், மாணவர்கள் ஆசிரியரின் தனிப்பட்ட வழிமுறைகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்பயிற்சிகளில் தேர்ந்தவர்களே அடுத்த நிலைப் பயிற்சிக்குச்

செல்ல முடியும். அந்த ஆத்மஞான ஆசிரியர், தனது மாணவர்களுள் இருவரை அழைத்தார். ஒவ்வொருவரிடமும் ஒரு மாம்பழத்தைக் கொடுத்து அதை யாருக்கும் தெரியாத ஒரு இரகசிய இடத்தில் இருந்து கொண்டு சாப்பிடுமாறு கூறினார். முதல் மாணவன் ஆசிரமத்தை விட்டு வெளியே வந்ததும், ஒதுக்குப்புறமாக ஒரு குழியைக் கண்டான். அதனுள் குதித்து சுற்றுமுற்றும் நோக்கினான்.

தன்னை யாரும் கவனிக்கவில்லை என்பதை உறுதி செய்து கொண்ட பின், ஒரே நிமிடத்தில் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த மாம்பழத்தை உண்டு முடித்தான். பிறகு வெற்றிப் பெருமிதத்தோடு மேலே ஏறி, தனது குருவிடம் சென்று சொன்னான்; "குருவே, நான் யாரும் என்னைக் கவனிக்க முடியாத இடத்திற்கு சென்று, மாம்பழத்தை உண்டுவிட்டேன்". அந்த குரு எதுவும் பேசாமல் புன்னகைத்தார். இரண்டாமவனும் ஆசிரமத்துக்கு வெளியே வந்து ஏகாந்தமான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தான். அப்படிப்பட்ட ஒரு இடத்தை அவனால் காண முடியவில்லை. அவன் காட்டின் உட்புறத்திற்குச் சென்றான். ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து கொண்டு தன்னை யாரும் கவனிக்கவில்லை என்று தீர்மானிக்க எத்தனித்தான். ஆனால் அந்த மரமும், மற்ற ஜீவராசிகளும் தன்னைக் கண்டு கொண்டிருப்பதை உணர்ந்தான். இன்னும் உள்ளே செல்ல தீர்மானித்தான். சிறிது நேரம் கழித்து, மரங்களோ வேறு ஜீவராசிகளோ இல்லாத ஒரு இடத்தை அடைந்தான். மாம்பழத்தை உண்பதற்காக வாயருகே கொண்டு சென்றான். "நில், உன்னை யாரோ பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று அவனுள் ஏதோ உணர்த்தியது. அவன் அன்னாந்து பார்த்தான். வானமும், சூரியனும் அவனைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தன. மாம்பழத்தை மறைத்தவாறே, அக்காட்டின் மிக உட்புறத்திற்கு வந்தான். அங்கு இருண்ட ஒரு குகைக்குள் அடைக்கலமானான். அவன் உருவத்தையே அங்கு அவனால் பார்க்கமுடியவில்லை. அவ்வளவு இருட்டு. அவன் மாம்பழத்தை சுவைப்பதற்கு தயாரானான். "நான் இங்கேயேதான் இருக்கிறேன். நான் கூறுவது உனக்கு கேட்கவில்லையா?" என்று ஏதோ ஒன்று ஒலித்தது. அவன் யாருமே

இல்லாத ஒரு இடத்தை தன்னால் அறிய முடியாது என்று உணர்ந்தான். தனது குருவிடம் ஓடிச்சென்று அவர் பாதங்களில் விழுந்தான். "குருவே, என்னை யாரும் காணமுடியாத இடத்தை அறிய முயற்சித்தேன். என்னால் முடியவில்லை. நான் எங்கு சென்றாலும், எனக்கு மிகவும் நெருக்கமான ஒருவர், என்னை விடாது தொடர்ந்து வருவதாக உணர்கிறேன்".

ஆன்ம ஆசிரியர் புன்னகைத்தவாறே கூறினார்: "அடுத்த பயிற்சிக்கு நீ தேர்வு செய்யப்பட்டுள்ளாய்". கடவுள்பால் உண்மையான நம்பிக்கை உடையவன், தான் எப்போதும் கடவுளின் பார்வையிலேயே இருக்கிறோம் என்று உணர்கிறான். அவனைப் பொருத்தவரையில், கடவுள் எங்கும் வியாபித்திருப்பவர்.

சாஸ்திரங்கள் கூறுகின்றன: இந்த பௌதீகப் பிரபஞ்சம், ஐந்து அடிப்படை கூறுகளால் ஆனது. அவை: ஆகாயம், நெருப்பு, காற்று, நீர் மற்றும் நிலம். மனித உடலும், அதே ஐந்து கூறுகளால் ஆனது. ஆகாயம் (நமது உடலில் இருக்கும் வெற்றிடம்,) நெருப்பு (நமது உடலில் இருக்கும் சூடு), வாயு (நமது உடலில் இருக்கும் பலவித வாயுக்கள்), நீர் (இரத்தம் மற்றும் பிற அமிலங்கள்) மற்றும் நிலம் (எலும்புகளும், சதையும்). இந்த ஐந்து கூறுகளும், பிற சூட்சும கூறுகளும் மனதால் ஆளப்படுகின்றன. இந்த மனத்தையும் சேர்ந்து மற்ற எல்லாவற்றையும் இயக்குவது ஆத்மா. இந்த ஆத்மாதான் நமக்கு உள்ளேயும், வெளியேயும் உள்ளவற்றை இயக்குகிறது. இந்த ஆத்மா இருப்பதால்தான், நாம் நமது உடலையும், இந்த உலகத்தையும் உணர்கிறோம். ஆத்மா இல்லை எனில் இந்த உடலும் இல்லை. உலகமும் இல்லை. ஆத்மா எங்கும் வியாபித்திருப்பதாக (ஆகாயம் போல்), சாஸ்வதமானதாக, நிலையானதாக, பெயரோ-வடிவமோ அற்றதாக கூறப்படுகிறது. வேதங்கள் இந்த ஆத்மாவே கடவுள் என்று குறிப்பிடுகின்றன. இந்த ஆத்மா, தனது ஆனந்த மற்றும் சாந்த நிலையில் நித்தியமாய் நிலைப்பெற்றுள்ளது.

நமது இறுதியான குறிக்கோள். இந்த ஆத்மாவை உணர்வதே ஆகும். இதை உணரும் வரை துயரங்கள் நிறைந்த பிறப்பு-இறப்பு வலைக்குள், பல விதமான பிறப்புகளையும், இறப்புகளையும் நமது கர்மவினைக்கேற்ப அனுபவித்து வருகிறோம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. என்னை வழிநடத்தும் ஆத்மாவும், உன்னுள் இருக்கும் ஆத்மாவும் ஒன்றே ஆனதால், ஒரே தன்மையுடனிருப்பதால், உனது வலியை என்னால் உணரமுடியும்; நீ மகிழ்ச்சியாய் இருக்கும்போது, என்னால் புன்னகைக்கமுடியும். இதற்கு மாறாக அமைந்தால், நான் என்னைச் சுற்றி சுவர்கள் எழுப்பி வருகிறேன் என்று பொருள்; நான் கடவுளிடமிருந்து விலகிச் செல்கிறேன் என்று பொருள். இவ்வாறாக, வெளி உலகமும், உள் உலகமும் இணைக்கப்பட்டிருக்கின்றன. அதனால்தான் உபநிடதங்கள் பிறர் துன்பத்தைக் கண்டு தானும் துக்கிப்பவனே ஹிந்து (ஹிம்ஸாயாம், தூயதே யஸ; ஸ; ஹிந்துரி த்யபிதீயதே) என்று கூறி, ஹிந்து என்னும் சொல்லுக்கான பொருளை விளக்குகின்றன.

அத்வைதிகளின் கொள்கைப்படி, ஆத்மாவும், பரமாத்மாவும் (அ) இறைவனும் ஒன்றே. இறைவனின் அனைத்து குணநலன்களையும், ஆத்மாவும் பெற்றுள்ளது. இதை உணர முற்படுவதே மனித வாழ்க்கையின் அடிப்படை இலட்சியமாகும். ஆத்மா, இயல்பாகவே சூரியனைப் போல சுயம்பிரகாசமுடையது. மக்கள் ஆத்மாவை அல்லது அதன் பிரகாசத்தைப் பார்ப்பதாகச் சொல்கிறார்ககள். ஆனால் அதைப் பார்த்தல் என்பது இல்லை. ஏனென்றால், அதைத்தவிர இன்னொன்று இல்லை. அதற்கு அப்பால் என்று எதுவும் இல்லை. அது பார்ப்பதும் இல்லை; பார்க்கப்படுவதும் இல்லை. பார்ப்பதற்கென்றோ, நுகர்வதற்கென்றோ அதற்கு எந்த உறுப்புகளும் இல்லை. ஒரு குறிப்பிட்ட பணிக்காக ஒருங்கிணைக்கப்படும் எந்த பகுதியும் அதனிடம் இல்லை. இந்த பாடத்தைக் கூறுவது பிரஹதாரண்யகோபநிஷத்.

நாம், வேதங்கள் மற்றும் அதைச் சார்ந்த தத்துவங்களைப் பற்றி எதுவுமே தெரியாமல், தூய்மையான, வெளிப்படையான இதயத்துடன் மற்றவர்பால் அன்பு செலுத்துவோரைக் காண்கிறோம்.

சாஸ்திரங்களின் கூற்றுப்படி அவர்கள், உதட்டளவில் அனைத்து வேதங்களையும் பாராயணம் செய்துவிட்டு மனதளவில் தூய்மையும், அடக்கமும் இல்லாதவர்களைவிட, ஆத்ம சாக்ஷாத்காரத்துக்கு நெருக்கமானவர்கள். பணிவு இல்லாத அறிவு, ஆண்டவனுக்கான பாதையில், மிகக் கடுமையான எதிரியாகிய ஆணவம் என்னும் இரும்புச் சுவற்றை எழுப்புகிறது.

ஏற்றத்தாழ்வுகளைக் கடந்த எல்லையில்லா அமைதி நிலையை, நாம் நமக்குள் பெற்றுள்ளோம். போர்களும், வன்முறைச் செயல்களும், சுகாதார சீர்கேடுகளும் இந்த வெளி உலகத்தின் அமைதியைக் குலைப்பதுபோல், நமது பொருள் சார்ந்த காமம், பொறாமை, ஆணவம் முதலானவை நம் உள் அமைதியைக் கெடுக்கின்றன. மதம் சார்ந்த அமைப்புகள் இந்த இரு வகையான பிரச்சனைகளுக்கும் எதிராக செயல்படுகின்றன. எந்த ஒரு சமூக சீர்திருத்தம் அல்லது முன்னேற்றத்துக்கான முயற்சியும், அது இவ்விருவகை பிரச்சனைகளையும் எதிர் கொள்ளாத வரையில், தனது நோக்கத்தில் முழுமைபெறாது. மனிதனுடைய வாழ்க்கை நிலையற்றது. ஒருவன் மகிழ்ச்சி மட்டுமே நிறைந்தவனாக அல்லது துக்கம் மட்டுமே கொண்டவனாக இருந்துவிட முடியாது. மனிதனின் இறுதியான குறிக்கோள், இந்த இருமைகளிலிருந்து விடுபட்டு, சாசுவதமான அமைதியையும் ஆனந்தத்தையும் அடைவதே என்று உபநிடதங்கள் கூறுகின்றன. அந்த அமைதியான ஆலயத்தை நமக்குள் உணரும் வரை, நமது தேசத்துக்குள் உணரும் வரை, ஆத்ம விழிப்புணர்வுக்கான பயணத்தில் நாம் பல வாழ்க்கைகளைக் கடந்து செல்ல வேண்டியிருக்கும்.

## கடவுள் நம் தேசத்தில் உள்ளார்:

சில வருடங்களுக்குப் பின் அந்த வாசகத்தை, அதை எழுதியவரின் பெயரோடு சேர்த்துப் பார்க்க நேர்ந்தது. அது ஒரு பாடலின் வரி. அந்த முழுப் பாடலை, பின்னர் வலைத்தளத்தில் ஆங்கிலத்தில் பெற்றேன். அதன் தமிழ் மொழியாக்கம் பின்வருமாறு:

"நம் அன்பினால் அறிவார்கள், நாம் கிறித்துவர் என்று. ஆம், நம் அன்பினால் அறிவார்கள், நாம் கிறித்துவர் என்று. நாம் ஒற்றுமையுடன் கை கோர்த்துச் செல்வோம். நாம் ஒற்றுமையுடன் கை கோர்த்துச் செல்வோம். ஒன்றாய்ச் சொல்வோம் இந்த உலகிற்கு "கடவுள் நம் தேசத்தில் உள்ளார்" என்று". – பீட்டர் ஸ்கால்டிஸ்

பீட்டர் ஸ்கால்டிஸ் தனது சமூகத்தை "கடவுள் நம் தேசத்தில் உள்ளார்" என்ற செய்தியை பரப்ப அழைக்கும்போது, உண்மையில் அவர் மக்களிடையே வலியுறுத்த முயல்வது அன்பையும், கருணையையும்தான். இறைவனின் இருப்பைக் குறித்து எதையும் சொல்ல அவர் முற்படவில்லை.

ஒரு கிறித்துவனுக்கான தகுதியை அவர் வரையறுக்க முயற்சித்திருக்கிறார். அவர் வாக்குப்படி, இதயத்தில் அன்பு நிறைந்தவன் கிறித்துவன். அடுத்தநாள், என் தாயாரின் அறிவுறுத்தலின்படி, கட்டளையின்படி – மயிலை கபாலீஸ்வரர் கோயிலுக்குச் சென்றேன். அங்கு சில பக்திமான்களால் கீழ்காணும் வரிகள், உரக்கப்பாடப்படுவதைக் கேட்டேன்.

"தென்னாடுடை சிவனே போற்றி;
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

பீட்டர் ஸ்கால்டிஸ் 'கடவுள் நம் தேசத்தில் உள்ளார்' என்ற வரியை 20ம் நூற்றாண்டில் கூறியுள்ளார். இங்கே, தென்னகத்தே, சைவக் குறவர்களுள் ஒருவரான மாணிக்கவாசகப் பெருமான் ”தென்னாடுடை சிவனே போற்றி” என்று மூன்றாம் நூற்றாண்டிலே கூறியுள்ளார். கடவுள் தென்னகத்தே உள்ளார் என்று அவர் ஆணித்தரமாக கூறுகிறார்.

மாணிக்கவாசகரைக் (கிபி 285 முதல் கிபி 317) குறித்து சில வார்த்தைகள்: அவரால் மொழியப்பட்ட பக்தி இலக்கியமான திருவாசகம், கடவுள்பால் அவர் கொண்டிருக்கும் அன்பு மற்றும் அர்ப்பணிப்புக்கான உச்சகட்ட நிலையை உணர்த்துவதாக உள்ளது.

அவர், இந்த உலகிலிருந்து விடைபெற்ற முறையே ஒரு அதிசயமாகும். அவர், சிதம்பரம் பெரிய கோயிலில் மறைந்துவிட்டார். இதேபோல், தமது பௌதீக உடலை சூட்சுமமான முறையில் கரைத்துவிட்டு சென்ற பக்திமான்கள் இந்திய வரலாற்றில் உள்ளனர்.

திரும்பவும் கபாலீஸ்வரர் கோயிலில் கேட்ட பக்தி வரிகளுக்கு வருவோம். அதற்கு உள்ளார்ந்த பொருள் உள்ளது. பொதுவாக கூறப்படும் பொருள்யாதெனில், இறைவன் (அ) சிவபெருமான் தென்னகத்தே உள்ளார். சிவபெருமான் தென்னிந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் பக்தியின் ஊற்றுக்கண்ணாக விளங்குகிறார். இங்கிருக்கும் சிவபெருமானின் கோயில்கள் எண்ணிலடங்காதவை. காலங்கள் கடந்தவை. பிரமாண்ட வடிவம் கொண்டவை. இவை இறைவனின் கருணை, மேன்மை மற்றும் கம்பீரத்தை இன்றும் பறைசாற்றி வருகின்றன. இங்கு கடவுள்பால் பக்தியுடன் வருகிறவர்கள் - அன்னாரின் இருப்பை உணர்கிறார்கள். அவ்வாறு உணர்ந்தவர்கள் கூறியதே ”தென்னாடுடை சிவனே போற்றி” என்பது.

கடவுளின் இருப்பை உணர்ந்தவர்கள், அவர் குறிப்பிட்ட எல்லைகளுக்கோ, வரையரைகளுக்கோ அப்பாற்பட்டு இருப்பவர்-

அனைவருக்கும் பொதுவானவர் என்பதையும் உணர்ந்திருக்கிறார்கள். எனவே, அடுத்த வரியில் இவ்வாறு கூறுகிறார்கள்: "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" இறைவன்பால் பக்தியோடிருக்க ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், இறைவனை எங்கும் காண்கிறார்கள் – தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு, அதைச்சுற்றியுள்ள இடங்கள் என எங்கும் காண்கிறார்கள். இதுவே அந்த பக்தி வரிகளுக்கான பொதுவான விளக்கமாகும்.

இனி உள்ளார்ந்த விளக்கத்தைக் காண்போம். மனிதனின் சூட்சும தேகத்தில், சுழிமுனை நாடியின் ஆரம்பத்தில் இருக்கும் மூலாதார சக்கரம் தென்திசை அல்லது தென்துருவம் என சாஸ்திரங்களில் கூறப்படுகிறது. நெற்றிப் பொட்டில் இருக்கும் ஆக்ஞயமே வடதிசையாகும். ஒவ்வொருவருடைய இறைத்தன்மையும், இந்த மூலாதாரத்தில் இருப்பதாக சொல்லப்படுகிறது. மூடர்களுக்கு அது உறக்க நிலையில் இருக்கும்.

ஒருவருடைய ஆன்ம சாதனைகளின் மூலம் இந்த இறைச்சக்தி விழிப்பு பெற்று சுழிமுனை நாடியின் மூலம் "மூன்றாவது கண்" என்று சொல்லப்படும் ஆக்ஞய சக்கரத்துக்கு எழும்புகிறது. இந்த இறைச்சக்தியே குண்டலினி என்று பொதுவாக அறியப்படுகிறது. ஒவ்வொரு சூட்சும சக்கரத்திலும் (வெவ்வேறு சமய மார்க்கங்களிலும்) வெவ்வேறு பெயர்களைத் தாங்கியிருந்தாலும், இந்த இறைச் சக்தி, அனைவருக்கும் ஒன்றேயாகும். இவ்வாறாக ஒவ்வொருவருடைய இறைத்தன்மையும், அவருடைய மூலாதார சக்கரத்தில் அதாவது தென்னாட்டில் உள்ளது. எனினும், இந்த இறைத்தன்மை ஒவ்வொருவருடைய இருப்பு நிலை முழுவதும் பரவியுள்ளது. இந்த தெய்வீக சக்தியை நாம் நம்முள் அடக்கி வைத்திருக்கவில்லை. எங்கும் நிறைந்துள்ள தெய்வீக சக்தியுடன், நாம் சூட்சும சக்கரங்கள் மூலம் இறையருளால் தொடர்பு பெற்றுள்ளோம். அவ்வளவே. எனவேதான், "தென்னாடுடை சிவனே போற்றி; எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்று பக்திமான்களால் பாடப்பட்டது. இறை நம்பிக்கை இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஒவ்வொருவருடைய தென் திசையிலும், இந்த இறைச்சக்தி இயல்பாகவே உள்ளது. பெரும்பான்மையோருக்கு, இந்த இறையுணர்வு உறக்க நிலையில் உள்ளது; சிலருக்கு, விழிப்பு நிலையில் உள்ளது. வெகு சிலருக்கு, அவர்களுடைய ஆன்ம சாதனைகளில் வட திசையை நோக்கிய பயணத்தில் உள்ளது.

எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் அனைவரிடத்திலும் இறைச்சக்தி தென்னாட்டில் அதாவது மூலாதாரத்தில் உள்ளது. எனவேதான், 'தென்னாடுடைய சிவனே' போற்றி என்று உறுதியாக சொல்லப்பட்டிருக்கிறது.

மூலாதாரத்தில், இறைவன் ”பசுபதி” அதாவது, விலங்குகளின் - விலங்குணர்வு கொண்டவார்களின் தலைவன் என அறியப்படுகிறார். ஆக்ஞய சக்கரத்திரல், சிவலிங்கமாக - ஒளிப்பிழம்பாக அறியப்படுகிறார். சஹஸ்ராரத்தில், தலையுச்சியில் 'ஆதியனாதி', அதாவது எல்லையற்றவராக அறியப்படுகிறார். ஒவ்வொருவரும், அவரவர் உணர்வு நிலையில் மாறுபட்டிருப்பதால், இந்த இறைச்சக்தி, அவரவர் உணர்வு நிலைக்கு ஏற்றார்போல் வெவ்வேறு பெயர்களையும், வடிவங்களையும் தாங்கியிருக்கிறது – காற்றானது தனது வேகத்திற்கும், வடிவுக்கும் ஏற்றார்போல் சூறாவளி, சுழற்காற்று, தென்றல் என்று வெவ்வேறு பெயர்களைப் பெற்றிருப்பது போல்.

இவ்வாறாக, கடவுள் நம் தேசத்தில் (தேகத்தில்) உள்ளார். ”அஹம் பிரம்மாஸ்மி” எனும் மஹா வாக்கியமும் இதையே வலியுறுத்துகிறது. இதை ஆத்மார்த்தமாய் உணர்ந்தவர்கள், இறைவனின் அம்சமாகவே உள்ளார்கள். இத்தகையவர்கள், எல்லா காலகட்டங்களிலும், இந்தியாவின் ஏதாவது ஒரு பகுதியில், மனித சமூகத்திற்கு உள்ளேயோ, வெளியேயோ இருந்தே வருகிறார்கள்.

## மனித ஜீவனில் இறைவன்:

"ஆத்மன் விழிப்பு நிலையில் கண்களில் வெளிப்படுகிறான்; ஸ்வப்னத்தில் கண்டத்தில் உள்ளான். சுஷீப்தியில் இருதயத்தில் (அநாகதசக்கரம்) வீர்யம் பெற்றுள்ளான்; துரியத்தில் உச்சியில் விளங்குகிறான்" – பிரம்மோபனிஷத்.

எங்கும் நிறைந்துள்ள பிரம்மம், ஜீவனுக்குள் ஆத்மரூபமாய் அறியப்படுகிறது. எனவே, ஆத்மனை அறிந்தவன் பிரம்மனை அறிந்தவனாகிறான். மேலே கூறப்பட்ட உபநிடத சூத்திரம், மனித ஜீவனுள் இறைவன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் பாண்மையைக் கூறுகிறது.

இந்த சூத்திரம் ஞான மார்க்கம் பற்றியதாய்த் தோன்றினாலும், இது பக்தி (இறைவனிடம் அன்பு) மார்க்கத்துக்கும் பொருந்தும். இந்த உணர்வு நிலைகள் அனைவருக்கும் பொதுவானவை.

ஞான மார்க்கத்தில் சுயமுயற்சி பிரதானமானது. இறைவனிடம் அடிபணிதல் என்பது துணை நிற்பது. பக்தி மார்க்கத்தில் இறைவனிடம் அடிபணிதல் என்பது பிரதானமானது, சுயமுயற்சி என்பது துணைநிற்பது. சுயமுயற்சி இல்லாமல், இறைவனிடம் அடிபணிய முடியாது. இறைவனிடம் அடிபணியாமல் சுயமுயற்சி கடை தேராது. முடிவு ஒன்றே. அது பற்றற்ற நிர்மலமான ஆனந்தமயமான அமைதி நிலை. இதுவே மனித ஜீவனின் இறுதியான இலக்கு – மனித வாழ்க்கையின் உயரிய நோக்கம்.

இந்த பௌதீகப் பிரபஞ்சத்தை ஒளி, ஒலி, காற்று, நீர் மற்றும் திடப்பொருள்கள் நிரப்பியுள்ளன. அனைத்திற்கும் மூலமான இறைவனே இந்த இயற்கைக்கும் மூலமாவான். இந்த

இயற்கையில் ஒளியே அனைத்திற்கும் மூலமானது. ஒளியிலிருந்தே ஒலியும், மற்ற பொருட்களும் தோன்றியள்ளன. இறைவன் ஒளி வடிவினனாக வணங்கப்படுகிறான். ஒளி இல்லாத ஆலய வழிபாடு கிடையாது. ஒளி இல்லாத சடங்குகள் கிடையாது. இந்த ஒளியின் ஊற்றாக, கருவியாக உடலில் இருக்கும் உறுப்பு கண்தான். இறைவனின் எல்லை இல்லாத் தன்மையையும், எங்கும் நிரம்பியிருக்கும் பண்பையும் உணர்த்துவது கண்தான். நொடிப்பொழுதில், பல ஆயிரம் கோடி மைல்கள் தூரத்தில் இருக்கும் விண்மீன்களைக் கண் காண்கிறது; அடுத்த நொடியிலேயே, அருகாமையில் இருக்கும் வேறு ஒரு பொருளைக் காண்கிறது. இந்த அளவுக்கு வேகமும், துல்லியமும் பெற்ற உறுப்பு உடலில் வேறு இல்லை (மனம் இன்னும் வேகமானது. ஆனால் அது பௌதீகப் பொருள் அல்ல).

'நாம் இருக்கிறோம்' என்ற உணர்வை, ஜாக்கிரத்தில் (விழிப்பு நிலையில்) ஜீவன் மற்றைய புலன்களையும்விட கண்களாலேயே பிரதானமாகப் பெறுகிறான். எனவேதான், ஜாக்கிரத்தில் ஆத்மா அல்லது இறைத்தன்மை கண்களில் வெளிப்படுகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இதற்குப் பொருள், இறைத்தன்மை குருடர்களிடமோ, பிற உபகரணங்கள் மூலமாகவோ வெளிப்படாது என்பதல்ல.

திருவடி தீட்ஷை என்று ஒரு யோகம் உண்டு. இது ஒளியை அடிப்படையாகக் கொண்டு தன்னை உணரும் முறையைப் பற்றிச் சொல்கிறது. சூரத் சப்தயோகம் இறைத்தன்மையை ஒலியின் மூலம் உணர உதவி புரிகிறது. கிரியா யோகம் பிராணாயாம முறைகளால் நமது உணர்வு நிலையை இறைநிலையோடு முடிந்துவிடும் முறையைப் போதிக்கிறது. பிந்து விசர்க சக்கரத்தைத் (உச்சந்தலையில் இருப்பது) தூண்டும் தியானமுறைகள், சூட்சுமமான சுரப்பிகள் மூலம் (அமிர்தம் என்று சொல்லப்படுவது) இறைத்தன்மையைப் பெறுதலை நடைமுறையாக்குகின்றன. ஹட யோகம், இந்த பௌதீக உடலை

கருவியாக்கி, அதன்மூலம் நமது நுட்பமான உடல் , இறைத்தன்மையை உணரும்படிச் செய்கிறது. இந்த யோக முறைகள் மிகவும் நுட்பமானவை; சூட்சுமமானவை. ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை. பொதுவாக, இவை ஞானமார்க்கம் சார்ந்தவையாக உள்ளன. பக்தி மார்க்கத்திலும் ஒளி (ஆரத்தி), ஒலி (ஜபம்), நீர் (அபிஷேகம்), காற்று (வாசனைப் பொருட்களின் மூலம் காற்றில் இறைவனின் இனிமையை உணர்தல்), திடப்பொருள் (விக்கிரகங்கள்) ஆகிய கூறுகள் துணை நிற்கின்றன. எனவே, இயற்கையின் பிரதான ஐந்து கூறுகளும் ஆன்மீக சாதனைகளில் உபயோகப்படுத்தப்படுகின்றன. இவை, சாதகன் பௌதீக உணர்வைத் தாண்டி ஆத்மன் அல்லது இறைவனுக்காக அமைதி மற்றும் ஆனந்த நிலையை உணர்வதற்கு உதவி செய்கின்றன. ஆத்மா அல்லது இறைத்தன்மை என்பது பௌதீகப் பொருள்களினின்றும் வேறுபட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படியென்றால், பௌதீகப் பொருள்கள் எப்படி இறைவனைக் காண உதவ முடியும்?

இறைவன் பௌதீகப் பிரபஞ்சத்திற்குச் சிறிதும் சம்பந்தப்படாதவர் என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தப் பௌதீகப் பிரபஞ்சம் இறைவனின் வெளிப்பாடுகளில் ஒன்று (உணர்வு நிலையில் கீழானது என்று வேண்டுமானால் சொல்லலாம்) ஆத்மா அல்லது இறைத் தன்மை என்பது எங்கும் இருப்பது. அதனின்றும் வேறுபட்டு இருப்பது என்று ஒன்று இல்லை. வேறுபாடு என்பது ஜீவர்களின் பார்வையிலேயே இருக்கிறது. பிரகலாதன் இந்த உலகத்தின் ஒவ்வொரு அணுவிலும் இறைவனைக் கண்டார்; அவரது தந்தை எல்லா இடங்களிலும் வெறும் பௌதீகப் பொருள்களையே கண்டார். பிரகலாதனின் உயர்வான உணர்வு நிலையின் உண்மைத்தன்மையை நிரூபிக்கும் பொருட்டு, இறைவன் ஒரு தூணினின்று வெளிப்பட்டு நின்றார். இந்த புராணம், இறைவன் இந்த உலகின் ஒவ்வொரு அணுவிலும் ஊடுருவி நிறைந்துள்ளார் என்னும் உண்மையை விளக்குகிறது.

இறைவனின் சர்வவியாபகத் தன்மையை உணர்த்தும் இத்தகைய நிகழ்வுகள் வரலாற்றிலும் உள்ளன.

ஸ்வப்னத்திலும், சுஷீப்தியிலும், துரியத்திலும் பௌதீக உடலில் உள்ள குறைபாடுகள் ஒரு பொருட்டே அல்ல. அந்நிலைகளில், அனைவரும் ஒரே மாதிரியாகவே, அவரவர் வினைக்கேற்றவாறு தன்னிலையை உணருகிறார்கள்.

இவ்வாறாக, ஐம்புலன்களையும் (ஞானமார்க்கம்), ஐம்பூதங்களையும் (பக்தி மார்க்கம்) ஆத்ம உணர்வோடு காணும்போது இறைசாட்சாத்காரம் சித்திக்கறது. இந்த இரண்டு மார்க்கங்களின் நோக்கமும் ஒன்றே. அது உண்மையை உணர்வதே. நோக்கமும், செயலும் உண்மையைப் பற்றியதாய் இருக்கம்போது புலனடக்கம் ஏற்படுகிறது; இயற்கை தன்வசம் ஆகிறது; இறுதியில் இறையனுபூதி கைகூடுகிறது.

ஜாக்ரத் நிலையாகட்டும், ஸ்வப்ன நிலையாகட்டும், சுஷீப்தியாகட்டும், துரியமாகட்டும் – சூக்ஷீமமாக இறையுணர்வை (அ) தன்னிலையை உணர்த்தும் கருவி மனமேயாகும்.

இந்த மனத்தை கட்டுக்குள் கொண்டு வருவது அல்லது செம்மைப்படுத்துவது என்பதை ஜாக்ரத் நிலையில் யோக சாதனைகள் (ராஜயோகம், ஞானயோகம், கர்மயோகம் பக்தியோகம் முதலானவை) மூலம் கைவரப்பெறலாம். மனம் செம்மைப்படாமல், எந்த உணர்வு நிலையிலும் உயரிய ஆன்மீக அனுபவங்கள் பெறுவது அரிதாகும்.

மாசுபட்ட மனம், சுயமுயற்சியால் தன்னைத்தானே சுத்தப்படுத்திக் கொண்டு தூய்மையடையும்போது (முள்ளை முள்ளால் எடுப்பதுபோல்) கருவி என்னும் அடையாளத்தை இழந்து, தனக்கு காரணமான ஆத்மாவோடு அதாவது இறைவனோடு ஒன்றறக் கலந்துவிடுகிறது. ஒரே வாக்கியத்தில் கூறப்பட்டிருந்தாலும், இது

நடைமுறையாவதற்கு ஒரு சாமானியனுக்கு பல ஆயிரம் பிறவிகள் தேவைப்படலாம்.

மனம் செம்மையானவர்கள், அதாவது மனம் தூய்மைப்படுத்தப் பட்டவர்கள் தன் நிலைக்கும் எங்கும் நிறைந்துள்ள இறைத்தன்மைக்கும் எந்த வேறுபாடும் காண்பதில்லை. சுத்தமாகி இருக்கும் காலிப்பாத்திரத்தில் இருக்கும் வெளிக்கும் (வெறுமைக்கும்) அதற்கு வெளியே இருக்கும் வெளிக்கும் எவ்வாறு பேதம் இல்லையோ, அவ்வாறு அவர்கள் இறைவனுடன் ஏகத்துவத்தைப் பெறுகிறார்கள். ஜாக்ரதம், ஸ்வப்னம், சுஷீப்தி, துர்யம் போன்ற உணர்வு நிலை வேறுபாடுகள் அவர்களுக்கில்லை. அந்நிலைகளுக்குள்ள சட்டதிட்டங்களால் அவர்கள் பாதிப்படைவதில்லை. பாதிப்பு பாத்திரத்திற்கே அன்றி அவர்களுக்கில்லை. பாத்திரம் (அதாவது உடல்) இருக்கும்வரை ஜீவன் முக்தர்களாக இருக்கும் அவர்கள், பாத்திரம் உடைந்ததும் விதேக பூரண முக்தர்களாகிறார்கள்.

## கோயில்கள்:

நான் இங்கே கோயில்களைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனென்றால், கோயில்கள் மற்றும் அவை சார்ந்த இடங்களில்தான் எனக்கு இந்த தலைப்பும், அதனுடைய பொருளும், சூட்சுமங்களும் வெளிப்பட்டன.

இறைவன் நம் எல்லோர் உள்ளும் இருக்கிறார் என்னும் உண்மையை கோயில்கள் பறைசாற்றுகின்றன; மனித உடலின் சூட்சும கட்டமைப்பை ஒத்திருக்கின்றன. கோயில் பிரகாரங்கள், மனிதனுடைய உணர்வு வளையங்களை குறிக்கின்றன. வைகாம்ச ஆகமத்தின்படி அதிகபட்சமாக ஏழு பிரகாரங்கள் ஒரு கோயிலுக்கு இருக்கலாம். இது மனிதனுடைய ஏழு வகையான உடல்கள் அல்லது உணர்வு நிலைகளைக் குறிக்கின்றன. அவையாவன: அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், சூட்சுமம், ஆணவமயம் மற்றும் ஆனந்தமயம். இவை மனிதனுடைய ஏழு சூட்சும சக்கரங்களுடன் தொடர்புடையவை. எடுத்துக்காட்டாக, மூலாதரம் அன்னமய சரீரத்துடன், பௌதீக உடலுடன், பூமிப் பிரபஞ்சத்துடன் தொடர்புடையது.

அந்த ஏழு சக்கரங்களைக் குறித்தும், அந்த ஏழுவகையான மனிதனுடைய பரிமாணங்களைப் பற்றியும் அறிவது என்பது மிக நீண்ட, தனிப்பட்ட ஒரு முனைப்பாகும்.

ராஜகோபுரம், இறை சூட்சும உருவத்தின் பாதமாகச் சொல்லப்படுகிறது; சிரசு அல்லது உச்சி கருவறையாக உள்ளது. இவ்விடமே கடவுளின் உறைவிடம். கோபுரங்களில் இருக்கும் சிற்பங்கள் இறைவனின் திருவிளையாடல்களை தெரியப்படுத்துகின்றன. அவை கலையுணர்வுடனும்,

கம்பீரத்துடனும் அமைந்திருக்கின்றன. அவை இறைவனின் வெவ்வேறான திருவிளையாடல்களை, குறிப்பாக கூறப்படும் - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளள் ஆகிய ஐந்தொழில்களைப் பற்றி அமைந்த திருவிளையாடல்களை - உலகுக்கு பறைசாற்றுகின்றன. கருவறையின் முன்னே நிற்கும் கொடிமரம், மனித சூட்சும தேகத்தின் முதுகுத்தண்டினை குறிக்கிறது. முக்கியமான கோயில் விழாக்களின் போது, அதில் கொடியேற்றம் நடைபெறும். இது, நமது குண்டலினி சக்தியை முதுகுத்தண்டின் சூட்சும நாடிகளின் மூலம் மேலே எழுப்புவதைக் குறிக்கிறது.

பலிபீடம் கொடிமரத்திற்கு முன்னாள் உள்ளது. அனைத்து கர்ம வினைகளின் பலன்களையும், நெடுஞ்சாண்கடையாக விழுந்து இறைவனின் பாதத்தில் பலியிடும் – சமர்ப்பிக்கும் இடமே பலிபீடம். இத்தகைய ஒரு சமர்ப்பணம் நிகழ வேண்டுமானால், ஒருவனுடைய இறைசக்தி விழிப்படைந்து சூட்சும நாடிகளின் வழியே மேலெழும்ப வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகவே பலிபீடம், கொடிமரத்தின் அருகே அமைக்கப்பட்டுள்ளது. இது மனதை பக்குவப்படுத்துவதன் மூலம் சாத்தியமாகும். கருவரையில் இருக்கும் கடவுள் அல்லது ஆத்மநிலை இவையனைத்திற்கும் வெறும் சாட்சி மட்டுமே. உள்ளே இருக்கும் அர்ச்சாவதார மூர்த்தின் அமைப்பு ஆழமான தத்துவங்களை உணர்த்துவதாய் இருக்கும். ஆலயத்திற்கான முதல் காரணமாக இருந்தும் கூட, சஞ்சலம் அற்றதாக மக்களின் வெளிப்பார்வைக்கு இந்த விக்கிரகம் தோற்றமளிக்கிறது. இது, இறைத்தன்மை அல்லது ஆத்மா இந்த படைப்பிற்கான மூலமாக இருந்தாலும் கூட, எல்லா நேரங்களிலும் சஞ்சலமற்ற நிலையிலேயே உள்ளது என்னும் உண்மையை வெளிப்படுத்துகிறது.

இந்த பொதுவான நியதியிலிருந்து மாறுபட்டு, உரியவருக்கு, சில நேரங்களில் இந்த அர்ச்சாவதார மூர்த்தி சில சூட்சும நிகழ்வுகள் மூலமாக தனது தனித்தன்மையை, இருப்பை வெளிக்காட்டிக்

கொள்வதுண்டு. இது இறைவனின் திருவிளையாடலே அன்றி வேறு அன்று.

பெரும்பான்மையான கோயில்கள், ஏழுக்கும் குறைவான பிரகாரங்களையே கொண்டுள்ளன. இவ்விடங்களில் நுட்பமான உணர்வு நிலைகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகம சாஸ்திரப் படி அமைக்கப்பட்ட எல்லா கோயில்களும், கடவுள் ஒவ்வொருவரின் ஆத்மாவிலும் உள்ளார் என்னும் உண்மையை உணர்வுபூர்வமாய் உணர்த்துவதாய் உள்ளன. ஆகமங்களும், ஆலய கட்டமைப்பு, வழிபாட்டு முறைகளும் புரிதலுக்கு எளியவையாக இல்லாமல் இருக்கலாம். அவற்றின் உள்நோக்கம் யாதெனில், ஒவ்வொருவருடைய இறைத்தன்மையையும், செயல்முறைகளால் நினைவூட்டுவதேயாகும். கோயில்களும், அங்கு நடைபெறும் தனிப்பட்ட மற்றும் பொதுவான வழிபாட்டு முறைகளும், ஞானத்தின் மூலமாகவும், பக்தியின் மூலமாகவும் ஒருவரின் உணர்வு நிலைகளைத் தூய்மைபடுத்துவதாய் உள்ளன.

கோயில்களைப் பற்றிய படிப்பு மிகப் பெரியது ஆகும். சைவம், வைஷ்ணவம், சாக்தேயம் ஆகியவை குறித்த ஆகமங்கள் சுமார் 200 உள்ளன.

கண்டனங்களுக்குட்பட்ட மிருகபலி போன்ற சில சடங்குகள் சில கோயில்களில் நடைபெறுகின்றன. உண்மையில் மிருகபலி என்னும் பழக்கம் பல மதங்களிலும் வெவ்வேறு விகிதாச்சாரங்களில் புழக்கத்தில் உள்ளது. மதக் (Matagh) என்னும் மிருகபலி அர்மீனிய சர்ச்சுகளில் உள்ளது. கிறித்துவுக்கு முன்பிருந்தே இந்த பழக்கம் அங்கு நிலவுவதாக கூறப்படுகிறது. பணக்கார இஸ்லாமியர்கள் ஹச் யாத்திரைக்கு முன் வரும் எய்ட்-உல்- அதா விழாவின்போது ஒரு பெரிய பாலூட்டியைப் பலியிடுவது வழக்கம். ஹிந்து மதத்தில் உயிர்பலி என்பது ஒருசில சக்தி மற்றும் காவல்தெய்வங்களின் வழிபாடுகளில் மட்டுமே

உண்டு. இத்தகைய உயிர்க்கொலைகள், இடைப்பட்ட காலகட்டங்களில் இருந்து, அஹிம்சை தத்துவத்தின் ஈர்ப்பினால் குறைந்து கொண்டு வருகிறது.

இந்த மிருகபலி, பெரும்பான்மையான தற்கால இந்துக்களால் விரும்பப்படுவது இல்லை. நானும் அவ்வாறே. இந்தியாவில் வேரூன்றிய பிற மதங்களான பௌத்தம், ஜைனம் மற்றும் சீக்கியம் முதலியவையும் உயிர்ப்பலியை கண்டிக்கின்றன.

கோயில்கள் ஆன்மீக உயர்வுக்கு மட்டுமன்றி, வேறுபல கோணங்களிலும் செயல்படுகின்றன. கோயில்கள், சமூக பொருளாதார கலாச்சார மையங்களாகத் திகழ்கின்றன. இங்கு நான், அவற்றின் முதன்மை நோக்கான ஆன்மீக விழிப்புணர்வை பற்றி மட்டுமே கூறி வருகிறேன். கோயில்களின், இந்த முதன்மை நோக்கத்தை மக்கள் எந்த அளவுக்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பது ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ளது சுவாமி சிவானந்த சரஸ்வதியின் கூற்றாகும்:

"கோயில்கள் மற்றும் அவை சார்ந்த செயல்பாடுகளைப் பற்றி விளக்கும் சாஸ்திரங்களே ஆகமங்கள் ஆகும். ஆகமங்கள், இறைவனை வணங்குவது குறித்த விளக்கங்கள் மற்றும் செயல்முறை குறிப்புகளை உள்ளடக்கிய சாஸ்திரங்கள் ஆகும். அவை தந்திரங்கள், மந்திரங்கள் மற்றும் யந்திரங்கள் முதலானவற்றை உள்ளடக்கியிருக்கின்றன. அவை இறைவனை வெளிப்புறமாக வழிபடும் முறைகளைப் பற்றி விவரிக்கின்றன. அனைத்து எழுபத்தி ஏழு ஆகமங்களும் (சுவாமி அதிகாரப்பூர்வ மாய் உள்ள ஆகமங்களை மட்டும் குறிப்பிடுகிறார் போலும்) ஞானம், யோகம், கிரியை, சரியை ஆகிய இறைவனை உணர்வதற்கான மார்க்கங்களைப் பற்றிக் கற்பிக்கின்றன. ஆகமங்கள், பிரபஞ்சத்தின் ஆரம்பம், அண்டங்களைப் பற்றிய ஆய்வு, ஆத்மவிடுதலை, பக்தி, தியானம், மந்திரங்களின்

தத்துவங்கள், பூடகமான சக்கர வரைபடங்கள், ஈர்ப்புத் தன்மையுள்ள எழுத்து வடிவங்கள் மற்றும் உச்சாடனங்கள், ஆலய கட்டுமானம், சிலை வடித்தல், கோயிலினுள் கடைபிடிக்கப்படவேண்டிய விதிகள், சமுதாயத்துக்கான விதிமுறைகள், பொதுவிழாக்கள் இவை பற்றிய செய்திகளை விரிவாக கூறுகின்றன."

ஆகமங்கள், ஆலய வழிபாட்டு முறையினை, ஞானம் மற்றும் பக்தி இவற்றின் சரியான விகிதாசாரங்களைக் கொண்டு அமைந்திருக்கின்றன. அவை கலை நயம் மிக்கவை. அதற்கு இணையாக, அறிவியல் பூர்வமானவை. கோயில் வழிபாடு, த்வைதம் என்று சொல்லக்கூடிய இருமைக் கோட்பாட்டைச் சார்ந்திருப்பது போல் தோன்றினாலும், அது உருவ அருவங்களுக்கு அப்பாற்பட்ட ஒருமைக்கே இட்டுச்செல்கிறது. ஆதிசங்கரர் முதலான அத்வைத ஞானிகளும் ஆலய வழிபாட்டை வலியறுத்துகிறார்கள்.

பக்தன் பகவானுடன் ஒன்றறக் கலந்து விடுவதே, பக்தியின் உச்ச கட்ட நிலையாக இருக்க முடியும். பக்தி அத்வைதத்திற்கு இட்டுச் செல்கிறது. மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் மற்றும் ஆண்டாள் நாச்சியார், இந்த உண்மையை தங்கள் வாழ்க்கையின் மூலம் உலகுக்கு உணர்த்தி யிருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும், தங்களுடைய பௌதீக உடல்களை தாங்கள் வணங்கி வந்த ஆலயங்களினுள்ளேயே கரைத்து, இறைவனுடன் ஒன்றறக் கலந்துவிட்டவர்கள். ஆன்மா லயமாகும் இடமே ஆலயம் என்பதை உணர்த்தியவர்கள் இவர்கள். வணங்கிய உருவங்கள், இவர்களை உருவம் கடந்த நிலைக்கு இட்டுச்சென்றுள்ளன. இந்த ஆத்ம ஞானத்தை வழங்குபவை வெறும் வெளித்தோற்றங்களோ, அடையாளங்களோ அல்ல. பக்தர்களின் ஆழ்ந்த பக்தி, அர்ப்பணிப்பு மற்றும் ஞானம் – இவையே ஆத்மஞானத்தை, இறையுணர்வை தரவல்லவை. கோயில்கள் இந்த பக்தியையும், ஞானத்தையும் எழுப்புவிக்கும் மூல ஊற்றுக்கண்களாகத் திகழ்கின்றன. ஆலய

வழிபாடு, ஆன்மீக வாழ்க்கையின் ஒரு ஆரம்பமாக சொல்லப்பட்டாலும், அது இறுதிவரையிலும் உடன் வரக்கூடியது.

அதனால்தான், ஆத்மஞானிகளாக விளங்கிய ஆதிசங்கரரும், இராமானுஜாச்சாரியாரும், இராமகிருஷ்ண பரம்மஹம்சரும் மற்றும் பல நாயன்மார்களும் கோயில் வழிபாட்டினை தங்கள் பௌதீக இருப்பின் இறுதிவரை மேற்கொண்டிருந்தார்கள். பக்தி, ஞானம் இவ்விரண்டையும் தூண்டுவதற்காக கோயில்கள் வடிவமைக்கப்பட்டிருந்தாலும், மக்களைப் பெரிதும் ஈர்த்திருப்பது பக்தி அம்சமேயாகும். இங்கு நான் பக்தி என்று குறிப்பிடுவது கடவுளின் மேல் செலுத்தும் பக்தி. கடவுளுக்காகவே செலுத்தும் பக்தி. பக்தி என்பது சத்தியத்திற்கான ஒரு தீவிர தேடல். வேறு காரணங்களுக்காக ஒருவர் கடவுளை வழிபடுவாரேயானால் அது நீர்த்துப்போன, கலப்படமடைந்த பக்தியாகும். சாமானியர்கள் கொண்டிருப்பது இத்தகைய பக்தியேயாகும். ஏனென்றால், முன்னர் கூறிய ஏழு சரீரங்களும் அவர்களிடம் கலங்கமுற்று இருக்கின்றன. கோயில்களையோ மற்ற திருத்தலங்களையோ, உண்மையான பக்தியுடன் வழிபட்டால், அவர்களும் கூட தங்களிடம் இருக்கும் மாசுக்களை நீக்கி, வீடுபேற்றை எய்தலாம். இதற்காகவே கோயில்கள் நிர்மாணிக்கப் பட்டன. ஆனால் நடைமுறையில் பெரும்பாலானோர் வெறும் வெளிச் சடங்குகளையே குருட்டுத்தனமாக, அதுவும் உலகாயத நன்மைகளுக்காக செய்து வருகிறார்கள். அவர்கள் ஆலயத்தின் முதன்மைப் பயனைப் பற்றி அறியாமலேயே உள்ளார்கள். ஒரு சதவிகிதத்திற்கும் குறைவான மக்களே தன்னை அறிதல் அல்லது கடவுளை அறிதல் என்னும் குறிக்கோளைக் கொண்டுள்ளனர். அந்த வெகுசிலரே கோயில்களை சரியான முறையில் வழிபடுகிறார்கள்.

சில அடையாளங்கள் மூலம் இறைவனை அறிதல், என்பது எல்லா மதங்களிலுமே புழக்கத்தில் இருக்கும் ஒரு தவிர்க்கமுடியாத வழியாகும். கடவுளை ஆழ்ந்து சிந்திக்க ஒரு இடம் தேவைப்படுகிறது. அவ்விடத்தில் கற்சிலை இருக்கலாம்;

இல்லாமலும் போகலாம். அதற்குப் பதில் சிலர் மரத்தாலான சிலுவையைக் கொண்டுள்ளனர். சிலர் ஞானிகளின் படங்களையோ, நூல்களையோ கொண்டுள்ளனர். சிலர் அவர்களுடைய ஆலயத்தினுள் எந்த அடையாளத்தையும் வைக்காமல் போகலாம். பிற மதத்தாருடைய அடையாளங்களைக் குறை கூறுபவர்கள் கூட, கடவுளை ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட திசையில், ஒரு குறிப்பிட்ட நாளில் அல்லது நேரத்தில் சில குறிப்பிட்ட வழிபடும் செயல்கள் மூலம் அதிகமாக உணரமுடியும் என்னும் கருத்தில் நம்பிக்கை வைத்துள்ளார்கள்.

இது அடையாளங்கள் மூலம் வழிபடுதல் (அல்லது உருவ வழிபாடு) அன்றி வேறில்லை. இதற்குப் பொருள், அனைவருமே இறைவனை, அவரவர் மத வழிபாட்டுக்குரிய ஒரு சில இடங்களில் மட்டுமே அறிய முடியும் என்பது அல்ல. கடவுள் எங்கும் நிறைந்தவர். வெளிப்புற உதவிகள் தேவைப்படாதவர்களும், கடவுளை அறியலாம். வழிபடலாம். ஆனால், உள்முகமாக இறைவனைக் காண்போர், வெளி மார்க்கங்களின் மூலம் இறைவனை அறிய முற்படுவோர்களைக் குறை சொல்லக் கூடாது. உண்மை யாதெனில், ஏறக்குறைய அனைவரும் இறைவழி பாட்டுக்கான வெளிப்புற மார்க்கங்களை தங்கள் வாழ்வின் ஏதாவது ஒரு பகுதியிலேனும் சார்ந்தே இருக்கிறார்கள். மேலும், இத்தகைய இறைத் தன்மை கொண்ட ஸ்தலங்கள் தெய்வாம்சம் கொண்ட ஞானிகளின் ஆன்ம அதிர்வுகளை, அங்கு வருவோரின் ஆன்மாவைத் தொடும் வண்ணம் வெளிப்படுத்தியபடி உள்ளன.

"கடவுள் நம் தேசத்தில் உள்ளார்" எனும் செய்தி இருவழிகளிலும் பொருந்தும். கடவுளைத் தன்னுள்ளேயே உணர்ந்த ஒரு ஆத்மஞானி இதைக் கூறலாம்: அன்பு, அமைதி, ஆனந்தம் இவை வெளிப்படுகின்ற தேசங்களிலும், இதைக் கூறலாம். இறைவனை உணர்ந்தவர்கள் உறவாடும் இடங்களில்தான் மேற்குறிப்பிட்ட அன்பு, அமைதி, ஆனந்தம் முதலான நற்பண்புகள் இயல்பாய் வெளிப்படும். நாம், நம் தலைப்புச் செய்தியை இரு வழிகளிலும்

அலசியுள்ளோம். இச்செய்தி ஒவ்வொருவருடைய இறைத்தன்மையையும் குறிக்கிறது. இறைத்தன்மையை உணர்ந்தவர்கள் மூலமும், இறையுணர்வை பிரதிபலிக்கும் புண்ணிய தேசங்கள் மூலமும், பன்னெடுங்காலமாக இறையுணர்வை பரப்பிவரும் பாரத தேசத்தையும் இச்செய்தி கோடிட்டுக் காட்டுகிறது.

இந்தியாவில் தோன்றும் ஞானிகள் இதை உலகுக்கு தைரியமாக சொல்லி வருகிறார்கள்: "நீயே இறைவன் ஆவாய். எல்லாம் உன்னுள் அடக்கம். குருவின் அருளின் மூலமாகவும், உன்னுடைய ஆத்ம சாதனைகள் மூலமாகவும் உன்னை நீ அறிவாயாக. மனிதர்களாகிய நீங்கள் ஆனந்தத்தின் ஊற்றுக்கண்களை தன்னுள்ளேயே கொண்டிருந்தும் சிறிய விஷயங்களுக்காக வெளியில் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அனைத்தும் உலகங்களிலும், ஆத்மாவை (அ) தன்னை அன்றி அறிவதற்கு வேறொன்றுமில்லை."

கடவுள் நமது தேசத்திலேயே அதாவது நம்முள்ளேயே இருந்தும், அவரை நாம் எளிதாக கண்டுகொள்ள முடிவதில்லை. காரணம் நமது உணர்வுநிலை எப்போதும் வெளிஉலக சமாச்சாரங்களிலேயே ஈர்க்கப்பட்டு உள்ளது. அதனால்தான் முன்னர் குறிப்பிட்ட, திருவண்ணாமலை கோயிலினுள் எழுதப்பட்டிருந்த பாடல், கள்ளப்புலன்கள் என்று நமது உணர்வை வெளிப்புறமாக இழுத்துச்செல்லும் ஐம்புலன்களைக் குறிப்பிடுகிறது. அவற்றை நாம் வெல்ல வேண்டும். அது முடியுமென்றால், இறைவனை நம் தேசத்தில் உணர நம்மாலும் முடியும். எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேலை "கடவுள் நம் தேசத்தில் உள்ளார்" என்னும் செய்தியை பரப்புவதேயாகும். இதன் உள்ளார்ந்த பொருள், கடவுள் நம்முள்ளேயே இருக்கிறார் என்பதேயாகும். இங்கே ஸ்ரீபரமஹன்ச யோகானந்தரின் கூற்றை வைப்பது பொருத்தமாக இருக்கும்.

”கடவுளின் சர்வவியாபகத்தில் நாம் உள்ளோம் என்பதையும், அத்தன்மை நம்மை நோக்கி வருவதற்காக வணங்கவேண்டிய அவசியம் இல்லை என்பதையும், நாம் வெறுமனே கடவுளின் அருகே இல்லை- அவரின் சர்வ வியாபகமே நமது வியாபகமுமாகும் என்பதையும், எப்போதும் போல இப்போதும் கடவுளின் ஒரு அங்கமாகவே நாம் உள்ளோம்- அவரினின்றும் வேறுபட்டு அல்ல என்பதையும், உடல் அளவிலும், மனதளவிலும், ஆத்ம அளவிலும், உணர்தலே தன்னை அறிதல் (அதாவது ஆத்மஞானம்) ஆகும். நாம் செய்ய வேண்டியது எல்லாம் நமது அறிதலை மேம்படுத்துவது மட்டுமேயாகும்”.

## சமயங்களின் நோக்கம்:

கடவுளைப் பற்றி வரையறுத்து விளக்க முற்படுவோர் - களுக்காக ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு கதை சொல்கிறார்: நான்கு குருடர்கள் ஒரு யானையின் தோற்றத்தைப் பற்றி அறிய முற்பட்டார்கள். அவர்களுள் ஒருவன், யானையின் காலைத் தொட்டுவிட்டு, அது ஒரு தூண் போன்றதாய் இருக்கும் என்னும் முடிவுக்கு வந்தான். இன்னொருவன் யானையின் வாலைப்பிடித்துப் பார்த்துவிட்டு, "யானை என்பது ஒரு கயிறுபோன்றது" என்றான். மூன்றாமவன் அதன் காதைத் தடவிப்பார்த்து, "யானை முறம் வடிவத்தில் இருக்கும்" என்று முன்மொழிந்தான். நான்காமவன், யானையின் வயிற்றைத்தொட்டுவிட்டு தன் நண்பர்களிடம் சொன்னான்: "முட்டாள்களே, யானை ஒரு பெரியபானை வடிவத்தில் உள்ளது".

இறைவனை வரையறுத்து விளக்க முற்படுவோர்களின் கதையும் இதுதான். ஏனென்றால், கடவுள் வாய் விளக்கத்துக்கு உட்பட்டவர் அல்லர்; அவர் அனுபவ உணர்வுக்கு உட்பட்டவர். குருடர்கள் கூறியதில் ஓரளவு உண்மையிருந்தாலும், அவர்கள் எல்லையில்லாத் தன்மையின் ஒரு பகுதியையே அறிந்திருக்கிறார்கள்.

எனவே, எல்லையில்லா இறைவனுக்கு எல்லைகள் கொடுத்து வரையறுப்பது என்பது முட்டாள்தனமான செயலாகும். அது, குருடன் ஒரு பொருளை வரையறுத்துக் கூறுவதற்கு ஒப்பாகும். உள் அனுபவம் என்னும் கண்ணே இறைவனைக் காண உதவும். இவ்வாறு காணப் பெற்றவர்கள், தாம் அடைய நினைத்த பொருள், தாம் காண முற்பட்ட அந்த யானை, தாமே தான் என்பதை

ஆத்மார்த்தமாய் உணருகிறார்கள். கடவுள் நம்முள்ளேயே உள்ளார்.

இன்னொருவருடைய கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி கூறக்கூடிய பண்டிதர்கள் இருக்கிறார்கள். அசாதாரண சக்தியைப் பெற்ற மனிதர்கள் இருக்கிறார்கள். ஆனால், உண்மையான சாதனை ஆத்மஞானமேயாகும். பகவான் ரமணர் சொல்லுவதைப் போல, எதிர் காலத்தைப் பற்றி கூறுவது, இன்னொருவர் நினைப்பதை அப்படியே கூறுவது முதலானவை ஆத்ம ஞானம் ஆகாது. தான் தன்னையறிதலே ஆத்மஞானம். ஆத்மாவை உணர்தல் என்பது உண்மையில் இறைவனை உணர்தலேயாகும்.

ஆதிசங்கரர், இறைவனுக்குரிய அதே அடையாளங்களை அல்லது அம்சங்களை பெற்றுள்ளதே ஆத்மாவாகும் என்கிறார். (உண்மையில் இங்கே இரண்டு விஷயங்கள் இல்லை. இருப்பது ஒன்றேதான்.) இறைஞானம், ஆத்மஞானம் அன்றி விளையாது. ஒருவன் ஆத்ம ஞானம் பெற்றவன் என்றால், அவன் இறையனுபூதியும் உடையவன் என்பது தெள்ளத்தெளிவு.

நாம் பௌதீக உலகில் உள்ள தேசங்களின் எல்லைகளைக் காப்பதில் தீவிர கவனம் செலுத்துகிறோம். ஆசை, ஆணவம், பொறாமை முதலான எதிரிகளை நம்முள்ளே இருக்கும் தேசத்தில் உலவவிட்டுவிட்டு வெளியில் சண்டை போடுகிறோம். நாம் எப்பொழுது, நமது பௌதீக தேசங்களைக் காப்பதற்காக வெளிப்படுத்தும் அதே ஆக்ரோஷத்தையும், துணிவையும், உள்முக எதிரிகளை விரட்டியடிப்பதற்காக தூண்டுகிறோமோ, அப்பொழுதுதான், கடவுள் நம்முள் உள்ளார் என்னும் உண்மையை உணர்வோம். நாம் நமது உள்முக எதிரிகளை விரட்டியடிக்க முற்படும்போது மற்றவர்களுடைய உள் எல்லைகளைக் காயப்படுத்தி விடக்கூடாது. கடவுள் எல்லோர் இதயங்களிலும்

உள்ளார்; அவர் எங்கும் நிறைந்தவர். வெளிச்சூழ்நிலை, உள் சூழ்நிலை இரண்டிலும் கடவுள் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறார்.

சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்: "இந்த உலகமும், நாமும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவர்கள் அல்ல. இந்த பிரபஞ்சத்திற்கும், தனக்கும் இடையே ஒரு சிறு வேறுபாட்டையும் காண்பவன், நரகத்தை உணர்வான். முன்னேறிச் செல்வாயாக. எவ்வாறாகினும், நீ இறைவனை உணர்வாய். ஆனால் போகும்போது, யாரையும் கீழே தள்ளிவிட்டு போகாதே." கீழே தள்ளி விடுதல் என்பது ஒருவருடைய உடலையோ, மனதையோ புண்படுத்துவதை மட்டும் குறிப்பிடவில்லை; அது ஒருவருடைய ஆத்ம விழிப்புணர்வுக்கான வழியில் இடையூறு செய்வதையே பிரதானமாக குறிப்பிடுகிறது.

மூன்று விஷயங்கள் அடைதற்கு அறியவை என ஆதிசங்கரர் குறிப்பிடுகிறார். 1. மனித பிறவி, 2. ஆத்மஞானத்தில் விருப்பம், 3. சத்குருவின் வழிகாட்டல். இரண்டாவது அறிய விஷயமான ஆத்ம ஞானத்தில் விருப்பம் ஏற்பட்டவர்கள், மூன்றாவது அரிய விஷயமான சத்குருவின் வழிகாட்டுதலுக்காக மிகவும் பிரயத்தனப்பட வேண்டியிருக்கும். நாம், அத்தகைய சில குருமார்களையும், அவர்களுடைய ஈடில்லா வழிகாட்டுதல்களையும் பெற்றுள்ளோம். சத்குரு என்பவர் இறைவனே ஆவார். ஆகவே உருவத்தில் வேண்டுமானால், சத்குரு பல பேராகத் தெரியலாம். உண்மையில் சத்குரு ஒருவரே. ஒரே செய்தி பல மொழிகள் வாயிலாகச் சொல்லப்படலாம். வார்த்தைகள் மாறலாம். உச்சரிப்பு மாறலாம்; வாக்கிய அமைப்புகள் மாறலாம். ஆனால் இவர்கள் அனைவரும் சொல்ல முற்படும் செய்தி ஒன்றே ஆகும். உண்மையான குரு அனைவருக்கும் பொதுவாகவே உள்ளார்; பிரித்தாராய்ந்து பகுத்துணரும் திறன் வடிவில் நம்முள்ளேயே உள்ளார். அவர், ஒருவருடைய ஆத்மாவைச் சுற்றி மூடியிருக்கும் மாயத்திரைகளை அகற்றுகிறார். அன்பு மற்றும் ஞானம் ஆகிய கண்களைத் திறக்கிறார். ஒருவருடைய தகுதிக்கும், தன்மைக்கும்

ஏற்றார்போல், அவர் உரிய வழியைக் காண்பிக்கிறார். ஆன்மீக வழிகள் (அ) சாதனைகள் அனைத்தும் மூன்று விதமான தடைகளை நீக்குவதற்காக அமைந்திருக்கின்றன.

அவை: 1)மாயையின் ஆதிக்கம், 2)கர்ம வினைகளின் தாக்கம், 3)இவற்றிற்கிடையே உழலும் மனது. ஆத்ம சாதகத்தில் அடையும் உணர்வு நிலை அவரவருடைய ஆன்ம ஞானத்துக்கான தாகத்தைப் பொறுத்தும், ஆத்ம சாதனைகளின் தீவிரத்தைப் பொறுத்தும் மாறுபடுகிறது. ஒருவர் தான், கடவுளின் தேசத்தில் வாழ்வதாக உணர்கிறார். இது சாலோகம் எனப்படுகிறது. ஒருவர் தான், கடவுளின் தேசத்தில், கடவுளுக்கு அருகாமையிலேயே இருப்பதாக உணர்கிறார். இது சாமீப நிலையாகும். இன்னொருவர் தான், கடவுளின் தேசத்தில் கடவுளுக்குரிய தகுதிகளோடு இருப்பதாக உணர்கிறார். இது சாரூப நிலை எனக் கூறப்படுதிறது. மற்றுமொருவர் தான், கடவுளின் தேசத்தில், தன்னுடைய தேசத்தில், கடவுளாகவே இருப்பதாக உணர்கிறார். இதுவே, சாயுஜ்ய நிலையாகும். இவ்வாறாக நாம் அனைவருமே கடவுளின் தேசத்தில் உள்ளோம். இதை இப்படியும் சொல்லலாம். கடவுள் நம் தேசத்தில் உள்ளார். நாம் எந்த அளவுக்கு அவரை உணர்ந்திருக்கிறோம் என்பது நமது ஆத்ம தாகத்தையும், முயற்சிகளையும் பொறுத்தது. தீவிர சாதனையில், இறை சிந்தனையில் ஈடுபடுபவர்கள், இறைவனின் அருகாமையைப் பெற்று வாழ்வின் மர்மத்தை உடைத்து விடுகிறார்கள். இறையுணர்வில் விருப்பமில்லாதவர்கள், அறியாமை என்னும் இருளில், நீர்க்குமிழிகளாக வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மையமும் ஒளிமயமானதுதான். ஆனால், அவர்கள் தங்கள் அறியாமையினால் அதனின்றும் தூர விலகி இருக்கிறார்கள்.

அத்வைத தத்துவம் சொல்வது இதைத்தான்: தேசமும், கடவுளும் வேறு அல்ல; இந்த உலகமும், அதைப் படைத்தவனும், வேறு வேறு அல்ல. இரண்டு எனபது இல்லை. இருப்பது ஒன்றேயாகும். அது

இறைவனே. அடிப்படையில், நாம் அனைவரும் ஒருவரே. நம்மைப் பற்றிய இந்த அடிப்படை உண்மையை உணரும் பொருட்டு ஒவ்வொருவரும் பிரயத்தனப்படுகிறோம். நம் அடிப்படையில் இருந்து நாம் வெகுதூரம் விலகி நிற்கிறோம். இந்த இடைவெளியை நிரப்ப முயற்சிக்கிறோம்.

இறைவன் எல்லோருள்ளும் இருக்கிறார். பல வடிவங்களில் பிரதிபலித்தாலும், எங்கும் நிறைந்துள்ள இறைத்தன்மை ஒன்றேயாகும். அப்படி இருந்தும், இறைவனுக்கும் நமக்கும் இடையே ஒரு இடைவெளியை உணருகிறோம். இருப்பதுபோல் தோன்றும் இந்த இடைவெளியை எப்படி அகற்றுவது? எப்படி இறைவனை அடைவது? அதற்குத்தான் சமயங்கள் உள்ளன. சமயங்கள் மனிதனுக்கும் இறைவனுக்குமான உணர்வுப் பாலத்தை வலிமையாக்குகின்றன.

சில மார்க்கங்கள் இந்த இணைப்பை, இறைவனிடம் அடிபணிதல் என்று கூறுகின்றன; சில சமயங்கள் இறைவனிடம் அன்பு செலுத்துதல் என்று சொல்கின்றன. சில சமயங்கள் இறைவனுடன் ஒன்றறக் கலத்தல் என்று குறிப்பிடுகின்றன. சில சமயங்கள் இறைவனைப் பற்றி எதுவும் பேசாமல், இறைத்தன்மைக்குரிய மார்க்கத்தைப் பற்றி மட்டும் பேசுகின்றன. என்னுடைய சமயம், இறைவனுடன் ஒன்றறக் கலந்து இறைவனாகவே இருக்கும் உணர்வைப் பற்றிப் பேசுகிறது. அது நன்கு சோதிக்கப்பட்ட நம்பிக்கைக்குரிய பாதைகளைக் கொண்டுள்ளது. ஒரு பாதை உழைப்பாளனுக்கு, அதாவது பிரதிபலனைப் பற்றி கவலைப் படாமல், உலக நலனுக்காக உழைக்கவேண்டும் என்று எண்ணுபவனுக்கு. இன்னொரு பாதை. விளக்கங்களையோ, தத்துவங்களையோ பற்றி கவலைப்படாமல் அனைத்தின் மீதும் அன்பு செலுத்தும் நுட்பமான இதயம் கொண்டவனுக்கு. மூன்றாவது பாதை தத்துவ ஞானிக்கானது. நான்காவது பாதை, மிருக உணர்ச்சிகளையும், மனித உணர்ச்சிகளையும் சுய முயற்சியால் வென்று இறைத்தன்மையில் நிலைபெறத் துடிக்கும்

யோகிக்கானது. இந்த நான்கு பாதைகளிலுமே ஒவ்வொருவரும் வெவ்வேறு விகிதங்களில் பயணிக்கின்றனர். ஆனால், இப்பாதைகளின் இறுதியான எல்லைகள் ஒன்றேயாகும். அந்த எல்லை நம்முள்ளேயே மறைந்து இருக்கிறது. சொல்லப்போனால், நாம்தான் அந்த எல்லையினின்றும் விலகி மறைந்து உள்ளோம். நமது உண்மையான இயல்பை யார் தான் உணர்த்துவது? கடவுள்தான். அவர் ஒரு சத்குருவாக அதாவது தன் இயல்பை உணர்ந்த ஒருவர் வடிவத்தில், வந்து நம் இயல்பை நாம் அறியும் பொருட்டு உதவி புரிகிறார்.

ஒரு சமய மார்க்கத்தின் அடிப்படை கட்டாயம் யாதெனில், அது தன்னையறிந்த அல்லது இறையனுபூதி பெற்ற ஒருவரை ஆரம்ப கர்த்தாவாகப் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அது அழிவது உறுதி. உதாரணமாக, அக்பரின் தீன் இலாஹி என்னும் மதத்தைக் குறிப்பிலாம். அரசரான அக்பர், தன் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முனைந்திருக்கலாம். ஆனால், அவர் ஆத்ம ஞானியோ அல்லது இறையனுபூதி பெற்றவரோ அல்லர். அதனால் அவருடைய கொள்கைகள், அவருக்குப் பின் நிலைக்கவில்லை.

எந்த உண்மையான சமயமும், மேலே குறிப்பிடப்பட்ட நான்கு பாதைகளைப் பற்றியதாகவே இருக்கும். நாம் ஏற்கனவே முன் அத்தியாயத்தில் குறிப்பிட்டதுபோல, கள்ளப்புலன்களை வென்று, மனதைக் கட்டுக்குள் கொண்டு வருவதே சமயங்களின் பொதுவான நோக்கமாகும். ஒரு செயலற்ற நிலையை இது குறிக்கவில்லை. உடல்ரீதியான புலன்களுக்கான வாசல்களைப் பொத்திக்கொள்வதை இது குறிக்கவில்லை. ஒருவர் முழு இதயத்துடனும், திறனுடனும் ஒரு நல்ல காரணத்துக்காக எவ்வளவு வேண்டுமானாலும் செயல்படலாம். ஆனால், அவர் உடல் மற்றும் மனம் கடந்த உணர்வு நிலையில் இருக்க வேண்டும். நாம் இந்த உடலையும், மனதையும் விட மேம்பட்டவர்கள் என்பதை

உணர, தீவிரமாக முயற்சிக்க வேண்டும். மனம் செம்மையாகும்போது அது நிகழும்.

"மனமது செம்மையானால்" எனத் தொடங்கும் பாடலின் பொருள்: மனம் செம்மையாகிவிட்டால் மந்திர உச்சாடனம் தேவையில்லை; மனம் செம்மையாகிவிட்டால் குண்டலினியை மேலே எழுப்பும் யோகப் பயிற்சி செய்ய வேண்டியதில்லை. மனம் செம்மையாகிவிட்டபிறகு, எந்த வினையையும் செய்யவேண்டியதில்லை. இதற்கு எதிர்மறையான ஒரு பொருளும் உண்டு. மனம் செம்மையாகும் வரை, மந்திர உச்சாடனம் செய்து கொண்டிரு. மனம் செம்மையாகும் வரை, குண்டலினியை மேலேழுப்பும் யோகப் பயிற்சிகள் மேற்கொள். மனம் செம்மையாகும் வரை, பிரதிபலன் எதிர்பாராமல் சத்கர்மங்கள் செய்துவா. ஏதாவது ஒரு வழியில், உன்னுடைய மனதை செம்மையாக்க முயற்சி செய்துவா. இந்த ஆன்மீக முயற்சியே சாதனை எனப்படுகிறது. எண்ணெய்ப் பாத்திரம் நிரம்பி வழியும்போது, அதில் மேலும் எண்ணெய் ஊற்ற வேண்டியதில்லை. நிரம்பிய பாத்திரம் நிரம்பியவாறு இருக்குமாறு பார்த்துக்கொண்டால் போதும். ஆனால் பாத்திரம் நிரம்புவது என்பது மாயாஜாலங்களால் நிகழாது. ஒவ்வொருவரும் அவரவர் பாத்திரத்தை, அவரவர் முயற்சிகளாலேயே நிரப்ப வேண்டும். உலகின் அனைத்து ஆத்மஞானிகளும், இந்த நிரப்புதலை பல பிறவிகளில் செய்து வந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.

சாமானியர்கள் வரும்போதே, தங்கள் பாத்திரங்களில் – காமம், பேராசை, இயல்புக்கு வேறான குணங்கள் முதலான ஓட்டைகளுடன் வருகிறார்கள். எனவே, அவர்கள் தங்கள் பாத்திரங்களை நிரப்ப எவ்வளவுதான் முயற்சித்தாலும், ஏதாவது ஒரு ஓட்டை வழியாக அவர்களுடைய முயற்சிகள் வீணடிக்கப்படுகின்றன. பாத்திரங்கள் காலியாகவே இருக்கின்றன. அவர்கள் நம்பிக்கையுடன் தங்களது முயற்சிகளைத் தீவிரப்படுத்தும்போது, கடவுள் அவர்களுக்கு உதவுகிறார்.

கடவுளின் அருளால், அவர்களது பாத்திரம் நிரம்பி, அவர்களுடைய சாதனைகள் பயன்பெறுகின்றன.

இதே கருத்து வேறுமுறையிலும் சொல்லப்படுகிறது. பல குப்பைகளைக் கொண்டுள்ள உன்னுடைய பாத்திரத்தை, ஆன்மீக சாதனைகள் மூலம் காலி செய்வாயாக. ஒருவர் எவ்வளவுதான் முயற்சித்தாலும், காமம், பேராசை போன்ற குப்பைகள் பாத்திரத்தில் விழுந்த வண்ணம் உள்ளன. அந்த பாத்திரத்தை முழுவதுமாக சுத்தம் செய்ய தீவிர முயற்சியும், அதற்கும் மேலாக இறையருளும் வேண்டும். இறைவனின் அருளால் மட்டுமே இறையனுபூதியைப் பெற முடியும். தமக்குத்தாமே முயற்சி செய்பவர்களுக்கு இறைவன் உதவி புரிகிறார். இரு கைகளையும் மேலெழுப்பி, இறைவனை நோக்கி அபயம் வேண்டி நிற்பவர்களை அவர், மேலே எற்றி விடுகிறார். இவ்வாறாக சமயத்தின் முக்கிய நோக்கம் யாதெனில், ஆத்ம சாதனைகள் புரிந்து, மனதைச் செம்மைப்படுத்துவதன் மூலமாக, இறையருளுக்குப் பாத்திரராகி. தன்னுடைய உண்மை நிலையை, ஆத்ம ஒளியை தன்னுள்ளேயே உணருவதேயாகும். மனித வாழ்வின் நோக்கமும் இதுவேயாகும்.

மனம் செம்மையாவது அல்லது சுத்தமாவது என்பது பல விதங்களில் நடக்கிறது. ஒருவர் வினைகளைச் செய்வதன் மூலம் மனதைச் செம்மையாக்கலாம்; மற்றொருவர் எந்த வினைகளையும் செய்யாமலிருப்பதன் மூலம் மனதை செம்மையாக்கலாம். ஒருவர் பக்தி மார்க்கத்தை கடைப்பிடிப்பவராக இருக்கலாம். இன்னொருவர் யோக மார்க்கத்தைக் கைக்கொண்டிருக்கலாம். இவை அனைத்தின் நோக்கம் ஒன்றே. மனம் செம்மையடைய வேண்டும். நாம் தெளிவான மனதைப் பெற்றிருந்து, அதன் வெளிப்புற ஓட்டங்களைத் கட்டுப்படுத்துவோமானால், ஆத்ம தரிசனம் என்பது உள்ளே நிகழும். அனைவருமே ஒரு குறிப்பிட்ட பாதையைத்தான் கடைப்பிடிக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்த முடியாது. ஏனென்றால், நம் இருப்பு நிலையின் அடிப்படை இயல்பே சுதந்திரம்

என்பதாகும். நம் விருப்பங்களையும், வழிகளையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் சுதந்திரத்தை நாம் அனைவருமே பெற்றுள்ளோம். தவறான செயல்முறை மேற்கொள்ளாமல் அவற்றைத் தவிர்ப்பது என்பது பிறறது வற்புறுத்தலுக்கு அப்பாற்பட்ட நமது இயல்பான கடமையாகும். ஆன்மீக சாதனைகளைப் பற்றி கூறும்போது, மார்ட்டின் லூதர் கிங்-கின் வார்த்தைகளைக் குறிப்பிடுவது பொறுத்தமாக இருக்கும். "உன்னால் பறக்க முடியாவிட்டால் ஓடு; ஓட முடியாவிட்டால் நட; நடக்க முடியாவிட்டால் ஊர்ந்து செல். நீ என்ன செய்தாலும், முன்னேறிச் சென்றே ஆகவேண்டும்" முன்னேற்றம் என்பது, இங்கே உணர்வுநிலை மாற்றத்தை, தன் இயல்பைத் தானறிந்து கொள்வதைக் குறிக்கிறது.

வெவ்வேறு மார்க்கங்களில் செல்பவர்கள், தாங்கள் செல்லும் பாதை மட்டுமே சரியானது என்று தமக்குத்தாமே முடிவு செய்து கொண்டு, மற்றவர்களுடன் மோதிக் கொள்கின்றனர். சமயம் அல்லது மார்க்கம் என்பது தனிநபர் எல்லைக்குள் இயங்குவது. அது தனி நபர்கள் தங்கள் மனங்களை சுயசுத்திகரிப்பு செய்துகொள்ள வாய்ப்புகளை வழங்குகிறது. பிறரை தன் சமய எல்லைக்குள் கொண்டுவர நேரத்தை வீணடிக்காமல், தனக்குரிய வழியில் திடமாக முன்னேறுவதற்கான தகுதிகளை வளர்த்துக் கொள்ளவே ஒருவர் முயலவேண்டும்.

தனக்குரிய பாதையில் – அது சேவையாகட்டும், பக்தியாகட்டும், விசாரணையாகட்டும் அல்லது யோகமாகட்டும் – ஒருவர் முயற்சியுடன் ஊன்றி செயல்படாத வரைக்கும், அவருக்கு வேறு எந்த காரணியும் பக்குவத்தை வழங்கிவிடாது. சுய முயற்சி இல்லாமல், வெறும் ஆன்மீக புத்தகங்களை படிப்பதாலோ, பிரசங்கங்களிலும், பெருத்த கூட்டங்களிலும் கலந்து கொள்வதாலோ ஒருவர் பக்குவமடைந்துவிடமாட்டார்.

ஒருவர் உண்மையிலேயே தன்னை மாற்றிக்கொள்ள விரும்பினால், ஒரு புதிய பரிமாணத்திற்குள் செல்ல விரும்பினால், அவர் தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள சாவியை, உபயோகிக்கவேண்டும். சாவி அதாவது சமயம் என்பது தனி நபரின் தன்மையைப் பொறுத்தது. சாவியைப் புகழ்ந்து பேசுவதோ அல்லது அதைக் குறை கூறுவதோ எந்த விதத்திலும் உதவாது. ஒருவர் தன்னுடைய தற்போதைய நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஒரு புதிய உன்னதமான உணர்வு நிலைக்குச் செல்ல நினைத்தால், அவர் அந்த சாவியை சரியான முறையில் செலுத்தி இயக்கவேண்டும். அவர் சாவியை உபயோகிக்கவே இல்லை என்றாலோ அல்லது சாவியை தனது அறியாமையாலும், பொறுப்பற்ற தன்மையாலும் சேதப்படுத்திவிட்டாலோ, தவறு அவருடையதே ஆகும், சாவியினுடையது அல்ல. தன்னைத்தானே மாற்றிக்கொள்ள துணிவு இல்லாத ஒருவர் தனக்குரிய சமயத்தைக் குறை கூறுகிறார்; சாவிகளை மாற்றுவது போல் சமயங்களை மாற்றிக் கொண்டிருக்கிறார். இறைவன் ஒவ்வொருவரையும் அவரவருக்குரிய மிகப் பொருத்தமான சாவியுடன் இவ்வுலகுக்கு அனுப்புகிறார்.

நமது கர்ம வினைகளையும், நமது ஆத்ம உணர்தலையும் நமக்குண்டான சாவியின் மூலம் செயல்படுத்திக் கொள்ள வேண்டும். ஒருவர் ஆத்ம ஞானத்தை விரும்பாத வரையில், அதற்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்ளாத வரையில், எந்த சமய மார்க்கமும் அவருக்குக் கைகொடுக்க முடியாது. ஒருவர் தன்னையறிதல் அல்லது இறைவனை அறிதல் என்ற விஷயத்தில், தனக்குத்தானே உண்மையாக இல்லாத பட்சத்தில், வெறும் சாவிகளை மாற்றுவதால், அதாவது வெறும் மதமாற்றங்களால் யாதொரு பயனுமில்லை. ஒரு சமய மார்க்கத்திற்கு மாறி விடுவதால் மட்டும் ஒருவர் ஆத்ம ஞானியாக அல்லது இறையனுபூதி பெற்றவராக மாறிவிடமுடியும் என்றால், அந்த மதத்தில் இருக்கும் அனைவருமே ஆத்ம ஞானிகளாக இருக்க வேண்டும். ஆனால், உண்மை என்னவெனில், அஞ்ஞானிகளும்,

குற்றவாளிகளும் அனைத்து மதங்களிலும் உள்ளனர். எனவே, சோதனை நடத்தப்படுவது ஒருவருடைய சமயத்துக்கு அல்ல – அவர் தன்னறிதலுக்காக மேற்கொண்டுள்ள முயற்சிகளின் உண்மைத் தன்மைக்கு. ஒவ்வொரு சமயமும் தனக்கென சில சிறப்புத் தன்மைகளைப் பெற்றுள்ளது. ஒரு சிலருக்கு அவை தேவைப்படலாம், பலனும் தரலாம். அனைவருக்கும் அதே மாதிரியான பலன்களை அந்த சமயம் தரவல்லது என்று கூறமுடியாது. ஏனென்றால் அது அதைச் சார்ந்திருப்பவரின் உண்மைத்தன்மையைப் பொறுத்தது. எல்லா உண்மையான சமயங்களும் தன்னுணர்வு அல்லது இறைஉணர்வு, இவற்றுக்கான வழிகளை போதிப்பதாய் உள்ளன. எந்த ஒரு சமய மார்க்கம் இதைச் செய்யவில்லையோ அது சமயமே அல்ல. இந்தியாவின் சமயங்கள் ஆத்ம ஞானம் அல்லது இறைஞானம் என்னும் பொதுவான நோக்கத்தைப் பெற்று ஆழமான தத்துவங்களையும், நிரூபிக்கபட்ட பாதைகளையும், மாறுபட்டு நிற்கும் மனிதர்களுக்காக தன்னகத்தே கொண்டுள்ளன.

சுவாமி விவேகானந்தர் கூறுவதைப்போல், ”சமயம் என்பது உணர்தல், வெறும் வசீகரமான பேச்சுக்களோ, விளக்கங்களோ, வியாக்கியானங்களோ அல்ல. முழு ஆத்மாவும் அது எதை நம்புகிறதோ, அதுவாகவே மாறி விடவேண்டும். இதுவே (இதைச் செய்வதே) சமயம் ஆகும்.”

## கடவுளை எப்படிக் காண்பது?

வேதாந்தத்தின்படி, கடவுளைக் காணக்கூடிய கண்கள் இரண்டு. ஒன்று பிரேமஸாக்ஷீ அதாவது அன்புக்கண், இன்னொன்று ஞானஸாக்ஷீ அதாவது ஞானக்கண். அன்புக்கண் ஆத்மஞானத்தைக் காட்டுகிறது. ஞானக்கண் இயல்பாகவே அன்பாக ஒளிர்கிறது. கடவுளிடம் அன்பு, ஆத்ம ஞானம் இவையிரண்டுமே இறைவனை உணர்த்துகின்றன. இவையல்லாது, இறைவனை உணர்தல் அல்லது காணுதல் என்பது இயலாத செயல். எனவே பிரம்மானுபவ உபநிடதம் "ஞானக்கண் அல்லது அன்புக்கண், இறைவனைக் காணத் தேவைப்படுகிறது" என்று சொல்கிறது.

கடவுளிடம் அன்பு என்பது, எல்லா உயிர்களிடத்தும் பரவி நிற்கும் இறைவனிடம் - அதாவது அனைத்து உயிர்களிடமும் - செலுத்தும் அன்பு ஆகும். ஆத்ம ஞானம் என்பது, உல்லா உயிர்களிடத்தும் இரண்டறக் கலந்து, தன்னுள்ளும் அவ்வாறே ஒளிவீசிக் கொண்டிருக்கும் ஆத்மனை உணர்தல் ஆகும்.

ஞானப்பாதை, அன்புப்பாதை இவை இரண்டுமே உள்முகமானவை. நமது தேடலும் உள்முகமானது. இவ்வாறு இருக்கும்போது, நாம் ஏன் கோயில்களுக்கும், சர்ச்சுகளுக்கும், மசூதிகளுக்கும், குருத்வார்களுக்கும், தர்மசாலாக்களுக்கும், இன்னபிற மதம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த இடங்களுக்கும் செல்லவேண்டும்? நம்முடைய இயல்பான அமைதி மற்றும் ஆனந்தம் ஆகியவை, நம்முடைய தவறான போக்கினால் விளையும் துன்பங்கள் மற்றும் பயங்கள் முதலான புழுதிகளால் மூடப்பட்டுவிடுகின்றன. அத்தகைய தருணங்களில், நாம் அமைதியையும், ஆறுதலையும் வெளி இடங்களில் தேடுவதைத் தவிர வேறு வழியில்லை. இத்தகு

திவ்ய தேசங்களை நாம் இதயபூர்வமாக அணுகும்பட்சத்தில், அங்கு தடையின்றி வெளிப்பட்டுக் கொண்டு இருக்கும் ஞான மற்றும் அன்பு ஊற்றுக்கள், நம் உள் இயல்பை தூய்மையாக்குவதாய் அமைகின்றன. இந்த மாற்றங்களை நாம் பிரத்யக்ஷமாக எல்லா தருணங்களிலும் உணருகிறோம் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில், இந்த நுட்பமான உள் விளைவுகள் நுட்பமாகவே நிகழ்கின்றன.

உள்முகமாக விழித்துக் கொண்டிருப்பவர்களுக்குத் தான் இந்த வெளிப்புற உதவிகளும் கிட்டுகின்றன. ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமத்தில் ஒரு தோத்திரம்: "அந்தர்முக சமாராத்யா, பஹிர்முக சதுர்லப" இதன் பொருள், உள்முகமான சாதனைகளால் இறைவனை எளிதில் உணரலாம். வெளிப்புற தேடல்கள் மிகவும் அரிதாகவே உதவுகின்றன. இந்த வரி, ஒரு எதிர்மறையான கருத்தை வெளிப்படுத்துவது போல் தோற்றம் அளிக்கிறது. ஆன்மீக நாட்டம் அல்லது இறை நாட்டம் இல்லாத குருடர்களுக்கு வெளிப்புற சடங்குகளாலோ, பூசைகளாலோ, யாதொரு பயனுமில்லை. இறையுணர்வு என்னும் விளக்கை, அவர்கள் ஏற்றாமல் இருப்பதால் வெளிப்புறத்தில் பிரதிபலிக்கும் தெய்வீகத்தை அவர்கள் உணர்வதே இல்லை. ஞான ஒளி பெற்றோர், எல்லா இடங்களிலும் இறைவனையே காண்கின்றனர். அந்த ஒளி கிடைக்கப்பெறாதவர்கள், கடவுள் நேரெதிரில் நின்றாலும், அவரைக் காண்பதில்லை. இதனால்தான் வெளிமுகமான ஆன்மீக தேடுதலைக் குறித்து நாம் மாறுபட்ட அனுபவங்களையும், கருத்துக்களையும் பெற்றுள்ளோம். உள்ளொளி பெறாதவர்கள், எதையுமே உணர்வதில்லை. சிறிதளவு ஒளி பெற்றவர்கள், அதற்கேற்றார்போல் காண்கின்றனர். சூரியனைப்போல் ஜொலிப்பவர்கள் அனைத்தையும் மிகத்தெளிவாக காண்கின்றனர்- மற்றவர்கள் காண்பதற்கும் வழிகாட்டுகின்றனர். அதனால்தான் காந்திஜி இவ்வாறு கூறினார்: 'ஒருவனுடைய உள்ளொளியின் பிரகாசத்தைப் பொறுத்தே, அவன் இறைவனைக் காண்பதும் அமைந்திருக்கும்'. எனவே,

நாமனைவரும் நம் உள் ஒளியைப் பெருக்கிக் கொள்ள அனைத்து வழிகளிலும் முயலவேண்டும். வெளிப்புற வழிபாடுகள், உள்முக வழிபாட்டை ஊக்குவிப்பவையாக இருக்க வேண்டும். வெளிப்புற வழிபாட்டின் உன்னதமான அனுபவங்கள், உள்முகமான தேடலுக்கு சாதனங்களாக மாற்றப்படாதவரை, வெளிப்புற வழிபாடுகளால் பயன் ஏதும் இல்லை.

இந்த புத்தகத்தில், திருவண்ணாமலை ஜோதி படமும், உள்ளொளி பெற்ற ஒரு யோகியின் படமும் ஒருங்கே இடம்பெற்றுள்ளன. இந்த படத்தின்கீழே இருபுறங்களிலும், இரண்டு விளக்குகள் உள்ளன. இந்த படம் வெளிப்படுத்தும் உண்மை: திருவண்ணாமலை ஜோதியின் வல்லமை மற்றும் மேன்மை, உள்ளொளி பெற்ற ஒருவருக்கே விளங்கும். உள்ளொளி பெறாமல் புற ஒளியில் தெய்வீகத்தை உணர்வது என்பது அரிது. இந்த உள் ஒளியை ஞானமாகிய விளக்கும், அன்பாகிய விளக்கும் தூண்டுகின்றன.

“இந்த உடலே இறைவன் உறையும் ஆலயமாகும். உள்ளிருக்கும் ஜீவனே, ஒப்புயர்வற்ற சிவனாவான். நிர்மால்யத்தை நீக்கி ஸோஹம் (அவனே நான்) என்று தியானியுங்கள்” – மைத்தேரயி உபநிஷத்.

'கடவுள் நம் தேசத்தில் உள்ளார்' எனும் செய்தி நம்முள்ளேயே ஊடுருவியிருக்கும் இறையுணர்வையே குறிக்கிறது. இறைத்தன்மையை வெளிப்படுத்தும் இந்த தேசத்துக்குச் செல்ல தூய்மையான மனம் என்னும் விசா வேண்டும். இதன் அடிப்படையில், ஞான மற்றும் அன்பு விமானங்கள் நம்மை அங்கே கொண்டு செல்கின்றன.

ஒரு சாமானியனால் பெரும்பாலும் தவறாகவே புரிந்து கொள்ளப்படும் அன்பு, ஞானம், சமயம், கடவுள் ஆகிய சொற்கள் எந்த அளவுக்கு ஒன்றுக்கொன்டு தொடர்பு கொண்டுள்ளன என்பதை என்னால் உணர முடிகிறது.

என்னுடைய வலைதளம் "கடவுள் நம் தேசத்தில் உள்ளார்" எனும் செய்தியைப் பரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்டது. மனிதர்கள் இயல்பாகவே தெய்வத்தன்மை பொதிந்தவர்கள் எனும் செய்தியை இது பரப்புகிறது.

மாறுபட்ட கருத்துக்கள் நிலவும் இந்த உலகில், இந்த பக்கங்கள், அவற்றைப் படிப்பவர்களுடைய பதிலிறுக்கப்படாத ஆத்ம தேடலை, ஆத்ம தாகத்தை தூண்டிவிடும் என்று நம்புகிறேன்.

கடவுள் நம்முள்ளேயே ஆத்ம ரூபத்தில் இருக்கிறார் எனும் இந்தச் செய்தி நறுமணம் போல ஆடம்பரம் இல்லாமல், சத்தம் இல்லாமல் பரப்பப்படும். இந்த செய்தி, வெளியுலகில் பரப்பப்பட்டால்தான், அதை ஊன்றி கேட்பவர்கள் அதை தங்களின் உள்ளே கிரகித்து உணருவதற்கான, பரப்புவதற்கான வாய்ப்புகள் அமையும். இந்த இருவகை செய்திப் பரப்புதல்களும் நிகழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

## இந்தியாவும், இந்த செய்தியும்:

இந்தியாவுடன் தொடர்புபடுத்தாமலேயே, இந்த செய்தியை ('கடவுள் நம் தேசத்தில் உள்ளார்') நாம் இதுவரை கண்டிருந்தாலும், இந்தியாவுக்கும், இந்த செய்திக்கும் ஒரு தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. ஸ்ரீபரமஹன்ச யோகானந்தர் தன்னுடைய சுயசரிதையில் இவ்வாறு கூறுகிறார்: "சோடோம் நகரம், நேர்மையான பத்து நபர்கள் அங்கு இருக்கும்பட்சத்தில் அவர்களின் பொருட்டு, அழிவிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும்" என்று அப்ரஹாம் கடவுளிடம் வைக்கும் விண்ணப்பமும், அதற்கு இறைவன், "நான் அந்த நகரத்தை அந்த பத்து பேருக்காக அழிக்காமல் விட்டு வைப்பேன்" என்று பதிலிறுப்பதும், இந்தியாவின் அழியாத்தன்மை குறித்த ஆய்வில், ஒரு புதிய அர்த்தத்தை வெளிப்படுத்துகின்றன. வரலாற்றின் ஒரு காலகட்டத்தில், இந்தியாவின் சமகாலத்தைய, வலிமை வாய்ந்த, போர் நுணுக்கங்களில் தேர்ச்சி பெற்றிருந்த, பண்டைய எகிப்து, பாபிலோனியா, கிரேக்கம், ரோமாபுரி முதலான பேரரசுகள் காணாமல் போயின. (இந்தியாவின் கலாச்சாரம் இன்றும் நிலைத்து நிற்கிறது)".

"இறைவனின் பதில் ஒரு விஷயத்தை தெளிவாக்குகிறது. அது யாதெனில், ஒரு நாடு நீடித்து வாழ்வது என்பது, அதனுடைய பொருள் சார்ந்த சாதனைகளால் அல்ல; மாறாக அதனுடைய தனித்துவம் பொருந்திய மனிதர்களால்தான். எந்த ஒரு நாடு, இலஞ்சம் கொடுத்து ஏமாற்றமுடியாத (பாரபட்சமற்ற) இறைவனின் கண்ணோட்டத்தில், உயர்ந்தவர்கள் என்று சொல்லத்தக்க பத்து பேரை உருவாக்க வல்லதோ, அந்த நாடு அழிவு என்பதைக் காணாது."

இத்தகைய கண்ணோட்டங்களை கவனிக்கும்போது, காலத்தின் ஆயிரக்கணக்கான தந்திரங்களை எதிர்த்து, இந்தியா நிலைத்து, தன்னை நிரூபித்திருப்பது, ஒரு ஏதேச்சையான காரணமற்ற செயல் அல்ல என்பது தெளிவாகிறது. தன்னை உணர்ந்த குருமார்கள், ஒவ்வொரு நூற்றாண்டிலும் இந்த மண்ணை புனிதப்படுத்தியிருக்கிறார்கள்."

"கடவுள் நம் தேசத்தில் உள்ளார்" என்னும் செய்தி உண்மையாகவே, இந்தியாவுடன் ஒரு தனிப்பட்ட தொடர்பைக் கொண்டுள்ளது. எவ்வாறெனில், இந்தியாவில் பௌதீக உடலிலோ, வேறு விதமாகவோ, அன்பையும், ஞானத்தையும் வெளிப்படுத்தும் ஆன்மீகவாதிகள், எல்லா கால கட்டங்களிலும், மற்ற அனைவரும் அந்த ஒரே இறைவனின் திருவடிகளைப் பற்றி உய்யும் பொருட்டு வாழ்ந்து வருகிறார்கள். அவர்களின் அன்பு மற்றும் ஞானமாகிய ஒளியினால், சாமானியர்களும் வழிநடத்தப்படுகிறார்கள். இந்த சாமானியனின், இந்த நூலே மேற்கூறிய உண்மைக்குச் சான்று. இறைவனை உணர்ந்தவன், இறைவனாகவே ஆகிறான்.

இறைவன் நமது தேசத்தில், அதாவது இந்தியாவில் இருக்கிறார் என்று சொல்வது ஒருவிதத்தில் மெய்யே ஆகும். எவ்வாறு எனில், இறைவனை உணர்ந்தவர்களின் ஆசீர்வாதங்களையும், விழிப்புணர்வு நிலையையும், வெவ்வேறு பரிமாணங்களில் வெளிப்படுத்தக்கூடிய அருள்செறிந்த பிரதேசங்களை இந்தியா தன்னுள் பெற்று, இந்த மொத்த மனித சமூகமும், மற்ற ஜீவராசிகளும், காலம் மற்றும் வெளி ஆகிய எல்லைகளற்ற பெருங்கடலில் அலைக்கழிக்கப்படாமல், சமநிலையுடன் நின்று உய்ய வழிகாட்டுகிறது.

இந்தியாவைக் குறித்து உலகத்தின் சில பிரபலங்கள் கூறியவை இங்கு கொடுக்கப்பட்டுள்ளன:

"என்னை யாராவது எந்த வானத்தின் கீழ், மனித மனம் தனது தேர்ந்தெடுக்கப்பட்ட சன்மானங்களை முழுமையாக

**வளர்த்துள்ளது**, **இந்த வாழ்க்கையின் மிகப்பெரிய சவால்களை உச்சகட்ட ஆழத்துடன் சிந்தித்துள்ளது**, **அவற்றுக்கான தீர்வுகளையும் கண்டுள்ளது என்று கேட்டால்**, **நான் இந்தியாவை சுட்டிக்காட்டியாக வேண்டும்**". – **மேக்ஸ் முல்லர்** (**ஜெர்மானிய அறிஞர்**, 1823-1900)

"**சமயத்தைப் பொறுத்தவரையில் இந்தியாதான் ஒரே கோடீசுவரன்**. **இந்த ஒரு தேசம்தான்**, **அனைவரும் பார்க்க விரும்புவது**. **யாரொருவர் இத்தேசத்தை ஒரே ஒரு தடவை**, **ஒரு நொடிப் பொழுதாகினும் காண்கின்றனரோ** (**ஆன்மீக கண்ணோட்டத்தில்**), **அவர் இதர உலகத்தின் ஒட்டுமொத்தக் காட்சிகளுக்காக** (**இந்தியாவின்**) **அந்த ஒரு நொடிக் காட்சியை விட்டுக் கொடுக்க மாட்டார்**". – **மார்க் ட்வைன்** (**அமெரிக்க எழுத்தாளர்**, 1835-1910)

"**இது தெளிவாகிக் கொண்டு வருகிறது**. **அதாவது**, **எந்த ஒரு அத்தியாயம் மேற்கத்திய ஆரம்பத்தைப் பெற்றுள்ளதோ**, **அது தாங்களே தங்களை அழித்துக்கொள்ளும் மனித சமுதாயத்தை முடிவாகக் கொள்ளக்கூடாது என்றால்**, **அது இந்திய முடிவை** (**ஆத்ம பலம் மற்றும் அனைவரும் ஆத்ம ஸ்வரூபங்களே என்னும் ஆத்மஞானம்**) **பெற்றிருக்க வேண்டும்**. **இந்த உச்சகட்ட அபாயகரமான சூழ்நிலையில்** (**அது உலகப்போர்கள் நடைபெற்ற சமயம்**) **மனிதன் உய்ய ஒரே வழி**, **இந்திய வழிதான்**." – **டாக்டர் அர்னால்ட் டொய்ன்பீ** (**பிரிட்டிஷ் வரலாற்று ஆய்வாளர்**, 1889-1975)

"**மனிதன் தன் இருப்பை கனவு காண ஆரம்பித்த நாட்களிலிருந்தே**, **வாழும் அனைத்து மனிதர்களின் கனவுகளும் அடங்கி இருக்கும் ஒரு இடம்**, **இந்த உலகத்தின் முகப்பில் இருக்கிறது என்றால்**, **அது இந்தியாதான்**." - **ரொமைன் ரேபிலண்ட்** (**பிரெஞ்சு தத்துவ ஞானி**, 1886-1994)

"**நான் இந்தியாவில் எல்லோரையும் போல மரணிக்கக்கூடிய ஒரு சமுதாயத்தைக் கண்டேன்**; **ஆனால்**, **அவர்கள் மரணத்தை ஏற்றுக்கொள்பவர்களாக இல்லை**. (**நான் அங்கு**) **நகரத்தில்**

வாழ்பவர்களைக் கண்டேன்; ஆனால், அவர்கள் அந்நகரங்களோடு ஒன்றி விடுபவர்களாக இல்லை. (நான் அங்கு) அனைத்தையும் தம் வசம் உடையவர்களைக் கண்டேன். ஆனால், எதுவும் அவர்களை வசப்படுத்துவதாக இல்லை." – அப்போலினியஸ் டையானியஸ் (கிரேக்க யாத்திரிகர், முதலாம் நூற்றாண்டு, CE)

"இந்த ஒட்டுமொத்த உலகத்தின் அனைத்து ஆரம்பங்களும் இந்தியாவில்தான் நிகழ்ந்தன. இந்தியா முதல் நாகரிகத்தைப் பெற்றிருந்தது. இந்தியா பொருள் செல்வத்தைச் சேமிப்பதில் முதலாவதாக இருந்தது. ஆழமான சிந்தனைவாதிகளையும், நுட்ப ஞானிகளையும் பெற்று அந்நாடு பெருமையுடன் திகழ்ந்தது. அந்நாடு சிகரங்களையும், மரவளங்களையும், ஒரு பழுத்த ஆன்மாவையும் பெற்றிருந்தது… என்னுடைய பாரபட்சமற்ற பகுத்தாயும் அறிவுக்கு எட்டிய வரையில், சூரியன் தன் சுற்றுப்பாதையில் காணும் நாடுகளிலேயே மிகவும் தனித்தன்மை வாய்ந்த நாடாக இந்தியாவை உருவாக்குவதற்கு, அங்குள்ள மனிதர்களோ, இயற்கையோ தவறவில்லை. அங்கு செய்ய வேண்டியவற்றுள் எதுவும் மறக்கப்படவில்லை; குறைத்து மதிப்பிடப்படவும் இல்லை." – மார்க் ட்வைன்.

"இந்த நூற்றாண்டின் முடிவில், உலகம் மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்தில் இருக்கும். ஆனால், 21ஆம் நூற்றாண்டில், இந்தியா தன்னிடம் ஆதிக்கம் செலுத்தியவர்களை ஆதிக்கம் செலுத்தும்." – டாக்டர் அர்னால்ட் டொய்ன்பீ (பிரிட்டிஷ் வரலாற்று ஆய்வாளர், 1889-1975)

ஆம். இந்தியா இந்த உலகத்தில் ஆதிக்கம் செலுத்தும் – ஆயுதங்களால் அல்ல. அன்பாலும், சகோதரத்துவத்தாலும். இந்தியா, இந்த பௌதீக உலகில் ஆதிக்கம் செலுத்துவதற்காக இங்கு இல்லை; ஒவ்வொருவரும் தன்னை தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொள்வது எப்படி என்பதை இந்த உலகத்தாருக்கு கற்றுக் கொடுக்கவே இந்தியா இங்கு உள்ளது.

இந்த புத்தகத்தின் நோக்கம் தெளிவாக உள்ளது. 'ஒவ்வொருவருடைய இறைத்தன்மையை நினைவூட்டுதற்காகவும்', 'அனைத்து ஜீவராசிகளின் நன்மைக்காகவும் உள்ள இந்த தேசத்தின் தனித்தன்மை வாய்ந்த கலாச்சாரத்தையும், சமயக் கோட்பாடுகளையும் தெரிந்துகொண்டு கடைப்பிடிக்க தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற வாய்ப்பையும், பொறுப்பையும் இத்தேச மக்களுக்கு நினைவூட்டுதற்காகவும்' தான் இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இதற்குப் பொருள், இறைவனைக் காணக்கூடிய ஒரே இடம் இந்தியாதான், என்பதல்ல. இறைவனை உணர்ந்த ஞானிகள் இந்த உலகத்தின் எல்லா பகுதிகளிலும் இருக்கிறார்கள். ஆனால், இந்தியாவில் மனித வாழ்வின் முடிவான நோக்கம், மிகத் தெளிவாகவும், உயிரோட்டத்துடனும் திகழ்கிறது. இதற்குக் காரணம், இந்த தேசம் முழுவதும் பரந்துள்ள ஆன்மீக அதிர்வலைகளின் வலுவான தூண்டுதலேயாகும். அனைவரும், ஏதாவது ஒரு வகையில் இதை உணர்கின்றனர். இந்த ஆன்மீக அதிர்வலைகள், வேற்றுமைகள் கடந்து, இந்த உலகத்தின் அனைத்து தரப்பினருக்காகவும் விளங்குகின்றன.

நாம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்பை அங்கீகரித்துள்ளோமா? அந்த வாய்ப்பை உரிய முறையில் செயல்படுத்துகிறோமா? விடை எதுவாயினும், இந்த நூல், அதன் விளைவினை மேலும் மேன்மையாக்குவதற்கான தீவிரத்தைப் பெற்றிருக்கிறது.

இது குறித்த என்னுடைய அபிமானங்கள், விளக்கங்கள், வாதங்கள் மற்றும் விசாரணைகள் இந்தியா பேசுகிறது (Thus Spake India), ஒரு கடற்பயணம் (A bon voyage) முதலான தலைப்புகளில் தனித்தனியாக வெளியிடப்பட்டுள்ளன. இவையனைத்துமே பொதுவான ஆன்மீகத்துக்கும், இந்தியாவின் தனித்தன்மைக்கும் துணை நிற்பனவாய் அமைந்துள்ளன. இவ்விரண்டிற்கும் பெரிதாக ஏதும் வேறுபாடில்லை. ஆன்மீகமே, இந்தியாவின் தனித்தன்மையாகும்.

இந்த நூல்கள் அனைத்தும், தனி நபர்களுக்கான, சமுதாயத்துக்கான மற்றும் அரசியல் அமைப்புகளுக்கான பொறுப்புகளை, பாத்திரங்களைப் பற்றி கூறுவதாக அமைந்துள்ளன. ஆள்பவர்கள், அரசாள்வதுடன், நமது கலாச்சாரத்தை காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும். பொழுதுபோக்கு ஊடகங்களை கட்டுப்படுத்துதல், தரமான நன்னடத்தைகளை போதிக்கும் கல்வி முறையைக் கொண்டு வருதல், உண்மையான மதச்சார்பின்மையை நிலைநாட்டுதல் முதலான அம்சங்களை அரசியல்வாதிகள் கவனிக்க வேண்டும். இந்த சமுதாயம், குறிப்பாக கல்வி நிறுவனங்கள் மற்றும் பொழுதுபோக்கு ஊடகங்கள் – நமது தொன்மையான கலாச்சாரத்திற்கு உயிரூட்டுவதில் பெரும்பங்கு வகிக்கின்றது. தொழில் அமைப்புகள், சுற்றுப்புறச்சூழலைப் பாதிக்காத வண்ணம், இயற்கையின் சமநிலையைச் சிதைக்காத வண்ணம் தங்கள் தொழிலை நடத்த வேண்டும்.

இவையனைத்தையும் பரிசளித்தல், கௌரவித்தல் முதலான நேரிடையான செயல்கள் மூலமாகவும், தண்டனையளித்தல் முதலான எதிர்மறையான செயல்கள் மூலமாகவும் நடைமுறைப்படுத்த ஆள்பவர்கள் முனைய வேண்டும்.

நாட்டுப்பற்று என்பது, ஒரு நாட்டின் பாதுகாப்பு விஷயத்தில் மட்டுமோ அல்லது பாதகமான சூழ்நிலைகளின்போது மட்டுமோ வருவது அல்ல. கலாச்சாரம், சமயம், புனிதத்தன்மை முதலான ஒரு நாட்டின் தனித்துவத்தை காப்பதற்கான அனைத்து விஷயங்களிலும் தேசப்பற்று இருக்க வேண்டும். தேசப்பற்று, சில குறிப்பிட்ட நாட்களில் ஆணவத்துடன் கொண்டாடப்படும் வெற்று விழாக்களில் வெளிப்படுவது இல்லை. நாட்டின் உயிரோட்டமான கோட்பாடுகளை, அன்றாட வாழ்வில் ஒவ்வொரு நாளும் கடைபிடிப்பவர்கள் மூலமாகத்தான் தேசப்பற்று என்பது மேன்மையுடன்

வெளிப்படுகிறது. இந்தியாவின் அடிப்படைக் கோட்பாடு ஆத்ம விடுதலையே ஆகும். உண்மையான தேசப்பற்று உள்ளவன், அதற்காக போராடுகிறான். அவன் உண்மை அல்லது ஆத்மாவுக்காக வாழ்கிறான். உண்மை அல்லது ஆத்மாவை தளைப்படுத்துவது எதுவாயிருந்தாலும் அதை எதிர்த்து நிற்கிறான்.

**இரண்டாம் பாகம்**

## இந்தியாவைப் பற்றிய உண்மைகள்:

**இன்றைய இந்தியா படைத்துள்ள சாதனைகள் அனைத்துமே ஒருதலைப்பட்சமானவை; உலக அமைதிக்கான இந்தியாவின் பங்கும், இந்தியாவின் தனித்துவமும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இந்தியர்கள் அவர்களுடைய உண்மையான இயல்புக்கு, ஆற்றலுக்கு உரிய இடத்தைத் தர தவறிவிட்டனர். இந்தியாவின் இன்றைய தலைமுறைக்கு தங்களைத் தவிர, தங்களுடைய தொன்மையான தனித்துவத்தைத் தவிர - வானத்தின் கீழ் உள்ள மற்ற அனைத்து விஷயங்களும் போதிக்கப்படுகின்றன. நான் பல்வேறு ஆதாரங்கள் மூலமாக (ஏறக்குறைய அவையனைத்துமே வெளிநாட்டவர்கள் மூலம் ஆய்ந்து சொல்லப்பட்டவை) திரட்டிய இந்தியாவைப் பற்றிய குறிப்புகளின் தொகுப்பை இங்கே கொடுத்திருக்கிறேன். இத்தகவலைத் தந்த ஊடகங்களுக்கு எனது நன்றி.**

**ஆத்ம தேடலில் ஈடுபட்டுள்ளவர்கள், உலகியல் சார்ந்த முன்னேற்றங்களில் பின்தங்கி இருப்பர் என்று தவறாக நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்காகவே இந்த உண்மைகள் கொடுக்கப்பட்டுள்ளன.**

**உலக வரலாற்றில் பண்டைய இந்தியாவைப் பற்றி கொடுக்கப்பட்டுள்ள உண்மைகள்:**

**கீழ்க்காணும் தகவல்கள், 2006ல் வெளியிடப்பட்ட ஒரு ஜெர்மானிய பத்திரிகையில் கொடுக்கப்பட்டுள்ளன.**

- **இந்தியா நாம் உபயோகிக்கும் எண்களைக் கண்டுபிடித்தது.**

  - இருப்பு சார்ந்த எண்களின் மதிப்பு (Place value System) தசம அமைப்பு (Decimal System) இந்தியாவில் 100 BCயில் தோற்றுவிக்கப்பட்டன.
  - பூஜ்ஜியம் ஆர்யபட்டரால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆர்யபட்டர் 476 BC) தான் முதன்முலாக கோளவடிவிலான வான சாஸ்திரத்தை ஆய்வு செய்தவர். கிரகங்களின் இருப்பு நிலைகளையும், கிரகணப் புள்ளிகளையும், பூமியின் சுற்றளவையும் கணக்கிட்டவர்; ஹீலியோ சென்ட்ரிக் தேற்றத்தை கோபர்நிக்கஸீக்கு 1000 ஆண்டுகளுக்கு முன்பாகவே சொல்லியவர்.
- உலகின் முதல் பல்பலைக்கழகம் தக்ஷசீலத்தில் 700 BCல் நிறுவப்பட்டது.
  - 10500க்கும் மேற்பட்ட மாணவர்கள், உலகின் பல பகுதிகளிலிருந்தும் வந்து, 60க்கும் மேற்பட்ட துறைகளில் இங்கு தேர்ச்சி பெற்றார்கள்.
- 4ம் நூற்றாண்டு CEல் கட்டப்பட்ட நாலந்தா பல்கலைக்கழகம், பண்டைய இந்தியா, கல்வித்துறையில் படைத்த ஒரு மிகச்சிறந்த சாதனையாகும்.
- இந்தியாவின் சமஸ்கிருத மொழி, ஐரோப்பாவின் அனைத்து மொழிகளுக்குமான தாயாகும்.
  - கணினி மென்பொருள் தயாரிப்புக்கான மிகப்பொருத்தமான மொழி சமஸ்கிருதம். (ஜீலை 1987ல் ஃபோர்ப்ஸ் பத்திரிகையில் வெளியான அறிக்கையின் படி)
- மனிதர்கள் அறிந்து வைத்துள்ள மருத்துவ முறைகளிலேயே மிகவும் தொன்மையானது ஆயுர்வேதம்.
  - மருத்துவத்தின் தந்தை எனக் கூறப்படும் சரகர் 2500 ஆண்டுகளுக்கு முன் ஆயுர்வேதத்தை தொகுத்து அளித்தவர்.
- தற்போதைய இந்தியாவின் பிம்பங்கள் ஏழ்மையையும், முன்னேற்றமின்மையையும் காட்டினாலும், பிரிட்டிஷாரின் ஆக்கிரமிப்புக்கு, அதாவது17ம் நூற்றாண்டுக்கு முன்புவரை, உலகத்திலேயே மிகவும் பணக்கார நாடாக, பொருளாதாரத்தில் முதன்மை பெற்ற நாடாக இந்தியா விளங்கியது.

- கிறிஸ்டோபர் கொலம்பஸ், இந்தியாவின்மேல் கவனம் செலுத்தியது அதனுடைய பொருளாதார செல்வங்கள் பொருட்டே ஆகும்.

- நீர் வழியாக இடம்பெயர்தல் என்னும் முறை உருவானது சிந்துநதியில்தான். இது ஆரம்பித்தது 6000 வருடங்களுக்கு முன்பாக. புலன் பெயர்தலுக்கான ஆங்கில வார்த்தையான NAVIGATION என்னும் சொல் அதற்கான சமஸ்கிருத சொல்லான நவ்கதி என்னும் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். ஆங்கிலச் சொல்லான NAVY என்பதும் சமஸ்கிருத சொல்லான நவ் என்பதிலிருந்து தோன்றியதுதான். (புலன் பெயர்தலை அறிந்திருந்தாலும் இந்தியர்கள் பிற அண்டை நாடுகளை ஆக்கிரமிப்பு செய்வதிலோ, பிற கலாச்சாரங்களை சீரழிப்பதிலோ ஈடுபடவில்லை)
- வானவியல் விஞ்ஞானி ஸ்மார்ட்டுக்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே பாஸ்கராச்சாரியர், பூமி சூரியனைச் சுற்றிவர எடுத்துக்கொள்ளும் காலத்தை துல்லியமாகக் கணக்கிட்டு கூறினார்.
    - 5ம் நூற்றாண்டில் கூறப்பட்ட கணக்கின்படி, பூமி சூரியனைச் சுற்றிவர எடுத்துக்கொள்ளும் காலம் 365.258756484 நாட்களாகும்.
- பை (π) யின் மதிப்பு முதன்முதலில் கணக்கிடப்பட்டது புத்தாயனா என்பவரால்.
    - பிதாகரஸ் தேற்றம் என்று கூறப்படும் பொருளின் கருத்தை அவர் விளக்கியுள்ளார்.
    - ஐரோப்பிய கணிதவியல் மேதைகளுக்கு முன்பாகவே, ஆறாம் நூற்றாண்டிலேயே அவர் இதைக் கண்டுபிடித்துள்ளார்.
- அல்ஜீப்ரா, டிரிக்னாமெட்ரி, கேல்குலஸ் – இவையனைத்தும் உலகுக்கு கிடைத்தது இந்தியாவில் இருந்துதான் (ஆங்கில வார்த்தை களான Geometry மற்றும் Trignometry ஆகியவை சமஸ்கிருத சொற்களான ஜியோமிதி மற்றும் திரிகோணமிதி என்பவைகளிலிருந்து பெறப்பட்டவை.)
- கிரேக்கர்களும், ரோமானியர்களும் உபயோகித்த மிகப்பெரிய எண் ”106” ஆகும். ஆனால் இந்துக்கள், வேத காலத்திலே (5000

BCE) குறிப்பான தனிப்பட்ட பெயர்களுடன் 10 to the power of 53 என்னும் அளவுக்கு பெரிய எண்களை உபயோகித்து வந்துள்ளார்கள். அறிவியல் வளர்ந்துள்ளதாக கூறப்படும் இந்நாளில் கூட, நடைமுறையில் உபயோகப்படுத்தப்படும் மிகப்பெரிய எண் டேரா (10 to the power of 12 ) என்பதாகும்.

- 11ம் நூற்றாண்டிலேயே, ஸ்ரீதராச்சார்யரால் இருபடிச் சமன்பாடு (Quadratic Equation) சொல்லப்பட்டுள்ளது.
- அமெரிக்காவில் உள்ள மதிப்புமிக்க கற்களை ஆய்வு செய்யும் நிறுவனத்தின் (Gemological Institute of America) கூற்றுப்படி, 1896ம் ஆண்டுவரை உலகத்தில் வைரங்களுக்கான ஆதாரமாக இருந்தது இந்தியா மட்டுமே.
- பாசனங்களுக்காக கட்டப்பட்ட உலகிலேயே மிகவும் தொன்மையான நீர்பிடிப்புப் பகுதி மற்றும் அணை இருப்பது இந்தியாவின் சௌராஷ்டிரத்தில்.
- சதுரங்க விளையாட்டு (Chess) தோன்றியது இந்தியாவில். அது இந்தியாவில் அஷ்டபாதா மற்றும் ஷடரஞ்சா என்று அழைக்கப்பட்டது.
- இந்தியாவின் சுஷ்ருதர், அறுவை சிகிச்சைத் துறையின் தந்தையாவார்.
    - 2600 ஆண்டுகளுக்கு முன்பாகவே, அவரும் அவருடைய மருத்துவ விஞ்ஞானிகளும் சிக்கலான அறுவை சிகிச்சைகளான கருப்பை மேற்திறப்பு, கண் அறுவை, செயற்கை உறுப்புகள் பொருத்துதல், எலும்பு உடைவுக்கான சிகிச்சை, சிறுநீரக கற்களை அகற்றுதல், மிகவும் சிக்கலான அறுவை சிகிச்சைகளான ஒட்டுறுப்பு அறுவை (Plastic Surgery), மூளை அறுவை (Brain Surgery) முதலியவற்றை செய்துள்ளார்கள்.
    - அநஸ்திசியா (மயக்கம் தரும் மருந்து) வின் பயன்பாடு பண்டைய இந்தியாவில் நன்கு அறியப்பட்டுள்ளது.
    - அவர்களால் 125க்கும் மேலான அறுவை சிகிச்சை உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
    - உடற்கூறியல் (Anatomy), சரீர சாஸ்திரம் (Physiology), நோய்களின் மூலம் பற்றிய ஆய்வு (Etiology), கருவியல் ஆய்வு (Embryology), ஜீரணசக்தி, வளர்சிதைமாற்றம் (Metabolism),

மரபணுக்கள் (Genetics), நோய்யெதிர்ப்புத் தன்மை முதலியவை குறித்த அவர்களுடைய ஆழமான அறிவு பல ஏடுகளில் பதியப் பெற்றுள்ளது.

- பெரும்பான்மையான மனித சமூகம் காடுகளில் நாடோடி வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த போது, 5000 ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தியர்கள் சிந்து சமவெளியில் ஹரப்பா நாகரிகத்தைப் பெற்றிருந்தார்கள்.

## இந்தியாவைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய பிற உண்மைகள்:

- யோகமுறைகள் இந்தியாவில் தோன்றி 5000 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன.
- தற்காப்புக் கலைகள் முதலில் இந்தியாவில் தோற்றம் பெற்று பின்னர் புத்தமதத் துறவிகளால் ஆசியாவின் பிற பகுதிகளில் பரப்பப்பட்டன.
- வாரணாசி அல்லது காசி என்று அழைக்கப்படும் பட்டிணம் புத்தர் 500 BCயில் அங்கு சென்றபோது, "தொன்மையான நகரம்"என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுவே, உலகிலேயே மிகவும் தொன்மையான, ஆனால் தொடர்ந்து மக்களால் வசித்துவரப்படும் நகரமாகும்.
- தமிழகத்தில் தோன்றிய பரதநாட்டியம்தான் உலகிலேயே ஆவணப்படுத்தப்பட்ட நடனங்களில் மிகவும் பழமையானது. இது1500BCக்கு முந்தைய காலத்திலிருந்தே புழக்கத்தில் உள்ளது.
- 2500 ஆண்டுகளுக்கு முன்பாகவே, இந்திய விவசாயிகள் கரும்பு மற்றும் இன்னபிற பயிர்களை அடையாளம் கண்டு பயிரிட்டு வந்திருக்கிறார்கள். இந்திய மக்கள் 500BC காலகட்டத்தில் சர்க்கரை கட்டிகளை உருவாக்கும் முறையை கண்டுபிடித்தனர். அவர்களுடைய உள்ளூர் மொழியில், இந்த கட்டிகள் 'கண்டா'என்று அழைக்கப்பட்டன. ஆங்கிலத்தின் 'Candy'எனும் சொல்லுக்கு இதுவே மூலச் சொல்லாகும்.
- பண்டைய இந்தியர்கள் வேதியியலில் சிறந்த அறிவு பெற்றிருந்தனர். வர்ணக் கலவைகள், வாசனைத் திரவியங்கள், பஸ்மங்கள் (மருத்துவத் தேவைகளுக்காக) அவர்களால் தரமான முறையில் தயாரிக்கப்பட்டன.

- **ராஜா சந்திர வர்மாவால் டில்லியில் நிறுவப்பட்ட இரும்புத்தூண் துருப்பிடிக்காமல்** 1500 **ஆண்டுகளாக உள்ளது. உலோகங்களில் செய்யப்பட்ட இத்தகைய வேதியியல் வேலைப்பாடுகள், ஸ்டைன்லஸ் ஸ்டீல் கண்டுபிடிக்கப்படும்வரை, மேற்கத்தியவர்களுக்குத் தெரியாமலேயே இருந்தது.**
- 6 BC**யைச் சேர்ந்த கனடா, பரமணு** (atom) **மூலக்கூறுகளை** (Molecules) **உருவாக்குகிறது என்று ஆய்ந்து கூறினார். மேலும் மூலக்கூறுகளின்** (Molecules) **அடர்த்தி இடத்துக்கு, பொருளுக்கு ஏற்றார்போல் மாறுகிறது என்பதையும் கண்டுபிடித்தார். எனவே ஒரு பொருள், காற்றில் இருக்கும்போது இருப்பதைவிட, நீரில் எடை குறைந்து காணப்படுகிறது என்று கண்டுபிடித்தார். இவர் இந்த விஷயங்களைக் கூறியது ஆர்கிமிடிசுக்கும் முன்னால்.**
- **இந்தியாவின் பிரம்மகுப்தர்** (628AD) **எந்த முழு எண்ணையும் பூஜ்ஜியத்தால் வகுத்தால் கிடைப்பது எண்ணிலி** (Infinity) **என்று வரையறுத்துக் கூறினார்.**
- **முதன்முதலில் ஒரு மொழிக்கான இலக்கண வரைமுறைகளைத் தொகுத்தவர் இந்தியாவின் பாணினி** (6**ஆம் நூற்றாண்டு** BC) **ஆவார்.**

**இந்தியாவின் பங்களிப்பு குறித்த கூற்றுகள்:**

**“எண்கள் மூலம் எண்ணுவதைக் கற்றுக் கொடுத்த இந்தியர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். அது தெரியாமல் இருந்திருந்தால், எந்த ஒரு உபயோகமான அறிவியல் கண்டுபிடிப்பும் சாத்தியமாகியிருக்காது.”**

**-ஆல்பர்ட் எய்ன்ஸ்டின்**

**“இந்தியா மனித இனத்தின் தொட்டிலாகும். மனித மொழிகளின் பிறப்பிடமாகும். வரலாற்றின் தாயாகும். இதிகாசங்களின் பாட்டியாகும். பாரம்பரியத்தின் கொள்ளுப்பாட்டியாகும். மனித வரலாற்றில் நமக்கு மிகவும் மதிப்புமிக்க, மிகவும் பொருள் பொதிந்த விஷயங்கள் தோண்டி எடுக்கப்பட்டது இந்தியாவில்தான்.”**

**-மார்க்ட்வைன்**

**"ஒரு சிப்பாயைக்கூட தன் எல்லையைத் தாண்டி அனுப்பும் அவசியம் இல்லாமலேயே இந்தியா, சீனாவை, கலாச்சார ரீதியாக கடந்த 20 நூற்றாண்டுகளாக கைப்பற்றி அதிகாரம் செலுத்தியுள்ளது."**

**-ஹீஷூ, அமெரிக்காவுக்கான முன்னாளைய சீனப்பிரதிநிதி**

**"இந்தியா வேதங்களின் தேசம். இந்த குறிப்பிடத்தக்க வேதங்கள், பூரணமான வாழ்க்கைக்கு தேவைப்படும் சமயரீதியான கருத்துக்களை மட்டும் கொண்டிருக்கவில்லை. அவை, அறிவியலால் உண்மை என்று நிரூபிக்கப்பட்ட உண்மைகளையும் தங்களுக்குள் பெற்றிருக்கின்றன. மின்சாரம், கதிர்இயக்கம், மின்னணுவியல், ஆகாய விமானங்கள் இவையனைத்தும் வேதத்தை ஓதிய ஞானிகளுக்கு தெரிந்திருக்கின்றன".**

**-வீலர் வில் காக்ஸ்**

**"சமஸ்கிருத மொழி, அது எவ்வளவுதான் தொன்மையானதாய் இருந்தாலும், வியப்புக்குரிய ஒரு கட்டமைப்பைப் பெற்றுள்ளது: அது கிரேக்க மொழியைவிடவும் முழுமையானது: இலத்தீன் மொழியை விடவும் பிரமாண்டமானது: இவ்விரண்டு மொழிகளைவிடவும் அழகானது மற்றும் பரிசுத்தமானது."**

**-சர் வில்லியம் ஜோன்ஸ் (பிரிட்டிஷ் நாட்டவரான கீழ்த்திசை மொழிப்புலமையாளர், 1746-1794)**

**"பண்டைய இந்திய மருத்துவர்களின் அறுவை சிகிச்சை முறை துணிச்சலானது, நேர்த்தியானது. அவர்கள் அறுவை சிகிச்சைத் துறையில் ரைனோபிளாஸ்டி (Rhinoplasty - மூக்கு, காது முதலிய உறுப்புகளில் செய்யப்படும் அறுவை சிகிச்சை)-க்கென ஒரு கிளையையே வைத்திருந்தார்கள். இதைத்தான், ஐரோப்பிய அறுவை சிகிச்சையாளர்கள் தற்போது, உள் ஆய்ந்து பயன்படுத்தி வருகிறார்கள்."**

**-சர் W.ஹண்டர் (பிரிட்டிஷ் அறுவை சிகிச்சை நிபுணர், 1718-1783)**

"ஐரோப்பாவில் நிகழ்த்தப்பட்டவையாகக் கருதப்படும் பெரும் பாலான அறிவியல் முன்னேற்றங்கள், உண்மையில் இந்தியாவில் பல நூற்றாண்டுகளுக்கு முன் நிகழ்ந்தவை."
-கிராண்ட்டஃப் (பிரிட்டிஷ் வரலாற்று ஆய்வாளர்)

"இந்திய நகரங்கள் சுபீட்சத்துடன் பரந்து விரிந்திருக்கிருக்கின்றன. பயனிகளுக்காக நிறைய தங்கும் விடுதிகள் இருக்கின்றன. ஏழைகளுக்கு இலவசமாகவே மருத்துவ சேவை புரியும் மருத்துவமனைகள் உள்ளன. இங்கு விஹாரங்களும், கோயில்களும் பிரம்மிக்கத்தக்கபடி உள்ளன. மக்கள் அவர்களுடைய தொழில்களைத் தேர்ந்தெடுப்பதில் சுதந்திரம் பெற்றுள்ளனர். மக்களுடைய போக்குவரத்துகளில் எந்தத் தடைகளும் இல்லை. அரசு ஊழியர்களும், சிப்பாய்களும் சீராக ஊழியம் வழங்கப்படுகிறார்கள். மக்கள் மதுவுக்கு அடிமைப்படவில்லை. அவர்கள் வன்முறையை ஒதுக்குகிறார்கள். குப்த மன்னர்களால் வழங்கப்படும் மேலாண்மை சிறப்பானதாகவும், பாரபட்சமற்றதாகவும் உள்ளது."
-சீன யாத்திரிகர் ஃபா-ஹியான் (இரண்டாம் சந்திரகுப்த மௌரியரின் ஆட்சியின்போது கூறியது, 399AD -414AD)

"பொதுவாக இந்தியர்கள் படிப்பதிலும், எழுதுவதிலும், கணிதத்திலும் ஐரோப்பிய நாடுகளின் சாதாரண மக்களைவிட உயர்வான தேர்ச்சி பெற்றுள்ளார்கள்." -வாரன் ஹேஸ்டிங்ஸ்

"இந்தியாவின் மகத்தான நூல்களில், ஒரு பேரரசு பேசியிருக்கிறது – சிறிய விஷயங்களைப் பற்றியோ, முக்கியத்துவம் இல்லாத விஷயங்களைப் பற்றியோ அல்ல. அது பேசியிருப்பது வேறு ஒரு காலகட்டத்திலும், சூழ்நிலையிலும் சிந்திக்கப்பட்ட, நம்மை தற்போது ஆட்கொண்டிருக்கும் கேள்விகளைத் தீர்த்து வைக்கின்ற, மிகப்பெரிய, தெய்வீகமான, நிரந்தரமான, முதிர்ச்சியான ஒரு அறிவினுடைய குரலில்."
-ஆர். என். எமர்சன் (அமெரிக்க கட்டுரையாளர், 1803 -1882)

இந்தியா அதனுடைய சமயம் சார்ந்த கொள்கைகளில் மிகவும் தொன்மை வாய்ந்தது, வலுவானது என்று நம் அனைவருக்கும் தெரியும். இந்தியா அதனுடைய சமயம் சார்ந்த விஷயங்களில் வலிமையாக இருந்த காலகட்டங்களில் எல்லாம் அதே அளவுக்கு வாழ்க்கையின் மற்றைய அம்சங்களிலும் (அதாவது, பொறியியல் துறை, கணிதம், வானவியல், மருத்துவயியல், வேதியியல், இலக்கியம், மேலாண்மை, வணிகம் முதலியவை) வலுவான நிலையில் இருந்திருக்கிறது. நாம் நமது ஆன்மீகம் சார்ந்த வலிமைக்கு உரிய மரியாதையையும், அதற்குரிய இடத்தையும் கொடுத்தோமேயானால், மற்ற தரமான வாழ்வியல் முன்னேற்றங்கள், நிழல் போல்தானே தொடரும்.

உலகம் முழுதும் பயணித்த ஆங்கில வரலாற்றாய்வாளரும். செய்தி தொடர்பாளருமான மைக்கேல் வுட் (1948ல் பிறந்தவர்) தன்னுடைய 'The story of India'என்னும் நூலில் 'இந்த உலகில் பாரம்பரிய கலாச்சாரம் உயிரோடு இருக்கும் ஒரே இடம் தமிழ்நாடு ஆகும்' என்று குறிப்பிட்டிருக்கிறார். இதற்கு காரணம் தங்களுடைய தொன்மையான நம்பிக்கைகள், கலாசாரம், இசை, இலக்கியங்கள் இன்னபிற கலைகள் குறித்த முக்கிய குறிப்புகளை தமிழர்கள் நவீன உலகமயமாக்குதல்களுக்கும் இடையே பாதுகாத்து வந்துள்ளதுதான். ஆனால் இங்கு நாம் கவனிக்கவேண்டியது, அவர் உபயோகித்திருக்கும் வார்த்தை "உயிரோடு' என்பதாகும்: 'வளமாக இருக்கும் இடம்' என்று அவர் குறிப்பிடவில்லை.

உலகத்தில் தொன்மையும், மதிப்பும் மிக்க நமது கலாச்சாரம் ஏதோ ஒரு பகுதியில் 'உயிரோடு' இருப்பதால், இந்த தேசத்திற்கு பெருமை இல்லை. மனித நேயத்தையும், ஆத்ம விசாரத்தையும், அறிவு வளத்தையும் கொண்டிருக்கும் நமது நாகரீகம், அதன் உண்மையான பரிமானத்தில் இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் செழித்து வளர வேண்டும். நம் பாரம்பரியத்தை நாம் பேணிக்காக்க வேண்டும். இதன் பொருள், புதுமையை ஏற்றுக்

**கொள்ளக்கூடாது என்பது அல்ல. உதாரணத்துக்கு புதிய வகையான உடைகளை அணியலாம். ஆனால் அவை, காண்பவரை கூசிக் குறுகச்செய்யும்படி இருக்கக்கூடாது. இதையே நான் நமது பாரம்பரியம் என்று குறிப்பிடுகிறேன்.**

**புதுமைகள் சுற்றுப்புறத்தையும், மன நலனையும் சீர்குலைக்காத பட்சத்தில் நாம் அவற்றை ஏற்றுக் கொள்ளலாம். இது இந்தியாவுக்கு மட்டும் அல்லாமல், ஒட்டுமொத்த உலகத்துக்கும் நன்மை பயப்பதாய் அமையும்.**

## இந்தியாவின் பங்கு - மீளப்பெறல்:

மீளப்பெறுதல் என்பது செயல்பாட்டில் உள்ளது – வெறும் வார்த்தைகளில் அல்ல.

ஒவ்வொரு தனி மனிதனும் தனிப்பட்ட சிந்தனைளைப் பெற்றுள்ளான். ஒவ்வொருவரும் மாறுபட்டிருக்கும் பார்வைகளையும், கருத்துகளையும் கொண்டுள்ளனர். ஆனால் ஒவ்வொரு தனி மனிதனுடைய செயல்பாடும், 'மனித வர்க்கத்தின் மிகவும் பொதுவான அம்சங்கள்' என்னும் கோட்டைப் பற்றியதாய் அமைய வேண்டும். அந்த பொதுவான அம்சங்கள் யாதெனில்,

- இறை உணர்வை வளர்த்துக் கொள்ளுதல்,
- பிற உயிர்களிடம் பாரபட்சமற்ற மரியாதையை வைத்திருத்தல்,
- இயற்கையுடன் இயைந்து வாழுதல்.

ஒரு தனி மனிதன் மேற்குறிப்பிட்ட பொதுவான விதிகளின் அடிப்படையில் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்வானேயானால், அவன் உலக அமைதிக்கான தன் பங்களிப்பை செவ்வனே ஆற்றுகிறான் என்று பொருள். இது, செயல்முறைக்கு எளியதாகத் தோன்றுகிறது. ஆனால், இது செயல்படுத்தப்படுகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். பெரும்பாலான மக்கள், மனிதனுக்கு உரிய இந்த பொது விதிகள் வழி நின்றால், இந்த சமுதாயத்தில் அமைதியையும், மகிழ்ச்சியையும் நாம் காணலாம். இந்தியாவின் பொற்காலம், பெரும்பாலானவர்களை இந்த பொதுவிதிகளின் கீழ் கொண்டிருந்தது. ஏனெனில், அப்போதைய ஆட்சியாளர்கள், கீழ்க்காணும் காரணிகளின்பால் அக்கறை செலுத்தபவராய் இருந்தனர்.

**அக்காரணிகள்**:

1. **தரமான கல்வி** – **அதாவது, வெறும் பொருள் சார்ந்த வாழ்க்கையை மட்டும் கூறாமல் ஆத்ம விழிப்புணர்வு, அடிப்படை பண்பாடு, ஒழுக்கம் முதலியவற்றையும் போதிக்கும் முழுமையான கல்வி**.

2.**முறையான நீதி- அதாவது அனைவருக்கும் பொதுவான, நேர்மையான நீதி**.

3.**சரிசமமான வளர்ச்சி** – **அதாவது இயற்கைச் சமநிலைக்கும், பிற உயிரினங்களின் சுதந்திரத்திற்கும் ஊறு விளைவிக்காத வளர்ச்சி**.

**இந்தியாவையும், இந்த உலகையும் மீட்பதற்கு, ஆட்சியாளர்கள் மீண்டும் இந்த காரணிகளின்பால் அக்கறை செலுத்தவேண்டும்.**

**ஆட்சியாளர்களின் கவனத்துக்குரிய முக்கிய மூன்று விஷயங்கள்**

**உலக சகோதரத்துவத்தை வலியுறுத்தி சில வார்த்தைகளை எழுதியிருந்தேன். அவற்றை ஒரு மதிப்புமிக்க நபரிடம் காட்ட நேர்ந்தது. அது இந்தியா மிகவும் மோசமான ஒரு பூகம்பத்தை சந்தித்த நேரம். அந்த துயரச் செயல், இயல்பாகவே உலக நாடுகளின் பச்சாதாபத்தையும், உதவியையும் இந்தியாவுக்குப் பெற்றுத் தந்தது. இதைச் சுட்டிக்காட்டிய அந்த பெரியவர், உலகில் சகோதரத்துவம் நன்கு நிலை கொண்டிருப்பதாகவும், ஏற்கனவே வலிமையாக இருக்கும் மனித நேயத்தை வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறினார். சில மாதங்களுக்குள், அமெரிக்காவில் மிக மோசமான மனித நேயமற்ற வன்முறைச் செயல் நடந்தேறியது. அத்தருணத்தில் பலர், உலக தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கான முயற்சியில் அமெரிக்காவுடன் கைகோர்த்து நின்றனர். இந்த நிகழ்வுக்கு முன்பாகவே, தீவிரவாதத்தை ஒடுக்குவதற்காக, ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை நான் எனது எழுத்துக்களில் குறிப்பிட்டிருந்தேன்.**

ஆனால், இது மட்டுமே தீர்வு ஆகாது. தீவிரவாதத்தால் இன்னொரு துயரச்சம்பவம் நடக்காது என்று அறுதியிட்டுக் கூற யாராலும் முடியாது. இந்த சூழ்நிலையை, சேதமடைந்திருக்கும் ஒரு கப்பலுடன் ஒப்பிடலாம். நீர் கப்பலினுள் ஊடுருவிக் கொண்டிருக்கிறது. இப்போது உடனடியாகவும், ஒரே சமயத்திலும் செய்ய வேண்டிய விஷயங்கள் இரண்டு. 1. நீர் உள்ளே வருவதற்குக் காரணமாக இருக்கும் ஓட்டைகளை அடைப்பது. 2. ஏற்கனவே ஊடுருவியிருக்கும் நீரினை வெளியேற்றுவது. கப்பலின் ஓட்டைகளை அடைத்து சரிசெய்வதே தீர்வு. உள்ளேயிருக்கும் நீரை வெளியேற்றுவது என்பது கப்பலைக் காப்பதற்கான முயற்சியில் துணை நிற்பது. அதே நேரத்தில் அவசியமானதும் கூட. இதுபோலவே, உலகை மீட்பதற்கான ஒரே வழி, மனிதர்களை உருவாக்குதல் - சரியான கல்வி, சரியான எண்ணங்கள், முறையான வாழ்க்கை இவற்றைப் பெற்றிருக்கும் மனிதர்களை அதிக எண்ணிக்கையில் பெற்றிருத்தல். தவறு செய்பவர்களை தண்டிப்பது என்பது, உலக அமைதியைக் காப்பாற்ற துணை நிற்கும் செயல். அதே நேரத்தில் தேவையானதும் கூட.

மூன்றாவது விஷயம் சீரான முன்னேற்றத்தை செயல்படுத்துவதாகும். சீரான முன்னேற்றம் என்பது, நின்றிருக்கும் கப்பலை கரையை நோக்கி செலுத்துவதைக் குறிக்கிறது.

சீரான முன்னேற்றம் என்பது - இறை நிலையில் பற்று, உயிர்களிடம் மரியாதை, இயற்கையுடன் நட்பு - ஆகிய முன்னரே குறிப்பிடப்பட்ட பொது அம்சங்களோடு ஒத்திருக்கிற ஒட்டுமொத்த வளர்ச்சிகளையும் குறிப்பிடுகிறது.

இந்த மூன்று விஷயங்களும், உலகம் இருக்கும் மட்டும், ஆட்சியாளர்கள் தொடர்ந்து கவனம் செலுத்தி செயல்படுத்த வேண்டிய முக்கியமான அம்சங்கள்.

இந்த அம்சங்கள் நடைமுறைக்கு வரும்போது, தனிப்பட்டவர் வாழ்விலும், தேசத்தின் வாழ்விலும், உலகின் போக்கிலும்

**சுவாரஸ்யமான, விரும்பத்தக்க மாற்றங்கள் ஏற்படும். இதை நடைமுறைக்கு கொண்டு வருவதில் ஒவ்வொருவருக்கும் பங்கு உள்ளது. நாம் இணைந்து செயலாற்ற வேண்டி இருக்கிறது. சாமானியர்களாக நாம் செய்ய வேண்டியதெல்லாம், உலக நலனில் உண்மையாகவே அக்கறை உள்ளவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு, நமது இதயப்பூர்வமான ஒத்துழைப்பை வழங்குவது தான். இதை நாம் செய்தே ஆக வேண்டும்.**

**மீட்சிக்கான வழிகள் இங்கே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.**

**தரமான கல்வி:**

- **பள்ளிகளில், வாழ்க்கை நெறிக்கல்வி கட்டாய பாடமாக்கப்பட வேண்டும். இதில் தேர்ச்சி பெறுபவர்களே, அடுத்த வகுப்புக்கு அனுப்பப்படவேண்டும்.**
- **நமது கலாச்சரம் மற்றும் பாரம்பரிய பண்புகள் குறித்த அடிப்படைக் கல்வி பள்ளிகளில் போதிக்கப்படவேண்டும்.**
- **வாழ்க்கையின் நோக்கம் மற்றும் நமது தேசத்தின் குணநலன்கள் குழந்தைகளுக்குக் கற்றுத்தரப்படவேண்டும்.**

**முறையான நீதி**

***பொதுவான விதிகள்:***

  - **உண்மையான மதச்சார்பின்மை, பொதுவான விதிகள் பின்பற்றப்படவேண்டும்.**
  - **சுற்றுப்புறச் சூழலைக் காப்பாற்ற கடுமையான சட்டங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.**
  - **நீதிமன்ற நெறிமுறைகள் இன்னும் எளிமையாக்கப்பட வேண்டும்.**
  - **துரிதமாக நீதிகிடைக்கச் செய்ய வேண்டும்.**
  - **நீதிமன்றங்களின் ஆணைகள் நிச்சயமாக நிறைவேற்றப்பட வேண்டும்.**

***முறையான தண்டனைகள்:***

- போதுமான அளவிற்கு பாதுகாப்பு அமைப்புகள்.
- தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு கடுமையான நடவடிக்கைகள்.
- உலகத்தில் நிலவும் வன்முறைச் செயல்களை ஒடுக்க கூட்டு நடவடிக்கைகள்.
- இயற்கைச் சமனைச் சீரழிக்கும் விதத்தில் செயல்படும் தொழிற் சாலைகளையும், தனி நபர்களையும் தடுத்து நிறுத்துதல்(அ) தண்டித்தல்.
- சமயம் மற்றும் கலாச்சாரம் சார்ந்த விஷயங்களைக் கொச்சைப் படுத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கைகள்.
- பொழுதுபோக்குத்துறையில் கலாச்சாரத்தைக் காக்கும் வகையில் விதிமுறைகள் – அவற்றை மீறுபவர்களுக்கு உரிய தண்டனைகள்.
- மிருகங்களை வேட்டையாடுபவர்களுக்கும், காட்டு வளங்களை பாழாக்குபவர்களுக்கும் கடும் தண்டனைகள்.

## சீரான முன்னேற்றம்

*பாரம்பரியமான வழிமுறைகள்*:

- கலாச்சார நிகழ்வுகள், நாடு முழுவதும் தமது இயல்பான நற்பண்புகளுடன் நடத்தப்பட வேண்டும்.
- கிராமங்கள் தூய்மையுடனும், தமது நாகரிகம் கெடாமலும் திகழ முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.
- சமய வழிபாட்டுத்தலங்கள் தூய்மையுடனும், நித்திய வழிபாடுகளுடனும் நிலைநிறுத்தப்பட வேண்டும்.
- உலக அமைதிக்காவும், நன்மைக்காகவும் புராதணமான வழிபாட்டுச் சடங்குகள், சமய வழிபாட்டுத்தலங்களில் நடத்தப்பட வேண்டும்.
- ஆத்ம ஞானத்தைப் போதிக்கும் நூல்கள், அனைத்து சமய ஆலயங்களிலும் மக்களுக்காக வைக்கப்பட வேண்டும்.
- இயற்கையான விவசாயத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.
- விவசாயம் சார்ந்த தொழில்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

- காட்டு வளங்கள் மற்றும் விலங்குகள் உண்மையான தீவிரத்துடன் காப்பாற்றப்பட வேண்டும்.

*நவீன வழிமுறைகள்*

- தகவல் தொழில்நுட்பத்தை வளர்த்தல்
- போக்குவரத்துத் துறையில் முன்னேற்றம்
- நவீன பாதுகாப்பு முறைகளை வளர்த்துக் கொள்ளுதல்
- சுற்றுப்புற சுகாதாரத்தையும், இயற்கை வளங்களையும் பேணுதல்
- புதுமையான, பெரிய அளவிலான எரிபொருள் உற்பத்தி மையங்களை இயற்கைச் சமனைப் பாதிக்காத வகையில் பெற்றுக் கொள்ளுதல்.

நவீன தொழல்நுட்ப முன்னேற்றங்களைப் பொறுத்தவரையில், அவற்றின் முக்கியவத்துவத்தை நாம் ஏற்கனவே உணர்ந்துள்ளோம்; அவற்றை ஓரளவு செயல்படுத்தியும் வருகிறோம். ஆனால் தரமான கல்வி, முறையான நீதி, மனிதனின் பண்பினை செதுக்கி, சீராக்கும் புராதனமான வழிமுறைகள்- இவற்றைச் செயல்படுத்துவதில் மெத்தனமாய் உள்ளோம்.

தன்னை ஆளத்தெரிந்த ஒருவரால் இந்த தேசம் ஆளப்பட வேண்டும். அத்தகைய மனிதர்களை பாராளுமன்றத்திலும், சட்டசபைகளிலும், மக்களுக்காக செயல்படும் அரசு அலுவலகங்களிலும் பெற்றோமானால், உலகத்துக்காக தமது சிறப்புகளை இன்னும் திறமையோடு வெளிப்படுத்தும் ஒளிமிக்க இந்தியாவைப் பெறுவோம்.

இது இந்தியாவின் மீட்சி மட்டும் அல்ல. இது உலகத்தின் மீட்சி.

ஆட்சியாளர்கள் மட்டுமல்லாமல் தனியார் அமைப்புகளும், தனி நபர்களும் கூட இந்தியாவின் மீட்சிக்காக சுயமாக செயலாற்ற வேண்டியுள்ளது. அது இங்கே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தனியார் அமைப்புகளின் பங்கு**

1. **கல்விப்பணியில் ஈடுபட்டுள்ளோர், ஆத்ம விழிப்புணர்வு மற்றும் பண்பு சார்ந்த கல்வியைப் பள்ளிகளில் கொண்டு வருதல்.**
2. **பொழுதுபோக்குத் துறையினர், தரம் மலிந்த விஷயங்களைத் தவிர்த்தல்.**
3. **தொழிற்சாலைகள், இயற்கைச் சமனைப் பாதிக்காத வகையில் செயல்படுதல்.**

**தனி நபர்களின் பங்கு**

**ஆன்மீகம் சார்ந்த இந்திய கலாச்சாரத்தை கடைப்பிடித்தல்.**

**இந்திய கலாச்சாரத்தின் முக்கிய அம்சங்கள்: இறை உணர்வை வளர்த்துக் கொள்ளுதல், பிற உயிர்களுக்கு தீங்கிழைக்காதிருத்தல், இயற்கையோடு ஒத்துவாழ்தல், பெற்றோரை மதித்தல், ஒருவனுக்கு ஒருத்தி என்னும் நிலைப்பாட்டுடன் வாழ்தல்.**

**மேற்குறிப்பிட்ட பண்புகள், மனித சமுதாயம் முழுமைக்கும் பொதுவானதாக இருந்தாலும், அவற்றில் கடைசியாக குறிப்பிடப்பட்டுள்ள குடும்பம் சார்ந்த பண்புகள், இந்திய கலாச்சாரத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. ஏனென்றால், இந்திய கலாச்சாரம் குடும்ப வாழ்க்கைக்குரிய நெறிமுறைகளுக்கு எப்போதுமே முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. அந்த கடைசி இரண்டு நெறிகளும் – சமயங்கள் கடந்து அனைவராலும் மதிக்கப்பட்டு, பின்பற்றப்படுகின்ற மிகப் பொதுவான பண்புகளாகும்.**

**பெற்றோரை மதித்தல் என்னும் பண்பை இராமாயணக் காலம் தொட்டே, அதற்கும் முன்பிருந்தே நாம் கண்டும், கடைபிடித்தும் வருகிறோம். “ஒருவனுக்கு ஒருத்தி என்னும் நிலையோடு வாழ்தல்“ – இந்த பண்பும் இந்திய கலாச்சாரத்தின் ஒரு தனித்துவம்**

வாய்ந்த அடையாளமாகும். இந்த பண்பை, இந்திய கலாச்சாரத்தின் மகுடம் என்றுகூட சொல்லலாம். சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் இருந்தபோது, ஒருவர் சுவாமிஜியிடம் இவ்வாறு கேட்டார்: ”இந்திய கலாச்சாரத்தைப் பற்றி மிகவும் பெருமையாக, உயர்வாக கூறுகிறீர்களே, உங்கள் கலாச்சாரம் மேற்கத்திய கலாச்சாரத்தைவிட எவ்விதத்தில் உயர்ந்தது?” அதற்கு விவேகானந்தரின் பதில்: ”உங்கள் தாயைத்தவிர, பிற பெண்களை நீங்கள் மனைவியாக பார்க்கிறீர்கள். ஆனால் இந்தியன், தனது மனைவியைத் தவிர பிற பெண்மணிகளைத் தாயாக பாவிப்பான்.” இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியான டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறுகிறார்: ”சீதா தேவி, இந்திய பெண்மணிகளுடைய பண்பின் அடையாளம்.” எனவே, ஒருவனுக்கு ஒருத்தி என்னும் உறவுமுறைப்படி வாழ்வது என்பது, இந்திய கலாச்சாரத்தின் ஒரு முக்கிய பண்பாகும். இது பாலுணர்வை கட்டுக்குள் வைப்பதை மட்டும் குறிப்பிடவில்லை. மொத்த ஆசைகளையும் கட்டுக்குள் வைக்க வேண்டியதின் அவசியத்தையும் இது நினைவுறுத்துகிறது.

துரதிருஷ்டவசமாக, குடும்பம் சார்ந்த இந்த இரண்டு பண்புகளுமே, இந்தியாவில் இப்போது தடுமாற்றத்தில் உள்ளன.

தனியார் அமைப்புகளிலும், அரசு அமைப்புகளிலும், தனி மனித பண்புகளுக்கு மதிப்பளித்து, அவற்றை கடைபிடிக்கும் மனிதர்கள் அதிக அளவில் பணியாற்றும்போது, இயல்பாகவே இந்த தேசமும், உலகமும் சந்திக்கும் பிரச்சனைகள் பெருமளவு குறையும்.

## இந்த காலகட்டத்தின் தேவை:

**பள்ளிகளில் நன்னெறிக் கல்வி:**

“ஒரு பள்ளியைத் திறப்பவன் பல சிறைச்சாலைகளை மூடுகிறான்” என்னும் ஆங்கிலப் பழமொழி எப்பொழுது உண்மையாகும் என்றால், அவன் நன்னெறிக் கல்வியைத் தனது பள்ளியில் போதிக்கும் போதுதான். இன்றைய தினங்களில் அத்தகைய பள்ளிகளை நாம் காண முடிவதில்லை அல்லது அவற்றை அறிதாகவே காண முடிகிறது. பொதுவாகச் சொல்வதானால், இன்றைய பள்ளி, நன்னெறிகளைத் தவிர மற்ற அனைத்தையும் போதித்து, பல சிறைச்சாலைகள் திறக்கப்படுவதற்கு காரணமாக இருக்கிறது.

இங்கு, சிறை என்னும் சொல், செங்கற்களாலும், இரும்பாலும் கட்டப்பட்டுள்ள இறுக்கமான புற சிறைச்சாலைகளை மட்டும் குறிப்பிடவில்லை. இது, மலிவான உணர்ச்சிகளாலும், குறுகலான சுயநலமிக்க மனதாலும் மனிதன் தனக்குத் தானே ஏற்படுத்திக் கொண்டுள்ள மனச்சிறைகளையும் குறிப்பிடுகிறது.

உன்னதமான நன்னெறிக் கல்வியை அளிக்கும் முன்னோடிப் பள்ளிகளை, ஸ்ரீ பரமஹம்ச யோகானந்தர் குறிப்படுவது போல் ‘வாழும் முறை பள்ளிகளை’ நிறுவுவதே தற்காலத்தின் அவசரத் தேவையாகும். இப்பள்ளிகளுக்கு உரிய, தேவையான சூழ்நிலைகளை அளிப்பதும், அவற்றை உறுதிப்படுத்துவதும் நாம் செய்ய வேண்டிய முக்கிய பணிகளாகும்.

பள்ளிகளில் குறிப்பிடும்படியான அளவிற்கு, நமது நேரத்தையும் முயற்சிகளையும் நன்னெறிக் கல்விக்காக - உண்மையான கல்விக்காக - செலவிட வேண்டும்.

“நன்னெறிக்கல்வி”அல்லது “உண்மைக்கல்வி” என்னும் பெயரில் அனைத்துப் பள்ளிகளிலும், தனியாக ஒரு பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். குறைந்தபட்சம், முதலாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை இப்பாடத்திட்டம் செயல்படுத்தப்படவேண்டும்.

இந்த பாடத்தில் தத்துவார்த்தமான விஷயங்களும், நடைமுறை வாழ்க்கை சார்ந்த விஷயங்களும் இடம் பெற்றிருக்க வேண்டும். நன்னெறித் தேர்வுகள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தனித்தன்மையுடன் நடத்தப்பட வேண்டும். இத்தேர்வுகளில் சோதிக்கப்பட வேணடியது மாணவர்களின் தனி மனித ஒழுக்கமே – அவர்களுடைய புத்திக் கூர்மையோ அல்லது பொது அறிவோ அல்ல. நன்னெறிப் பாடத்தில் மோசமான செயல்பாடுள்ள மாணவர்களுக்கு தனிப்பட்ட கவனமும், அறிவுரைகளும் அளிக்கப்பட வேண்டும். இத்தகைய பாடத்திட்டம் அனைத்து மாணவர்களிடமும் மாற்றத்தை ஏற்படுத்திவிடாது என்று சிலர் வாதிடலாம். சிலருக்கு அது ஒவ்வாததாக இருக்கலாம் என்பதற்காக, ஒட்டு மொத்தமாக அனைவருடைய நலனையும் நாம் புறக்கணித்து விட முடியாது. சரியான கல்வியை தனது சந்ததியருக்கு கொடுக்கும் கடமை, இந்த சமுதாயத்தினருக்கு உள்ளது. தனது மூதாதையர்களுடைய உயரிய பண்புகளை அறிந்து கொள்ளும் உரிமை, குழந்தைகளுக்கு உள்ளது. இதையெல்லாம் நடைமுறைப்படுத்துவது என்பது எளிதான ஒன்று இல்லை என்பது உண்மை. ஆனால், அது இயலாத ஒரு இலக்கு அல்ல என்பதும் உண்மை. இச்செயல் நம்முடைய உண்மையான முயற்சிகளுக்கான தேவையையும், தகுதியையும் பெற்றுள்ளது.

ஞானம் மற்றும் அன்பாகிய விழிக் கமலங்களை மலரச் செய்யும் படியாக உள்ள நமது இந்திய கலாச்சாரத்தின் உயரிய பண்புகளைப் போதிக்கும் வகையில் இப்பாடத்திட்டம் வடிவமைக்கப்பட வேண்டும்.

குழந்தைகளின் பண்புகள், மனம் மற்றும் உடல் வளர்ச்சியைப் பாதிக்கும் காரணிகளில், பெற்றோர்களின் பங்கு மிகப் பெரியதாகும். ஆனால், பிரச்சனை என்னவென்றால் 90% அல்லது அதற்கும் மேலான பெற்றோர்கள், சமநிலைச் சீரான வாழ்க்கையை மேற் கொண்டிருக்கவில்லை. பண்பு நலன், மன நலன், உடல் நலன் குறித்த கல்வி அவர்களுக்கே தேவைப்படுகிறது. எனவே, அவர்களால் குழந்தைகளுக்கு ஏற்றதொரு சூழ்நிலைகளைத் தர முடிவதில்லை. பெற்றோரின் இந்த குறைபாட்டை சமுதாயம் நன்கு உணர்ந்துள்ளது. அதனால்தான், இந்த பொறுப்பை சமுதாயம் பள்ளிகளுக்குக் கொடுத்துள்ளது. நமது முன்னோர்களும், குருகுலக் கல்வி முறையின் மூலமாக இதையே செய்தார்கள். குருகுல ஆசிரியர்கள் நல்லொழுக்கம் என்ற அஸ்திவாரத்தை அனுசரித்து, பரந்த அறிவையும், வீரியத்தையும், திறமைகளையும் பெற்றிருந்தார்கள். ஆனால் தற்போதைய பெரும்பாலான ஆசிரியர்கள், நற்பண்புகள் எனும் அடிப்படையைத் தவிர்த்து, மற்ற எல்லாப் பாடங்களிலும் திறமை மிக்கவர்களாக இருக்கிறார்கள். உலகாயதமான கல்விகளில் திறமை பெற்றிருப்பதில் தவறொன்றும் இல்லை. ஆனால் குணநலன்கள் சார்ந்த விஷயங்களிலும் அவர்கள் முன்னோடிகளாக செயல்பட்டால்தான், குழந்தைகளிடமும் அத்தகைய பண்புகளை நாம் எதிர்பார்க்கமுடியும்.

தற்போதைய கல்வி முறை, முழுமையை அளிக்கக் கூடியதொரு மாற்றத்தை எதிர்நோக்கியுள்ளது. அந்த மாற்றம் எத்தகையதாக இருக்கவேண்டும் என்றால், நற்பண்புகளை உறுதியான அடித்தளமாகக் கொண்டுள்ளதாக இருக்க வேண்டும். உடல் ரீதியான, அறிவு ரீதியான, கலைப்புலன் சார்ந்த முன்னேற்றங்கள்

நமக்கு ஆனந்தத்தையும், அமைதியையும் தந்துவிடாது. நல்லொழுக்கமானது, தன்னம்பிக்கை மற்றும் இன்னபிற வலிமைகளையும் விட முக்கியமானது. பண்பு நலன், மற்ற எல்லாவிதமான நலன்களையும் விட முக்கியமானது.

பள்ளிகளும், ஆட்சி செய்பவர்களும் இந்த கல்வி முறையைக் கொண்டு வருவதற்காக மிகவும் சிரமப்பட வேண்டிய அவசியம் இல்லை. 'நன்னெறிப் பாடம்' என்று புதியதாக ஒரு பாடத்தை கொண்டு வருவது சாத்தியம் இல்லை என்று அவர்கள் கருதினால், அக்கருத்துகளை மொழிப் பாடத்திலேயே இடம்பெறச் செய்யலாம். தற்போதைய பள்ளிகள் அனைத்தும் - அவை எந்த பாடத் திட்ட முறையை பின்பற்றினாலும் (CBSE, Matric, சமச்சீர் கல்வி முறை) - ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட மொழிப் பாடங்களைப் பெற்றிருக்கும். இந்த மொழிப் பாடத்தில், நன்னெறி மற்றும் ஆன்மீகக் கருத்துக்களை இடம்பெறச் செய்யலாம். இந்த மொழிப் பாடத்தில், சில பொதுவான செயல்முறை வகுப்புகளை – பிராணாயாமம், எளிதான யோகாசானங்கள் முதலியன - கொண்டு வருவது, மிகுந்த பயனளிப்பதாக இருக்கும். மொழிப் பாடத்தையே, இவ்விதமாக நன்னெறிப் பாடமாக மாற்றலாம். நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களும், உலகில் உள்ள அனைத்து நாடுகளும், யாதாவதொரு மொழியை போதித்து வருகின்றன. அதன் மூலமாகவே மற்ற பாடங்கள் (அறிவியல், கணிதம் முதலியன) போதிக்கப்படுகின்றன. இந்த மொழிப் பாடம் என்பது நனனெறிகளும், ஆன்மீக சிந்தனைகளும் நிரம்பியதாக இருக்கட்டும். இயல்பாகவே, மாணவர்கள் அடுத்த நிலைக்கு அல்லது வகுப்புக்கு செல்ல தேர்ச்சி பெற வேண்டுமானால் அவர்கள் மொழிப் பாடத்திலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இவ்விதமாக, அனைத்து மாணவர்களுக்கும் நன்னெறிக் கல்வியை அழுத்தந்திருத்தமாக போதிக்க முடியும்.

தற்போதைய பாடத்திட்டத்தில் நன்னெறிக் கருத்துகளோ, ஆன்மீக கருத்துளோ இல்லை என்று கூறி விடமுடியாது. அவை இடம்

பெற்றிருக்கின்றன. ஆனால் மாணவர்களின் மனங்களைத் தொடும் அளவிற்கு, ஒரு தாக்கத்தைக் கொடுக்கும் அளவிற்கு இடம் பெற்றிருக்கவில்லை. நன்னெறி மற்றும் ஆன்மீக கருத்துகள் அளவிலும், பண்பிலும் குறிப்பிடும்படியான விகிதத்தில் அதிகமாக இடம் பெற்றிருக்க வேண்டும். இதை நாம் செய்ய முடியும் என்றால், இன்னும் அமைதியான, ஆனந்தமான ஒரு உலகத்தை நம்மால் காண முடியும்.

**நன்னெறிக் கல்வியின் விளைவுகள்:**

இக்கல்வியின் நோக்கம், அனைவரும் தங்களுடைய உண்மையான அடையாளத்தை – ஆத்ம அடையாளத்தை உணர்ந்து கொள்ள நியாயமானதொரு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்பதேயாகும். அவர்கள் அந்த வாய்ப்பை உபயோகப்படுத்திக் கொள்கிறார்களா, இல்லையா என்பது அவர்களுக்கும் ஆண்டவனுக்கும் இடையிலான விஷயமாகும். இந்த நன்னெறிக் கல்வியைப் போதிப்பதால், தங்களது பிள்ளைகள் சந்நியாசிகளாகி விடுவார்களோ என்ற அச்சம் பெற்றோர்களுக்குத் தேவையில்லை. ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையை தரமானதாகவும், திடமானதாகவும் மாற்றுவதே இக்கல்வி முறையின் பயனாகும். இதனால், அவர்களுடைய குடும்ப வாழ்க்கையும், சமுதாய வாழ்க்கையும் கூட தரமானதாகவும், உறுதியானதாகவும் மாறிவிடுகின்றன. எதிர்காலத்தில் அவர்களுடைய நிலை எதுவாக இருந்தாலும் - அது அமைதியும், நிம்மதியும், ஆத்ம ஆனந்தமும் நிறைந்த ஒன்றாக இருக்கும். இதைத்தானே நீங்கள் உங்கள் குழந்தைகளுக்காக விரும்புகிறீர்கள்?

**ஊடகவியலாருக்கு ஒரு வார்த்தை:**

நாம் உதாரணக் கல்வி முறையைக் கொண்டு வர முயற்சி செய்யும்போது, தவறான கல்வி புகட்டப்படாமல் தடுப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். இங்கு, வெவ்வேறு பரிமாணங்களிலும் செயல்படுகின்ற மக்கள் தொடர்பு ஊடகங்கள்,

கூட்டாக ஆற்ற வேண்டிய பங்கு உள்ளது. மக்கள் தொடர்பு சாதனங்கள், இளைய தலைமுறையினரிடம் நெருக்கமான உறவைக் கொண்டிருக்கின்றன. இளைய சமுதாயத்தினர் ஒளிக்காட்சிகளை மிகவும் ரசிக்கின்றனர். அவற்றைத் தங்கள் சொந்த வாழ்வில் பிரதிபலிக்க விரும்புகின்றனர். மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்னும் சிறுவன், உண்மையின் அடையாளமாக இருந்த ராஜா ஹரிச்சந்திரரின் கதையை ஒளிக்காட்சியாக, நாடக வடிவில் கண்டான். அதன் தாக்கமாக அச்சிறுவன், அவனுடைய காலகட்டத்தில் இன்னொரு ஹரிச்சந்திரனாகவே விளங்கினான். 20-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இன்னொருவன், ஒரு திகில் திரைப்படைத்தைக் கண்டான். அதன் தாக்கமாக தனது குடும்பத்து நபர்களையே கொன்றான். திரைப்படங்களும், மற்ற பொழுதுபோக்கு சாதனங்களும் இளைய சமுதாயத்தினரிடம் எந்த அளவுக்கு தாக்கத்தைச் செலுத்துகின்றன என்று பாருங்கள்.

சமூக ஊடகங்கள், ஒரு கதாநாயகனை பின்வருமாறு சித்தரிக்கின்றன. அவன் பாலியலுணர்வு மிக்கவனாக இருப்பான். ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட பெண் நண்பர்களைப் பெற்றிருப்பான்: அவனுடைய எதிரிகளை புஜபலத்தாலும் ஆயுதங்களாலும் எதிர் கொள்வான். அப்பாவி குழந்தைகள், தங்கள் வாழ்க்கையிலும் இதையே பின்பற்ற முனைகின்றனர். நாய்களுக்கும் பெண் நண்பர்கள் உண்டு; அவையும் புஜபலத்தோடு சண்டையிட்டுக் கொள்கின்றன. ஆயுதங்களையும், பலத்தையும் கொண்டு யார் வேண்டுமானாலும் மற்றவருடைய தலையை சிதறடிக்கச் செய்ய முடியும். ஆனால், தம்முள்ளே இருக்கும் மன்னிக்கும் குணத்தாலும், அமைதியாலும் எத்தனை பேரால் தீமையை விரட்டியடிக்க முடியும்? இப்பண்பு, அனைவராலும் விரும்பத்தக்க அழகான ஒன்று அல்லவா?

மலிவான உணர்ச்சிகளை உதாசீனம் செய்து, தனது மன உறுதிப்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் அனைத்து உள்புற மற்றும் வெளிப்புற காரணிகளையும் துணிச்சலோடு

எதிர்கொள்பவன் எவனோ, அவனே ஒரு உண்மையான கதாநாயகன் ஆவான். அவனுடைய ஆயுதங்களாவன: தன்னடக்கம், தன்னம்பிக்கை, மன்னிக்கும் மனம்.

மக்கள் தொடர்பு சாதனங்கள் மனித குல மேம்பாட்டிற்காக பெரிதும் வருந்தி உழைக்க வேண்டியது இல்லை; அவர்கள் செய்ய வேண்டியது எல்லாம் இதுதான். குரூரங்களையும், மலிவான எண்ணங்களையும் வீரம், காதல் என்னும் பெயர்களால் பரப்பாமல் இருப்பதுதான். முடிந்தால் இளைய தலைமுறைக்கு அவர்கள் இதைச் சொல்லட்டும் - வாழ்க்கை என்பது சதைகளையும் (பாலுணர்வு), காகிதங்ளையும் (பொருளாசை) தாண்டி மேலாக நிற்பது. மீண்டும், மீண்டும் மனித வாழ்வின் முடிவான குறிக்கோளையும், ஆரோக்கியமான உலக வாழ்வின் அவசியத்தையும், இயற்கையைப் பாதுகாப்பதற்கான தேவையையும், குடும்ப வாழ்விற்கான உயரிய கோட்பாடுகளையும் மக்கள் தொடர்பு சாதனங்கள் அறிவுறுத்திக் கொண்டே வந்தால், தற்காலம் பொற்காலமாக மாறத் தொடங்கும். அனைவருக்காகவும், அவர்கள் இந்தச் சேவையைச் செய்தால் மலிவான விஷயங்களுக்கும் மேலான, விலைமதிப்பற்ற பொக்கிஷங்கள் அவர்களை தாமே வந்தடையும்.

இவ்வாறாக, கல்வி நிறுவனங்கள் மற்றும் மக்கள் தொடர்பு சாதனங்கள் ஆகிய இவ்விரண்டும் உண்மையான நன்னெறிக் கல்வியை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

## இயற்கையுடன் இணக்கமான வாழ்வு:

"மிகவும் சொற்ப எண்ணிக்கையிலான நாடுகளே இயற்கையுடனான சம நிலையைப் பேணுகின்றன. சுமார் முப்பது நாடுகள், இச் சமநிலையை இழக்கும் மிக அபாயமான காலகட்டத்தில் உள்ளன. இந்தியாவும், அவற்றுள் ஒன்று". வானொலியில் இச் செய்தியை சில வருடங்களுக்கு முன் (1990 கள்) கேட்டேன்.

இயற்கை...

சுத்தமான நீர், விரிந்த கடல், இனிமையான- இதமான தென்றல், நீலவானம், பசுமையான நிலப்பரப்பு, தூய்மையான இதயம், மேலும் இதுபோன்ற பலவும் இயற்கையின் அங்கங்களே. தன் நிலை மாறாமல், மாசுபடாமல் இருக்கும் அனைத்துமே இயற்கைதான். என்னைக் கேட்டால் தூய்மை என்பது இயற்கையின் இன்னொரு பெயர் என்பேன்.

நான் இங்கு இயற்கை என்னும் சொல்லைப் பற்றி விவரிப்பதற்காக வரவில்லை; இயற்கைக்காகப் பேசவே வந்துள்ளேன். இயற்கை நமது தாய். நமது தாய் மிகுந்த பொறுமையையும், அன்பையும் பெற்றுள்ளாள். ஆனால், நாம் அவ்வாறில்லை.

எங்கு நோக்கினும் தூய்மைக்கேடு, கலப்படம். நாம், நமது சுயநலமான முன்னேற்றத்திற்காக நமது தாயையும், அவளுடைய மற்ற குழந்தைகளையும் கொடுமைப்படுத்தி வருகிறோம். அறிவியல், ஆராய்ச்சி, பாதுகாப்பு சோதனை, பொருளாதார வளர்ச்சி, நவீன வழிமுறை - இந்த பெயர்களால், நாம் நமது தாயை மௌனமாக கொன்று வருகிறோம்.

எந்த அறிவியல் மற்றும் பொருளாதார வளர்ச்சியும் நிகழக் கூடாது என்று நான் கூறவில்லை. நான் கூறுவது இதுதான் - அந்த வளர்ச்சிகள் இயற்கையோடு இயைந்து நடைபெற வேண்டும். மனிதனுடைய அழியக்கூடிய வளர்ச்சிக்கும், அழியக்கூடாத இயற்கை அன்னைக்கும் இடையே கருத்து வேறுபாடு தோன்றினால், இயற்கைக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

வெளிப்புற சூழலில் நிலவும் மாசுகளால், நம்முடைய உள்புற சூழலும் மாசடைந்துள்ளது. இதையே மாற்றியும் கூறலாம். நமது தாய் வெளிப்புற மாசுகளால் குறைவாகவே பாதிக்கப்பட்டுள்ளாள். அவள், நம்முள் நிலவும் மாசுகளால் படும் துன்பங்களே அதிகம். நாம் மலிவான ரசனைகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியிலும், அரங்குகளிலும் காண்கிறோம். மலிவான இசையைக் கேட்கிறோம். மலிவான இன்பங்களைத் தேடி அலைகிறோம். சுருங்கச் சொல்வதானால், நவீனம் அல்லது முன்னேற்றம் என்னும் பெயரில் மன அமைதியையும், மனத்தூய்மையையும் தொலைத்துக் கொண்டிருக்கிறோம்.

எதற்காக இந்த கீழ்த்தரமான ஆசைகள்? நமது இயல்பான வாழ்வை வாழ்வோம். (இதன் பொருள் – குகைகளிலும், காடுகளிலும் ஒளிந்து கொண்டு வசதிகளின்றி வாழலாம் என்பதல்ல, நாம் எங்கு வாழ்ந்தாலும், வெளிப்புற மற்றும் உள்புற தூய்மையோடு வாழவேண்டும். இதுவே, இயற்கையோடு இயைந்த வாழ்வு.) நாம் இயற்கையை எந்த விதத்திலும் துன்புறுத்தாமல் இருப்போமாக. இயற்கையோடு இயைந்த வாழ்வு, இயற்கைக்கு எதிரான வாழ்வு - இவ்விரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் நிலையில் நீங்கள் இருந்தால் முதலாவது விருப்பத்தை தயங்காமல் தேர்ந்தெடுங்கள் - இரண்டாவது விருப்பம் அதிகமான ஆதாயங்களைத் தருவதாக இருந்தாலும் கூட. இயற்கையை காயப்படுத்துவது என்பது நமது இயல்பு அல்ல. 'இயற்கையை காயப்படுத்தாமல் வாழவே முடியாது' என்று நாம் கருதுவதால்,

அச்செயலை நாம் நமது இயல்பாகவே மாற்றி விட்டோம். குறைந்த பட்சம், இயற்கைக்கு எதிரான நமது மாசு அளவை குறைத்துக் கொள்ளவாவது முயற்சி செய்வோம். இது, இயற்கையை காப்பதற்கு மட்டுமல்ல - நம்மை நாமே காத்துக் கொள்வதற்காகவும்தான். இயற்கை இல்லையேல், நாமும் இல்லை.

தொழில் நிறுவனத்தாருக்கு ஒரு வார்த்தை:

மிக அதிக அளவில் சுற்றுப்புறத்தை மாசுபடுத்தும் தொழிற்சாலைகள், பின்வரும் விஷயங்களைத் தீவிரமாக யோசிக்கவேண்டும்.1) சுற்றுப்புறத்தை சீர் குலைக்காமல் தொழில் செய்வதற்கான மாற்று வழிகள் உள்ளதா? அல்லது 2) அந்த மாசுகளை மிகவும் குறைப்பதற்கு ஏதேனும் வழிகள் உள்ளதா? இந்த இரு கேள்விகளுக்கும் நேர்மறை பதில்கள் இல்லாத பட்சத்தில், அவர்கள் தம் தொழிலையே மாற்றிக் கொள்வது உத்தமம். குறிப்பிடும்படியான அளவுக்கு இயற்கை சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் வரும் சொகுசான வாழ்வும், நூதனங்களும் மனிதர்களுக்குத் தேவை இல்லை. குளிர் சாதன அறையில் ‘சொகுசாக’ பல பிரச்சனைகளுடன் வாழ்ந்து சீக்கிரமாக இறப்பதை விட, எளிமையான வீட்டில் ‘ஆனந்தமாக’ பல காலம் வாழ்வது மேல்.

சாமானிய மக்களுக்கும் இயற்கையைப் பேணுவதில் முக்கிய பங்கு உள்ளது. சுற்றுப்புறச் சூழலுடன் ஆரோக்கியமான உறவு கொண்டிருக்க ஒவ்வொருவரும் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். இது ஒன்றும் கடினமானதொரு செயல் அல்ல. கீழ்க்காணும் விஷயங்களில் ஒவ்வொருவரும் தங்களது தனிப்பட்ட வாழ்வில் கவனம் செலுத்தினாலே, அதுவே மிகப்பெரிய முன்னேற்றத்தை சுகாதாரத்தில் ஏற்படுத்தும்.

× புகைபிடிப்பதன் மூலமாகவும், வாகனங்களில் அதிகப் படியாக புகை வெளியிடுவதின் மூலமாகவும், எச்சில் உமிழ்தல்

மூலமாகவும், மலம் கழித்தல் மூலமாகவும், பொது இடங்களை மாசு படுத்துதல் கூடாது.

× தமது இல்லங்களை, சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும் செயல்களால் மாசுபடுத்துதல் கூடாது. ஒவ்வொரு வீட்டிலும் உள்ள குப்பைகளும், அழுக்குகளும் அதற்குறிய இடங்களில் சேர்ப்பிக்கப்படவேண்டும் - பொது இடங்களிலோ, தெருக்களிலோ அல்ல.

× ஒவ்வொருவரும் நீர் நிலைகளை மாசுபடுத்தாமல் இருக்க வேண்டும்.

×ஒவ்வொருவரும் தமது பகுதிகளில் உள்ள மரங்களைப் பாதுகாக்க வேண்டும்.

×யாரும் பொழுது போக்குக்காகவோ, பணத்துக்காகவோ மிருகங்களைக் கொல்லுதல் கூடாது.

இயற்கையை நீங்கள் மாசுபடுத்தினால் அல்லது அதற்குக் காரணமாக இருந்தால், உங்கள் தாயின் தூய்மையைச் சீர்குலைக்கும் செயலைச் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை தயவு செய்து நினைவில் கொள்ளுங்கள். நமது தாயையும், அவருடைய அனைத்து குழந்தைகளையும் நேசிப்போமாக. நமது அன்பை எண்ணங்கள் மூலமாகவும், செயல்கள் மூலமாகவும் வெளிப்படுத்துவோமாக.

சுற்றுப்புறத்தை பேணுவதில் ஆட்சியாளர்களுக்கும் உரிய பங்கு உள்ளது. இயற்கை வளங்களை அவர்கள் காக்க வேண்டும். இயற்கை வளங்களைச் சுரண்டி, அதன் சமநிலையைப் பாதிக்கும் செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது அவர்கள் உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

# கடவுள் நம் தேசத்தில் உள்ளார் எனும் செய்தியைப் பரப்புங்கள்:

இந்தியாவின் ஆன்மீக இறையாண்மையை இயன்ற மட்டும் பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டு சேர்ப்பது என்னும் முடிவுக்கு வந்தேன். இவ்வாறு செய்வதன்மூலம் 'கடவுள் நம் தேசத்தில் உள்ளார்' (அதாவது, கடவுள் நம் ஒவ்வொருவரிடமும் உள்ளார்) எனும் செய்தியைப் பரப்ப முடியும். இதைச் செய்வதற்கு பல உபாயங்களை எண்ணிப் பார்த்தேன். கோயில்களில் ஆன்மீக புத்தகங்களை விநியோகிப்பது, ஆன்மீகப் பணிகளுக்கு நன்கொடை வழங்குவது, ஆன்மீக இதழ்களை பொது இடங்களில் மக்களின் பார்வைக்கும், கருத்துக்கும் வைப்பது - இவற்றைக் குறித்தெல்லாம் யோசித்தேன்.

இக்கருத்துகளை நடைமுறைப் படுத்துவது குறித்த சாத்தியக் கூறுகளைப் பற்றி சமூகத்தில் விவாதித்தேன். ஒவ்வொரு கருத்திலும், ஏதாவதொரு குறை இருக்கவே செய்தது. இந்த விவாதங்களின் மூலம் நான் உறுதி செய்த உண்மைகள் இரண்டு.

முதலாவது, மக்களுக்கு ஆன்மீகத்தில் இருக்கும் ஆர்வத்தைப் பற்றியது. பத்து அல்லது இருபது வருடங்களுக்கு முன்பு, ஆன்மீக அனுபவங்களில் அதிக நாட்டம் கொண்டவர்களால் கூட, அதற்கான சரியான வழிகாட்டுதல் மற்றும் அறிவு கிடைக்கப்பெறாத நிலை இருந்தது. இன்று, நாம் அனைத்து வழிகளிலும் முன்னேறி உள்ளோம். அனைத்து விதமான ஆன்மீகப்பெட்டகங்களையும் ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம் பெற்று விட முடியும். ஆனால் அந்த பொத்தானை அழுத்துவதற்குத் தான் யாரும் முன்வருவது இல்லை. நம்மில் பலரும் வேறு விஷயங்களின் பின் அலைந்து கொண்டிருக்கிறோம்.

எனவே, இந்தியாவின் அனைத்து ஆன்மீக நூல்களையும், ஒவ்வொரு வீட்டிலும் இலவசமாகவே நான் கொடுத்தாலும், அவர்கள் அந்நூல்களை பிரித்துப் பார்ப்பார்கள் என்பதற்கோ, அவற்றை கவனத்துடன் படிப்பார்கள் என்பதற்கோ எந்த உத்திரவாதமும் இல்லை. ஆதலால் வீட்டுக்கு வீடு விநியோகம் செய்யக் கூடிய செயல், ஆழ்ந்த கவனமும், சிந்தனையும் தேவைப்படுகின்ற ஆன்மீகப் பொக்கிஷங்களுக்கு ஏற்றது அல்ல. இருப்பினும் இத்தகைய ஆன்மீக நூல்களின் இருப்புத்திறனை அதிகமாக்குவதென்பது, ஆன்மீக உணர்வை பரப்புவதில் ஒரு நேர்மறையான நடவடிக்கையே ஆகும். இதை நாம் ஏற்கனவே பல இடங்களில், பலவிதமான வடிவங்களில் பெற்றுள்ளோம். எனவே, மிகவும் முக்கியமான கருத்துகளைச் சுருக்கமாக - உள்ளங்கை நெல்லிக்கனி போல் - அனைவரிடமும் பகிர்ந்து கொள்வது எனும் முடிவுக்கு வந்தேன்.

நான் கண்ட இரண்டாவது உண்மை என்னவென்றால், நன்னெறி மற்றும் ஆன்மீகக் கருத்துகள், சுய உதாரணங்களின் மூலம் நன்கு போதிக்கப்படுகின்றன. ‘உலகில் நீ காண விரும்பும் மாற்றமாக நீயே மாறிவிடு’ என்று காந்திஜி கூறியது இங்கு நினைவு கூறத் தக்கது. அன்பைப் போதிப்பதை விட, அன்பு செலுத்துவதினால் அது பல பேரைச் சென்றடைகிறது. தம்மைத் தாமே உணர்ந்து, தெய்வாம்சம் பொருந்தியவ்களாக இந்தியாவில் காலம் காலமாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஞானியர்களால் ‘கடவுள் நம் தேசத்தில் உள்ளார்’ எனும் செய்தி மௌனமாக பரப்பப்பட்டு வருகிறது. கடவுள் அனைவரிலும் உள்ளார் என்பதை நிருபிப்பதற்கு நாம் உண்மையில் மிகவும் கடினப்படவேண்டிய அவசியம் இல்லை. நம்முள் இருக்கும் தெய்வாம்சத்தை நாம் உணர முற்பட்டாலே போதுமானது. இங்கு முயற்சியே மிகவும் முக்கியமானது. விளைவு தானே நிகழும்.

‘கடவுள் நம் தேசத்தில் உள்ளார்’ என்பதை உணர்தல் ஒருவருடைய சமயம் சார்ந்தது. அது தனியொருவரின் சொந்த விஷயமாகும்.

'கடவுள் நம் தேசத்தில் உள்ளார்' என்பதை பரப்புதல் ஒரு இயக்கம் போன்றது. தம்முள் கடவுளை உணர்ந்த, உணர முற்படுகிற நபர்களே அந்த இயக்கத்தில் இடம் பெற்றிருக்க முடியும். இச் செய்தியை பரப்புவதற்கு அவர்கள் எந்தக் கூட்டத்தையும் கூட்டி சொற்பொழிவு ஆற்ற வேண்டியது இல்லை. அவர்களுடைய செயல்பாடுகளும், அவர்களைச் சுற்றி வீசும் நறுமணமுமே அந்த வேலையைச் செய்யும். இத்தகைய அர்ப்பணிப்புணர்வு உள்ளவர்கள் நமக்கு அதிகமாக தேவைப்படுகிறார்கள்.

ஆன்மீக விழிப்புணர்விலும், உலக நலனிலும் ஆழ்ந்த விருப்பம் உள்ளவர்களையே நான் 'அர்ப்பணிப்புணர்வு உள்ளவர்கள்' என்று குறிப்பிடுகிறேன்.

உலக நலனில் அக்கறை உள்ளவர்கள் என்பதை நிரூபனம் செய்ய ஒருவர் கீழ்க்காணும் ஐந்து நெறிகளை (இந்தியா பேசுகிறது என்னும் நூலில் சமயம் சார்ந்த கலாச்சாரம் எனும் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருப்பவை) கடைபிடிப்பவராக இருக்க வேண்டும்.

<u>இறை உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்:</u>

உங்களுடைய தெய்வீகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். இயல்பாகவே மனிதர்களும், மற்ற ஜீவராசிகளும் தெய்வாம்சம் பொருந்தியவர்கள் என்று அனைத்து குருமார்களும் கூறுகின்றனர். இந்த உண்மையை உணரும் சாத்தியக்கூறு மனிதர்களுக்கு அதிகமாக உள்ளது. எனவே, மனிதர்கள் தம்முள்ளும், புறமும் நிலவும் தெய்வீகத் தன்மையைப் பற்றி அறிந்து கொள்ள முற்படுபவராக இருக்க வேண்டும். ஒருவர் கடவுளின் இருப்பை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம்; ஆனால், யாராலும் கடவுள் தன்மை என்ற ஒன்றை மறுத்துவிட முடியாது. ஏனெனில், அது அனைவரின் உள்ளேயும் உள்ளது. அத்தன்மை, சிலரிடம் நிபந்தனையற்ற அன்பாகவும், சிலரிடம் ஆத்ம ஞானமாகவும், சிலரிடம் எளிமை, பணிவு முதலான பண்புகளாகவும் உள்ளது. மேலும், கடவுள் நம்பிக்கை உடைய ஒருவர், தனது நம்பிக்கையில் பொதிந்திருக்கும் உண்மையை

அனுபவமாய் உணர்ந்தவராயின், அவர் ‘இறை உணர்வு’, ‘கடவுள் தன்மை’ போன்ற சொற்களுக்கு, வேறு எவருக்கும் விளங்காத இன்னொரு விளக்கத்தை வழங்குவார். கடவுளை, நிலையற்ற அற்ப விஷயங்கள் பொருட்டு எங்கெங்கோ தேடுவதை விடுத்து, தம்முள் இருக்கும் கடவுள் தன்மையை, இறை உணர்வை வளர்த்துக் கொள்ள முயல வேண்டும். அவ்வாறாக முயல்பவர், ஒரு நாள் 'தாமே இறைவன்' என்பதைத் தெரிந்து கொள்வார். மனித வாழ்வின் முடிவான இலக்கே இதுதான். ” கடவுள் நம் தேசத்தில் உள்ளார் ” என்னும் செய்தி குறிப்பதும் இந்த முடிவான இலக்கைத்தான். இந்த இலக்கை ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு விதமாக அணுகுகிறார். இந்த தேடுதலுக்கான தீவிரம், நபருக்கு நபர் மாறி இருக்கிறது. தேடுதலுக்கான தீவிரம் உறுதியாக இருந்தால், தடைகள் யாவும் மறைந்துவிடும். தனது தெய்வீகத்தை ஒத்துக் கொள்ளுதல் என்னும் இந்த மரபு மனித குலத்தில் நிலவும் பலவிதமான எதிர்மறை எண்ணங்களை வேரறுப்பதில் முதன்மையானதாகத் திகழ்கிறது.

## உயிர்களுக்கு துன்பம் இழையாதிருங்கள்:

‘கடவுள் நம் தேசத்தில் உள்ளார்’ எனும் செய்தியைப் பரப்புவதில் ஆர்வம் உள்ளவர்கள், உயிர்களுக்கு தீங்கு இழைக்காதவர்களாக இருக்க வேண்டும். தமது சொந்த வாழ்வில் அஹிம்சையை கடைபிடிப்பதற்குச் சான்றாக, இயன்ற மட்டும் அவர்கள் சைவ உணவை மட்டும் உண்பவர்களாக இருக்க வேண்டும்.

## இயற்கையோடு இயைந்து வாழுங்கள்:

உலக நலனில் அக்கறை கொண்டவர், தன்னுடைய சுற்றுப்புற சுகாதாரதைப் பேணுபவராக இருக்க வேண்டும். இயற்கையான முறையில் விளைந்த பொருட்களை உபயோகப்படுத்துபவராகவும், அவ்வாறு செய்வதை ஊக்குவிப்பவராகவும் இருக்க வேண்டும். மரங்களைக் காப்பவராக இருக்க வேண்டும். இந்த நெறியை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக, ஊறு விளைவிக்காத ஒரு

மரக் கன்றை (குறைந்தபட்சம் ஒன்று), தனது இருப்பிடத்தில் நட்டு பராமரிக்க வேண்டும்.

அந்த மரக்கன்றின் நிலைமையே, அவருடைய அர்ப்பணிப்புணர்வை பறைசாற்றிவிடும். அந்த மரக்கன்று நன்றாக வளர்ந்து வந்தால், அவரும் தனது நெறிகளில் நல்ல முறையில் வாழ்ந்து வருகிறார் என்று பொருள். அம் மரக்கன்று நல்ல முறையில் வளரவில்லை எனில், அதன் பொருள், அவர் அம்மரக் கன்றை வளர்ப்பதற்காகவும், தனது ஆன்மீக முன்னேற்றத்திற்காகவும் மேலும் முயற்சிகள் செய்ய வேண்டும் என்பதாகும்.

<u>பெற்றோரை வணங்குங்கள்:</u>

உலக நலனில் அர்ப்பணிப்பு உள்ளவர்கள், மூத்த குடிமக்களை - குறிப்பாக பெற்றோரை மதிப்பவர்களாக இருக்க வேண்டும். தமது பெற்றோர், நியாயமான முறையில், மகிழ்ச்சியாக வாழ்வதை உறுதி செய்பவர்களாக இருக்க வேண்டும்.

<u>ஒருவனுக்கு ஒருத்தி எனும் நிலைப்பாட்டுடன் வாழுங்கள்:</u>

இறைச்செய்தியை பரப்ப விரும்புவர்கள், சட்டப்பூர்வமாகவும், நேர்மையின் அடிப்படையிலும் ஒருவருடன் மட்டும் இல்வாழ்க்கை நடத்துபவர்களாக இருக்க வேண்டும். வாழ்க்கைத் துணைகளை இஷ்டம் போல் மாற்றிக் கொள்பவர்களாக அவர்கள் இருத்தல் கூடாது.

உலக நலனில் நாம் செலுத்தும் கவனம், உண்மையானதாக இருக்க வேண்டும் என்றால், அதற்கு ஆதாரமாக நம்முள் உருவாகும் எண்ணங்களும் உண்மையானதாக இருக்க வேண்டும். உள்ளே எதிர்மறை எண்ணங்களை வைத்துக் கொண்டு, வெளியே உலக நலனில் அக்கறை உள்ளவர்களாக நடிப்பதால் பயன் ஏதும் இல்லை. தீராத வலிகளையும், நோய்களையும் உள்ளே மறைத்துக்

கொண்டு, மேம்போக்காக குணம் பெற்றவர்கள் போல் நடிப்பதைப் போன்றது இது.

எனவே, அர்ப்பணிப்புணர்வு உள்ளவர்கள், உலக நலனைப் போலவே ஆன்மீக விழிப்புணர்வில் தீவிர கவனம் செலுத்துபவர்களாக இருக்க வேண்டும்.

ஆன்மீக விழிப்புணர்வுக்கு சில அடிப்படைத் தேவைகள் இருக்கின்றன. இதைப் பற்றி ஆன்மீக நூல்கள் விரிவாக கூறியிருந்தாலும் முக்கியமான ஐந்து அம்சங்களை இங்கு காண்போம். அவையாவன: தூய்மை, ஸ்திரத் தன்மை (உறுதி), உண்மை, அன்பு மற்றும் சுய சோதனை. எண்ணங்களில் தூய்மை, தூய்மையில் உறுதி, உறுதியில் உண்மைத் தன்மை, அந்த உண்மையின் ஆணி வேராக சுயநலமற்ற அன்பு, இவையனைத்தையும் கண்காணிக்கும் சுய சோதனை.

சுய சோதனையே சோதனைக்குள்ளாகும் போது, இந்த பண்புகளை அறிவுறுத்தி, சுட்டிக் காட்டி, தவறுகளைத் திருத்தி வழி நடத்த தன்னை உணர்ந்த ஒரு குரு தேவை. அவர் எந்த மதத்தை சார்ந்தவராகவும் இருக்கலாம் -குருவுக்கான ஒரே ஒரு அளவுகோல், அவர் தமது தெய்வத் தன்மையை உணர்ந்தவராக இருப்பது மட்டுமே. தகுதியான குரு அமையாத பட்சத்தில் இறைவனையே குருவாக எண்ணி வழி நடத்துமாறு இறைஞ்சலாம்.

இவ்வாறாக, சுய சோதனை மூலமாகவும், அதற்கும் மேலாக குருபக்தி மற்றும் தெய்வ பக்தி மூலமாகவும் உள்ளத்தில் தூய்மை, உறுதி, உண்மை, சுய நலமற்ற அன்பு, முதலியவற்றை நிலைபெறச் செய்து, அகங்காரம் ஒழிந்து, தன் நிலையில் இருக்க முனைதலே ஆன்மீக விழிப்புணர்வின் அடிப்படையாகும். உலக நலனில் விருப்பம் (அன்பு வழி), ஆன்மீக விழிப்புணர்வில் நாட்டம் (ஞான வழி) - இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றில் உண்மையாய் இருந்தால் போதும்; மற்றொன்று தானே விளையும்.

இந்த நெறிகளில் எதுவும் புதியது அல்ல; காலம் காலமாக நடைமுறையில் இருந்து வருபவை. இந்த நெறிகள் அனைத்தையும் தனனார்வத்துடன் தனது வாழ்வில் கடைபடிப்பவர்கள், இந்தியாவின் செய்தியை பறை சாற்றுபவர்ளாக இருக்கிறார்கள். தமது உதாரண வாழ்க்கையின் மூலம் தன்னைச் சார்ந்து உள்ள பல பேரின் வாழ்க்கையை நல்ல முறையில் மாற்றியமைப்பவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். இதுவே 'கடவுள் நம் தேசத்தில் உள்ளார்' எனும் செய்தியைப் பரப்பும் உண்மையான வழியாகும்.

அத்தகைய அர்ப்பணிப்புணர்வு கொண்டவர்களில் ஒருவராக இருந்து இந்தியாவின் சிறந்த தொன்மையை பறை சாற்ற எப்போதும் முயற்சி செய்வேன்.

இந்தியா தனி நபர்களிடம் பேசுகிறது, தனி நபர்களின் ஆன்மீக மற்றும் வாழ்வியல் நெறிகளை மலரச் செய்ய முயற்சிக்கிறது. தனி நபர்கள் தங்களது கடமைகளை சரிவரச் செய்யும் போது, குழுக்களும் சரியாகச் செயல்படுகின்றன. ஆகையால், யாதாவதொரு வழியில் தனி நபர்களிடம் காலம் காலமாக இந்தியா பேசி வருகிறது.

சமூக மாற்றங்கள், பொருளாதார முன்னேற்றம், அரசியல் சக்தி இவையனைத்தும் இந்தியாவில் ஓரளவு எட்டப்பட்டுள்ளன. ஆனால், தனி நபர்களின் வாழ்வியல் நெறிகளும், ஆன்மீக நெறிகளும் கீழே சென்று கொண்டிருக்கின்றன. அதிகார பலம் கொண்ட சில தனி நபர்களின் பொருந்தாத கொள்கைகளினால், இந்தியாவின் குரல், பெரும்பாலான தனிநபர்களிடம் சென்றடையாமல் உள்ளது. அந்த சில தனி நபர்களால், இந்தியா தடம் மாறி பயனித்துக் கொண்டிருக்கிறது. தனி நபர்கள் திரும்பவும் தமது உன்னதமான, ஆன்மீக நெறிகள் சார்ந்த வழிக்கே திரும்ப வேண்டும்.

தனி நபர்களின் மாறாத இயல்பை நினைவூட்டுதலே, இந்நூலின் நோக்கமாகும். நான் குடும்பங்களிடமோ, கல்வி

நிறுவனங்களிடமோ, அரசியல் கட்சிகளிடமோ அல்லது வேறு குழுக்களிடமோ பேசும்போது உண்மையில் அக்குழுக்களில் உள்ள தனி நபர்களிடம்தான் உரையாடுகிறேன். இந்தியா தனது ஆன்மீகம் சார்ந்த கலாசாரத்தை, அர்ப்பணிப்புணர்வுள்ள தனி நபர்கள் மூலம் தக்கவைத்துக் கொள்ள விரும்புகிறது. உன்னதமான உலகத்தை உருவாக்குவதில் இந்தியாவின் பங்கு, இந்த ஆன்மீகம் சார்ந்த கலாசாரத்தை ஊக்குவிப்பதில் தான் உள்ளது.

ஒவ்வொருவரும் தமது தெய்வீகத் தன்மையை அடையாளம் கண்டு கொள்வதையும், கொண்டாடுவதையும் இந்தியா விரும்புகிறது. இதற்காக அவரவர் வழியில், அவரவர் முயற்சிப்பதை இந்தியா வரவேற்கிறது. சிலைகளையோ, பிற அடையாளங்களையோ நம்பியிருக்கிறீர்களா? அடையாளங்கள் ஏதும் இல்லாமல் வழிபடுகிறீர்களா? உணர்வு பூர்வமாக இறைமையை அணுகுகிறீர்களா? அல்லது அறிவு பூர்வமாக அணுகுகிறீர்களா? இவையனைத்தையும் ஏற்றுக் கொள்கிறீர்களா? அல்லது இதில் எதையும் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கிறீர்களா? எப்படி வேண்டுமானாலும் இருங்கள். ஆனால், யாதாவதொரு முறையில் தம்முடைய தெய்வத் தன்மையை உணர்ந்து கொள்ளவும், கொண்டாடவும் முயற்சி செய்து கொண்டே இருங்கள். தெய்வீகத்தை தம்மிடமும், எல்லா இடத்திலும் காண முயற்சி செய்து கொண்டே இருங்கள்.

இதுவே, உலகத்துக்கான இந்தியாவின் செய்தியாகும். இந்தியாவின் சமயங்களும், கலாசாரமும் இந்த தன்னறிதலைச் சுற்றியே பின்னப்பட்டுள்ளன.

தன்னை உணர்ந்தவர்களாலேயே அமைதியான குடும்பங்களும், இயற்கைச் சூழலும், அமைதியான உலகங்களும் அமைகின்றன.

**உன்னதமான மனிதர்களைப் பெறுவோம். உன்னதமான தேசங்களை உருவாக்குவோம். இந்த உலகை மேலும் ஒளி பெறச் செய்வோம்.**

**திருச்சிற்றம்பலம்**